Telephone No : 023-2250789/ Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.
Registered as a News Paper

# மன்னா

MANNA
மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை
மன்னா

பொழிவு - 16
குவிப்பு - 09
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
செப்ரம்பர் 2011
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communicatin Centre, Manna Paper Office, **St.Joseph's Road**, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/Fax No - 023-2250789, E.mail : nesanmnr@gmail.com.

# உண்மையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அணுக வேண்டும்

## மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கோரிக்கை



இலங்கையில் போரினால் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை ஆட்சியாளர்கள் உணர்ந்து, நீதியான அரசியல் தீர்வுத்திட்டத்தை வழங்க முன்வந்தால் மட்டுமே நாட்டில் நிலையான சமாதானத்தையும் ஐக்கியத்தையும் எதிர்பார்க்க முடியும் என்று மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அண்மையில் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியின்போது குறிப்பிட்டுள்ளார்.

ஆயர் அவர்கள் மேலும் கூறுகையில், உண்மையை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினையை அணுகி, மக்கள் சுதந்திரத்துடன் நடமாடும் சூழலை உறுதிப்படுத்த நாட்டின் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னைய ஆணைக்குழுக்களினால் எவ்வித பயனும் கிடைக்காத நிலையில் தற்போதைய கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் நடவடிக்கைகளும் பயனளிக்காது போய்விடக்கூடாது. இந்த ஆணைக்குழுவினால் மக்களுக்கு நன்மை கிட்டும் என்ற நம்பிக்கையுடனேயே அதற்கு ஒத்துழைப்பு வழங்கினோம்.

நாட்டை ஆள்பவர்களிடத்தில் மன ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டு அவர்களின் கவனம் மக்கள் பக்கம் திரும்பினால் மட்டுமே இந்த நாட்டில் உண்மையான சமாதானத்தை எதிர்பார்க்க முடியும் என ஆயர் அவர்கள் மேலும் தெரிவித்தார்.

## பொதுநிலையினர் பேரவைத் தலைவர்



அண்மையில் உருவாக்கப்பட்ட மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவையின் தலைவராக ஓய்வுபெற்ற மடு வலையக் கல்விப் பணிப்பாளர் திரு. ஜேக்கப் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
(தொடர்ச்சி 14ம் பக்கம்)


## திருத்தந்தையின் ஸ்பெயின் நாட்டிற்கான விஜயத்தின்போது



## புனித டொண் பொஸ்கோ இதோ நம்மைக் காண வருகின்றார்!

## புனித டொண் பொஸ்கோவின் திருப்பண்டம் தாங்கிய பேழை உலகெங்கும் பவனியாக வலம் வருகின்றது!

### மன்னார் மறைமாவட்டத்திற்கும் வருகின்றது!





சலேசிய துறவற சபையின் ஸ்தாபகரும் இளைஞர்களின் தந்தையென உலகெங்கும் போற்றப்படுபவருமான புனித டொண் பொஸ்கோவின் திருப்பண்டம் இறைமக்களின் வணக்கத்திற்காக உலகெங்கும் எடுத்துவரப்படுகின்றது. இத்திருப்பண்டம் முருங்கன் டொண் பொஸ்கோ இல்லத்திற்கும் மன்னார் மறைமாவட்ட பேராலயத்திற்கும் எதிர்வரும் கார்த்திகை மாதம் 25 வெள்ளிக்கிழமை மற்றும் 26 சனிக்கிழமை ஆகிய திகதிகளில் எடுத்துவரப்படுகின்றது. புனித டொண் பொஸ்கோவின் திருப்பண்டத்தைத் தரிசித்து இறையாசீர் பெற அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள்.

## தொழில் முயற்சியாண்மை முகாமைத்துவ விருது



மன்னார் மாவட்டம் முருங்கன் கிராமத்தைச் சேர்ந்த செல்வி மரியதாஸ் றொகானி கிறிஸ்ரலின் அவர்கள் பிரிட்டிஷ் கவுன்சில் அமைப்பினால் நடாத்தப்பட்ட தொழில் முயற்சியாண்மை முகாமைத்துவ விருதைப் (Entrepreneurship Management Award) பெற்றுள்ளார்.

ஒரு இலட்சம் ரூபா பணத்தொகையும், தங்கப் பதக்கமும், விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. மன்/ முருங்கன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியாகிய இவர் தற்போது பதுளை ஊவவெல்லச பல்கலைக்கழகத்தில் (Wvawellassa University) தொழில் முயற்சியாண்மை முகாமைத்துவ பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளார். (தொடர்ச்சி 14ம் பக்கம்)

## மன்னாரில் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி

மன்னார் மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி செப்ரம்பர் மாதம் 5ம் திகதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் கிளையாகவே இது தற்போது இயங்கிவருகின்றது.

இப்பயிற்சிக் கல்லூரியின் இணைப்பாளராக ஜனாப் எஸ். ஏ. ஹினாயத்துல்லா அவர்களும், உதவி இணைப்பாளராக திருமதி பயஸ் றதி பீரிஸ் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


'பயிற்றப்படாத ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்' என்னும் கல்வி அமைச்சின் நோக்கத்திற்கு அமைவாக இப்பயிற்சிக் கல்லூரி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்திருக்கும் பிராந்திய ஆங்கில உதவி மையத்தில் இப்பயிற்சிக்கல்லூரி தற்காலிகமாக இயங்கிவருகின்றது. 49 ஆசிரிய மாணவர்கள் தற்போது இதில் கல்வி கற்றுவருகின்றனர்.
(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கிறிஸ்தவ மாநாடு 2011

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் வருடாந்தம் ஏற்பாடு செய்யும் கிறிஸ்தவ மாநாடு கடந்த செப்ரம்பர் மாதம் 24ஆம் திகதி காலை 09.00 மணி முதல் மாலை 3.30 மணிவரை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்டத்தின் இவ்வாண்டு மையப்பொருளாகிய 'இளைஞர்களை' மையப்படுத்தி, "இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" என்ற தலைப்பில் இம்மாநாடு நடாத்தப்பட்டது. இரண்டு அமர்வுகளாக இடம்பெற்ற இம்மாநாட்டில் முதலாவது அமர்வு ஆயர் ஜெ. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் பெயரிலும், இரண்டாவது அரங்கு கிறிஸ்தவ எழுத்தாளரான புலவர் அடைக்கலமுத்து (அமுது) அவர்களின் பெயரிலும் இடம்பெற்றது. (தொடர்ச்சி 14ம் பக்கம்)

## மன்னார் மண்ணின் மகன் பிரான்சிஸ்கன் துறவற சபையில் குருவாக திருநிலைப்படுத்தப்படுகின்றார்



பிரான்சிஸ்கன் துறவற சபையைச் சார்ந்தவரும் (ORDER OF FRIARS MINOR) மன்னார் மறைமாவட்டத்தின் நானாட்டான் பங்கு பள்ளங்கோட்டைக் கிராமத்தைச் சேர்ந்தவருமான அருட்சகோதரர் அ. எட்வேட் ஜெயபாலன் (OFM) அவர்கள் ஐப்பசி மாதம் 27ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசப்பு ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப் படவுள்ளார்.

இவர் மன்னார் மறைமாவட்டத்திலிருந்து பிரான்சிஸ்கன் சபையிலே உருவாகிய இரண்டாவது குரு ஆவார்.

இவர் தனது முதல் திருப்பலியை ஐப்பசி மாதம் 29ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

பணிக்களத்தில் காலடி பதிக்கும் புதிய குருமணியை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது. இறையாசி வேண்டி நிற்கின்றது.

குருத்துவ அருட்பொழிவைப் பெறவிருக்கும் அருட்சகோதரர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களை 7ம் பக்கத்தில் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு

### அறிவோம் அனுபவிப்போம் அறிவிப்போம்

ஒக்ரோபர் மாதம் மறையறிவிப்பு ஞாயிறு தினம். இது "நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு தினம்" எனவும் இன்று அழைக்கப்படுகின்றது. இந்த மறையறிவிப்பு ஞாயிறு தினத்திலே சிறப்புக் காணிக்கை சேகரிக்கப்படுகின்றது. மறையறிவிப்புப் பணிக்காக தாரளமாக, ஏராளமாகக் கொடுக்கும்படி இறைமக்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

மன்னார் மறைமாவட்டத்திலே இந்த மறையறிவிப்பு நிதி சேகரிக்கும் விடயத்தில் இன்று அதிக அக்கறை காட்டப்படுகின்றது. உற்சாகமாக முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு பங்குத் திருச்சபையும் தம்மால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு இந்த மறையறிவிப்புப் பணிக்கு கணிசமான நிதிப் பங்களிப்பைச் செய்கின்றன. இலங்கையில் உள்ள மறைமாவட்டங்களிலே மன்னார் மறைமாவட்டம் இந்த மறையறிவிப்பு ஞாயிறு தின நிதி சேகரிப்பிலே முன்னணியில் திகழும் மறைமாவட்டமாக உள்ளது. இது வரவேற்கப்படவேண்டிய, பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

மறையறிவுப்பு ஞாயிறு தின முயற்சிகள் என்பது நிதி சேகரிப்பு மட்டுமல்ல என்பதை நாம் அனைவரும் நமது கவனத்தில் எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நமது மறையறிவிப்புக்கான - நற்செய்தி அறிவிப்புக்கான அழைப்பை நாம் ஆழமாக உணரவேண்டிய தினமாகவும் இத்தினம் உள்ளது.

நமது கிறிஸ்தவ அழைப்பு என்பதே நற்செய்தியை அறிவிப்பதற்கான அழைப்புத்தான். நற்செய்தி என்பது என்ன? இயேசுக்கிறிஸ்துவே நற்சசெய்தி. அவர் மொழிந்த வார்த்தைகளே நற்செய்தி. இந்த நற்செய்தியை முதலில் நாம் அறியவேண்டும். அதை அனுபவிக்க வேண்டும். பின்னர் அறிவிக்க வேண்டும். திருச்சபையினுடைய இருப்பின் நோக்கம் நற்செய்தி அறிவிப்பதுதான். திருச்சபையின் அனைத்துப் பணிகளும் நற்செய்திப் பணியையே மையமாகக்கொண்டுள்ளன. "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற். 16 :15) என்ற இயேசுவின் வார்த்தைகள்தான் நற்செய்திப்பணிக்கான நேரடியான ஆணையாகும்.

இந்த அழைப்பு திருமுழுக்குப்பெற்ற அனைவருக்கும் விடுக்கப்படும் அழைப்பாகும். இவ்வார்த்தைகளே திருச்சபைப் பணிகளின் உயிர் மூச்சு!

நற்செய்தி அறிவிப்பின் அவசியத்தை பவுலடியார் எந்தளவுக்கு உணர்ந்திருந்தார் என்றால், "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" என்று சொல்லும் அளவுக்கு அதை அவர் உணர்ந்திருந்தார். ஆம்! நற்செய்தி அறிவிப்பு என்பது ஒரு கிறிஸ்தவனைப் பொறுத்தவரை கட்டாயக் கடமையாகும். விரும்பினால் செய்யலாம் விருப்பமில்லாவிட்டால் விட்டுவிடலாம் என்பதல்ல.

பொதுநிலையினராகிய நமது நற்செய்திப் பணி என்ன? நம்முடைய முக்கியமான நற்செய்திப் பணி என்பது நமது வாழ்க்கைச் சாட்சியம் ஆகும்.

சீடன் குருவைப் பார்த்துக் கேட்டான், "போதிப்பவருக்கும் போதனையின்படி வாழ்பவருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?" குரு சொன்னார், "போதிப்பவர் ஒளியைக் கொண்டு வழிகாட்டுகிறவர். போதனையின்படி வாழ்பவர் ஒளியாக இருக்கிறார்" நமது ஒளி நிறைந்த வாழ்வு மற்றவருக்கு இயேசுவைப் பற்றி எடுத்துச்சொல்லிக்கொண்டே இருக்கும். அதனால்தான் இயேசு சொன்னார், "நீங்கள் மண்ணுலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" 5: 14).

நமது முன்மாதிரியான சாட்சிய வாழ்வுதான் நாம் மற்றவருக்குக் கூறும் நற்செய்தி ஆகும். இங்கே வார்த்தையால் அல்ல வாழ்வால் நாம் நற்செய்தியை அறிவிக்கின்றோம். அதனால்தான் ஒரு கிறிஸ்தவ அறிஞர் சொன்னார், "ஒவ்வொரு கிறிஸ்தவனும் 5வது நற்செய்தியாக இருக்கின்றார்". அதாவது திருவிவிலியத்தில் நான்கு நற்செய்திகள் உள்ளன. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய சாட்சிய வாழ்வினால் ஐந்தாவது நற்செய்தியாக மாற அழைப்புப் பெறுகின்றான்.

நற்செய்தி அறிவிப்பது நமது அடிப்படையான அழைப்பு என்றால் அது எந்தளவுக்கு வாழப்படுகின்றது என நாம் நம்மையே ஆய்வு செய்ய வேண்டும். அதற்குரிய அரிய வாய்ப்பாக இந்த மறையறிவுப்பு ஞாயிறு நம்மைநோக்கி வருகின்றது. எனவே நற்செய்தயை அறிவோம், அனுபவிப்போம், அறிவிப்போம்.

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*

**அன்புடன் - அருட்பணியாளர் தமிழ் நேசன்.**
பதிப்பாசிரியர் - மன்னா



# வாசகர் எண்ணங்கள்

### அழகான ஆக்கங்களைத் தருகின்றாய்

அன்பிற்கினிய தோழன் மன்னாவிற்கு,

மன்னார் எனும் வேதசாட்சிகளின் மண்ணிலே வேதப் பத்திரிகையாக வெளியாகிய நீ இன்று எல்லோர் இதயங்களிலும் உன் நிழல்களை ஆழமாகப் பதித்துவிட்டாய். ஆழமான அறிவுரைகளையும், அழகான ஆக்கங்களையும் நீ அள்ளித் தருகின்றாய். அதனால் நீ என் தோழியாகிவிட்டாய். நீ இன்னும் பல பக்கங்களிலே புது விடயங்களைத் தாங்கி வலம் வந்து அனைவரின் அபிமானத்தையும் வெல்லும் பத்திரிகையாய் தொடர்ந்து விளங்க எனது நல்வாழ்த்துக்கள்.

*செ. ஜெசி, மடுக்கோவில், மடு.*

### தேன் தமிழால் வாழ்த்துகிறேன்

தித்திக்கும் மன்னாவே தேன்தமிழால் வாழ்த்துகிறேன்.
வருக வருக என எதிர்பார்த்த கண்கள்
கனத்த குரலில் உன் கவிதைகளைப் படிக்கின்றன.
மாதம் ஒருமுறை மறக்காமல் வந்திடுவாய்.
வாசகர் எண்ணங்களை வகையாகத் தந்திடுவாய்.
வாழ்வு தரும் வார்த்தைகளை வாழ்க்கைக்குத் தந்திடுவாய்.
திருச்சபைச் செய்திகளைத் திகட்டாமல் தந்திடுவாய்.
கலை இலக்கியச் சாரலுடன் கவிதைகளும் கூடவே,
சிறுகதை என்ற சிறிய பறவையாய் பறந்தோடி வந்திடுவாய்.
சிறுவர் பொழிவு என்று சிறப்பாய் தந்திடுவாய்,
சிரிப்புக்கள் என்று சிந்திக்க வைத்திடுவாய்.
மாணவர் பகுதி என்று மறக்காமல் வந்திடுவாய்.
தித்திக்கும் தென்றலே தேன் சுமந்த பொற்குடமே,
வந்திடுவாய் மன்னாவே! வாழ்த்துக்கள் கூறுகின்றேன்!

*சக்திவேல் சர்மி,*
*வீரபுரம் நலன்புரி நிலையம், வவுனியா.*

### சமுதாய வளர்ச்சிக்கு வித்திடும் மன்னா

மன்னா பத்திரிகை தமிழ்கூறும் நல்லுலகில் தவறாது மாதாந்தம் வெளிவந்துகொண்டிருக்கிறது. மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க பத்திரிகையாக இது வலம் வருகின்றது. சமுதாயத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளில் இப்பத்திரிகை வித்திடுகின்றது. அரிய பல செய்திகளை அருமையாக வழங்குகின்றது. நமது மண்ணின் நல்ல நிகழ்வுகளை, ஏற்பாடுகளை வாழ்த்தி வரவேற்கின்றது. தற்போது புதிய பரிமாணத்துடன், அதிக பக்கங்களுடன் வலம் வருவது கண்டு உண்மையில் மனம் மகிழ்கின்றேன். இப்பத்திரிகை மேலும் வளர்ந்து அகில இலங்கை மட்டத்தில் வளர்ச்சி அடைய வேண்டும் என வாழ்த்துகின்றேன், வணங்குகின்றேன்.

*எஸ். றமேஸ், செயலாளர்.*
*வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்*

### உன்னை என்னவென்று சொல்ல?

என் வீட்டில் மலர்கின்ற மன்னாவே! எப்போது நீ மலர்வாய் என்று வழிமீது விழிவைத்துக் காத்திருக்கின்றேன். நீ மலர்வதால் என் உள்ளம் மலர்கின்றது. நீ மாதத்தில் ஒருமுறைதான் மலர்வாயா? இருமுறை மலரமாட்டாயா? மன்னாவே! உன்னை நான் எப்படிச் சொல்வது? ஆர்வமான செய்திகளை அன்பாகத் தருவதால் நீ என் தோழி என்பதா? மாணவர் பகுதியுடன் மணம்வீசி வருவதால் நீ என் ஆசான் என்பதா? சிறுகதைகளுடன் சிறகடித்து வருவதால் நீ என் பாட்டி என்பதா? கவிதைப் புனலோடு கருத்தூன்றி வருவதால் நீ என் கவிஞன் என்பதா? வாழ்வுதரும் வார்த்தைகளை வளமாகத் தருவதால் நீ என் தெய்வம் என்பதா? அன்போடு என்னை நீ அணைப்பதால் நீ என் தாய் என்பதா? நாற்பது ரூபாயின் மகிமை இப்போது புரிகிறது! உன்னை நான் என்னவென்று சொல்ல....?

*ஏ. அகிலா, எமில்நகர், மன்னார்.*

### ஐப்பசி மாதம் செபமாலை மாதம்

# செபமாலை - மண்ணுலகிலிருந்து விண்ணுக்கு செல்லும் கூழாங்கல்

*அருட்சகோதரி மேரி கனீசியா (செ.க)*

*"மரியா வழியாகவே இயேசுக்கிறிஸ்து நமக்கு எல்லா நன்மைகளையும் அளிக்கின்றார்"*
- புனித பெர்னாந்து

உலகம் மிக விரைவாக விஞ்ஞானத்தில் வளர்ச்சிபெற்று வருகின்றது. ஆன்மாவைப் பற்றிய சிந்தனையைவிட ஆனந்தக் களிப்பில் மூழ்கும் நிலையே இன்று காணப்படுகின்றது. புனிதத்தைவிட பூரிப்பில் காலம் களிக்கும் மனோநிலையே எங்கும் காணப்படுகின்றது. இத்தகைய வாழ்க்கையில் நம்மை நாமே பரிசோதிக்க, நமது வாழ்க்கையை அசைக்க, உலகின் பார்வையில் அற்பமான ஒன்றாக - ஆனால் விண்ணகத்தின் ஏணியாய் - வரும் கருவிதான் செபமாலை.

சக்தி கொண்டவனாய், பிரமாண்டமானவனாய், கவர்ச்சிமிக்கவனாய் தெரிந்த கோலியாத்தை, சக்தியற்றதாய், மிகச் சிறியதாய் தெரிந்த - தாவீதின் கையில் இருந்த சிறு கூழாங்கல் ஒரு நிமிடத்திலேயே வலிமையிழக்க செய்தது. இப்படிப்பட்டதொரு சிறிய கருவிதான் செபமாலை. இதுதான் அன்னை மரியாள் எமக்குத் தந்த மிகச்சிறிய அதேவேளை வலிமையுள்ள கருவி. இது விண்ணுலகிற்கு விரைந்து செல்லும் கூழாங்கல்!

"போர்களும், யுத்தங்களும் வெடித்தாலும் எமக்கு இந்த உலகில் ஒரே ஒரு சரணாலயமாக இருப்பது இறைவனின் இரக்கமே. இதற்கு வழி எம் அன்னை மரியா. முன்பைவிட இந்த 3ம் மிலேனியத்தில் அபார வளர்ச்சி கண்டுள்ள இவ்வுலகம் ஆன்மீகத்தில் பாரிய சரிவையே காணுகின்றது. ஏழைச் சிறுவர்களிடத்தில் அன்னை மரியா வேண்டியது இவ்வுலக செல்வாக்குகளை அல்ல செபத்தையும் தபத்தையுமே.

மினுமினுப்புக்கள், பரபரப்புக்கள் போன்றவை இவ்வுலகத்தின் சொத்துக்கள். ஆனால் எளிமை, நிம்மதி போன்றவை விண்ணுலகத்தின் சொத்து. இதை இவ்வுலகில் உண்டு பண்ணுவது செபமாலை.

விண்ணுலகக் கல்லை கையிலேந்தி வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிகொள்ள செபமாலை மாதமாகிய இம்மாதத்திலே அன்னை மீண்டும் எம் மனங்களிலேயே தரிசனமாகின்றாள்.

மரங்களிலிருந்து இலைகள் உதிர்வதுபோல பாவத்தால் மனிதர் நரகத்தில் விழுவதைக் காட்டிய அன்னை, நரக அக்கினி நம்மைத் தீண்டாமலிருக்க, விண்ணுலகை நோக்கும் எளிமையான ஆயுதத்தை தூக்கிப் பயன்பெற நம்மை அழைக்கின்றாள்.

விஞ்ஞான வளர்ச்சியால் தொலைவிலே உள்ள மனிதர்களோடு நாம் உறவுகொண்டு மகிழுகின்றோம். அதைவிட விண்ணுலகிற்கு அழைப்பை ஏற்படுத்தும் வலிமையுள்ள அதிவேகமான செபமாலையின் வழியாகப் பயன்பெற இக்காலம் நம்மை அழைக்கின்றது.

***"செபமாலைப் பக்தி முயற்ச்சியில் நாம் பங்கேற்கும் போது மரியன்னையின் அரவணைப்பில் நாமிருக்கிறோம்".***
*- திருத்தந்தை 13ம் சிங்கராயர்-*

செபமாலையின் வழி அன்னை மரியா எம்மை தம் திருமகனிடம் அழைத்துச் செல்லுகின்றாள். பரலோகத்தின் வாசலாயிருக்கும் எம் அன்னை எமக்காகத் தொடர்ந்து பரிந்துபேசுவாளாக!

### உண்மை உறைக்கும் கமிலஸ்




### சிரிக்க சிந்திக்க

**பேத்தி :** மின்னாமல் வருவான். முழங்காமல் போவான். அவன் யார்?
**பாட்டி :** சந்தேகமே இல்லை! அது மன்னார் மின்சாரம்தான்!

**செய்தி விமர்சனம்**
"மன்னாரில் எண்ணை வளம் பெறப்பட்டால் நாடு விரைவில் பொன்விளையும் பூமியாக மாறிவிடும்"
*கனியவள அமைச்சர் பெருமிதம் - செய்தி*
"1972ல் உங்கள் ஆட்சியில் மூன்று கோடி ரூபா செலவில் மூன்று கிணறுகள் தோண்டப்பட்டும் மசகு எண்ணைக்குப் பதிலாக மண் களி பெறப்பட்டதை நீங்கள் மறந்தாலும் நாங்கள் மறக்கவில்லை அமைச்சரே!"
*மக்கள்*
(நன்றி - காலச்சவடுகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கள் இடையில் நல்லுறவை வளர்க்கும் பணியின் அனுபவத்தை பெறுவதற்காக

# இலங்கை ஆயர்கள் தென்னாபிரிக்கா விஜயம்

## மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையும் பங்கேற்பு

இனங்களுக்கிடையில் நல்லுறவை வளர்க்கும் பணியின் அனுபவத்தை பெறுவதற்காக இலங்கை ஆயர் பேரவையின் பிரதிநிதிகளாக ஏழு ஆயர்கள் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தனர். யூலை 25ம் திகதி முதல் ஆகஸ்ட் 1ம் திகதி வரை நடைபெற்ற இவ்விஜயத்திலே ஆயர்கள் இராயப்பு யோசேப்பு, வியானி பெர்னான்டோ, வின்சன் பெர்னான்டோ, கரல் பெரேரா, நோபெட் அன்ராடி, கிங்சிலி சுவாம்பிள்ளை, தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைகள் பங்கேற்றனர்.

ஜொகனஸ்பேர்க் (நன்நம்பிக்கை முனை) டேர்பன் போன்ற பிரதான நகரங்களுக்கு இவர்கள் விஜயம்செய்து நிறவெறிக்கொள்கையால் தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட பிரச்சினையின்போது, இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தைக் கொண்டுவர உழைத்த பெரியார்களைச் சந்தித்து உரையாடல் நடத்தினார்க்ள். முதலில் எம் நாட்டின் இன்றைய நிலமையை ஆயர்கள் விபரித்து எவ்விதம் பெரும்பான்மையினரிடமிருந்து சிறுபான்மையினர் பிரிந்து நிற்கின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள்.

நீண்ட காலமாக வெள்ளையர், கறுப்பினர் என்ற கடுமையான பாகுபாட்டை வெள்ளையர் அரசு இராணுவ வல்லமையுடன் நடாத்தியது. காந்தி மகான் முதல் நெல்சன் மண்டேலா வரை பலர் இதற்கு எதிர்ப்புக் காட்டினர். அரசாங்கத்தின் அடக்குமுறை பற்றியும், 15 வருடங்களிற்குமுன் உண்மையான ஒப்புரவின் மூலமாக அவர்கள் மத்தியில் நிகழ்ந்த அற்புத நல் இணக்கத்தையும் அறியமுடிந்தது என இதில் பங்கேற்ற ஆயர்கள் கூறினார்கள்.

நீண்டகால துன்பம்மிக்க அடக்குமுறையினால் பாதிக்கப்பட்ட கறுப்பு, வெள்ளை இனத்தவர் தமது துன்பியல் நிகழ்வுகளை அச்சமின்றி வெளிப்படுத்தினர். ஒருவர் ஒருவரைத் தண்டிக்கவோ பழிவாங்கவோ அல்ல மாறாக ஏற்றுக்கொண்டு புரிந்துணர்வுடன் நடக்க முற்பட்டனர். இச்செயற்பாட்டால் இரு பகுதியினர் மத்தியிலும் நல்லிணக்கமும், புரிந்துணர்வும் ஏற்பட்டது. இதனால் இன்று இரு சமூகங்களும் ஓர்மனதுடன் புதிய தென்னாபிரிக்காவைக் கட்டியெழுப்ப முடிந்துள்ளது. இதற்காக உழைத்த அறிஞர்கள், சமூக நலவிரும்பிகள், கத்தோலிக்க ஆயர் பேரவை, கிறிஸ்தவ பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்ற பெரியவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களையும் அனுபவங்களையும் ஆயர்கள் கேட்டறிந்தனர். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மணிவிழாக் காணும் சிவஸ்ரீ சபா மனோகரக் குருக்கள் தம்பதியரை வாழ்த்துகின்றோம்!



மன்னார் மாவட்ட தலைமை இந்துக் குருவாகிய சிவஸ்ரீ சபா மனோகரக் குருக்கள் தம்பதியரின் மணிவிழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும் கடந்த 18.09.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் நகர மண்டபதில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட இந்துக்குருமார் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விழாவில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை, மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழ் நேசன் அடிகளார் உட்பட மதத்தலைவர்கள் பலரும் கலந்துகொண்டு குருக்கள் தம்பதியினரை வாழ்த்தினார்கள். மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா தனது நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றது.

## டோமினிக்கன் அருட்சகோதரிகளின் உயர் தலைவி மன்னார் வருகை



டோமினிக்கன் அருட்சகோதரிகளின் உயர்தலைவி அருட்சகோதரி ஜெசுசா இன்கென்கோ கடந்த புரட்டாதி மாதம் 1ம் திகதி மன்னாருக்கு வருகை தந்து, மன்னார் மறைமாவட்டத்தின் கீளியன்குடியிருப்பு பங்கில் உள்ள துள்ளுகுடியிருப்பு கிராமத்தைத் தளமாகக்கொண்டு பணியாற்றிவரும் டோமினிக்கன் அருட்சகோதரிகளைச் சந்தித்து அவர்களை உற்சாகப்படுத்தினார்.

இவரோடு இலங்கை டோமினிக்கன் சகோதரிகளின் மாகாணத் தலைவி அருட்சகோதரி பிரியந்தா பெர்னான்டோவும் வருகைதந்தார்.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த டோமினிக்கன் சபை உயர் தலைவி அவர்கள் உலகம் முழுவதும் பல நாடுகளில் பணிபுரிகின்ற டோமினிக்கன் அருட்சகோதரிகளை இவ்வருடம் முழுவதும் சந்தித்து குழுவாழ்வு, செபவாழ்வு மற்றும் அவர்களின் பணிகள் பற்றிக் கலந்துரையாடி கருத்துக்களைப் பகிர்வதன் ஊடாக வழிகாட்டல்களை வழங்கிவருகின்றார்.

அந்த வகையில் அவர் இலங்கைக்கும் வருகை தந்து ஒவ்வொரு இடங்களிலும் உள்ள அருட்சகோதரிகளைச் சந்தித்தார். அருட்சகோதரிகள் தமது இறைபணியை மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் தொடர்ந்து ஆற்றத் தேவையான வழிகாட்டல்களை வழங்கினார்.

உயர் தலைவியின் இந்த வருகை யுத்த காலத்திற்கு பின்னரான முதலாவது வருகையாகும்.

இவரது நற்பணி தொடரவும், இறைபராமரிப்பு வாழ்வில் சேர்ந்திருக்கவும் டோமினிக்கன் அருட்சகோதரிகளோடு இணைந்து மன்னாவும் வாழ்த்துகின்றது.

## செபமாலைக் கன்னியர் சபையின் 8வது பொதுச்சங்கம்

ஆசியாவின் ஒளிவிளக்கான வண. தந்தை தோமஸ் (அ.ம.தி) அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட்ட செபமாலைக் கன்னியர் சபையில் கடந்த காலங்களில் இறையருள் நிறைந்திருந்ததுபோல இவ்வருடத்திலும் இறைவனின் பாரிய வழிநடத்தல்கள் நடைபெறுகின்றன.

இச்சபையின் 8வது பொதுச்சங்க அமர்வுகள் 20.10.2011 தொடக்கம் 30.10.2011 வரையான காலப்பகுதியில் நடைபெறவுள்ளது. சமகாலத்தின் இழையோட்டங்களுக்கு ஏற்ப சபை புதுப்பிக்கப்பட, உயிரூட்டப்பட, இழந்ததைக் கண்டுபிடிக்க ஒரு வருட பாரிய ஆயத்தங்களையும் தியானங்களையும் இச்சபையினர் மேற்கொண்டுள்ளனர். திருச்சபையின் சட்ட முறைகளுக்கு ஏற்ப இச்சபையின் ஆன்மீகக்குரு அருட்தந்தை எட்வின் வசந்தராஜ் (அமதி) அவர்கள் இதற்கான ஆயத்த முயற்சிகளில் சகோதரிகளை நெறிப்படுத்திவருகின்றார்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## வவுனியாவுக்கு புதிய மறைக்கோட்ட முதல்வர்



வவுனியா மறைக்கோட்டத்தின் புதிய மறைக்கோட்ட முதல்வராக செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்திரு பெனோ அலக்சாண்டர் சில்வா அவர்கள் மன்னார் ஆயர் அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே வவுனியா மறைக்கோட்ட முதல்வராக இருந்த அருட்திரு. பி. கிறிஸ்துநாயகம் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரிக்கு விரிவுரையாளராகச் சென்றுள்ள நிலையில் இந்த புதிய நியமனம் பெனோ அடிகளாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய பணிப்பொறுப்பை ஏற்றுள்ள பெனோ அடிகளாரை மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது.

## அருட்தந்தை பிரான்சிஸ் குலாஸ் இறைபதமடைந்தார்



மன்னார் மறை மாவட்டத்தின் வங்காலைக் கிராமத்தின் முதற்குருவும் அமலமரித்தியாகிகள் துறவற சபையைச் சார்ந்தவருமான அருட்திரு அந்தோனி பிரான்சிஸ் குலாஸ் அடிகளார் கடந்த 22.09.2011 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள அமல உற்பவம் இல்லத்தில் இறைபதமடைந்தார்.

இவருடைய நல்லடக்க ஆராதனைகள் 24.09.2011 அன்று யாழ் மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்றது. யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற நல்லடக்கத் திருப்பலியில் பெருந்திரளான குருக்கள், துறவியர், இறைமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு அடிகளாருக்கு தமது இறுதி அஞ்சலியைத் செலுத்தினர்.

குலாஸ் அடிகளாரின் சொந்தக் கிராமமான வங்காலையில் இருந்து ஐந்து பஸ்களில் மக்கள் யாழ்ப்பாணத்திற்கு சென்று தமது இறுதி அஞ்சலியை தமது மண்ணின் மைந்தனுக்கு செலுத்தினர். மன்னார் ஆயர் மற்றும் குருக்களும் யாழ்ப்பாணத்திற்கு சென்று அடிகளாரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி, திருப்பலி ஒப்புக்கொடுத்து செபித்தனர்.

கடந்த மாத மன்னா பத்திரிகையில் அடிகளாரின் 60வது குருத்துவ விழா பற்றிய செய்தியைப் மன்னா பிரசுரித்திருந்தது. அடுத்த மாத மன்னாவில் குலாஸ் அடிகளார் பற்றிய விரிவான கட்டுரைகளை மன்னா தாங்கிவரும். அடிகளாரின் ஆன்மா இறைவனில் அமைதியடைவதாக! இவரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தவர்கள், அமதிகளின் குழுமம் ஆகியோருக்கு மன்னா தனது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

## முள்ளிக்குள மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி மௌன ஊர்வலம்








முள்ளிக்குளம் கிராம மக்கள் தங்களை தமது சொந்த இடத்தில் மீளவும் குடியமர்த்துமாறு கோரி மௌன ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர். மன்னார் செபஸ்தியார் பேராலய வளாகத்திலிருந்து மன்னார் கச்சேரிக்கு மௌன ஊர்வலமாகச் சென்று அங்கு மன்னார் அரசாங்க அதிபர் திரு. என். வேதநாயகனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இந்த மௌன ஊர்வலத்தை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஆரம்பித்துவைத்தார். சிலாவத்துறைப் பங்குத்தந்தை அருட்திரு. இராஜநாயகம் அவர்கள் ஆரம்ப உரையாற்றினார்.

இந்த ஊர்வலத்தில் முள்ளிக்குள மக்களோடு மன்னார் மறைமாவட்டத்தின் ஏனைய பங்கு மக்களும், குருக்கள், துறவியரும் பெருமளவில் கலந்துகொண்டனர். முள்ளிக்குள மக்களின் மீள்குடியேற்றப் பிரச்சினை தொடர்பான விளக்கக் கட்டுரை 8ம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு தரும் வார்த்தை

# பாவமும் அதன் விளைவுகளும்

## விவிலியப் பின்னணியில் ஓர் பார்வை!

திருமதி. என். லோஜி, நூறு வீட்டுத்திட்டம், மன்னார்.

ஆதாமின் வீழ்ச்சி, ஏவாளின் மீறுதல் மானிட இனத்துக்குள் பாவத்தை நுழைய வைத்தது. நீ உண்ணக்கூடாது என்று இறைவன் கொடுத்த கட்டளையை உணராது இறை அன்பையே தூக்கி எறிந்ததனால் வந்த விளைவு பாவம் என்ற கொடிய விஷம்.

இன்று மனிதன் பாவத் தன்மையையும் அதன் கொடுமையையும் விளைவுகளையும் அலட்சியப்படுத்தி வாழ்கின்றான். மனித பலவீனம் என்ற சாக்குப்போக்குகள் புகுந்துகொண்டு அதையே நியாயப்படுத்துகின்ற மனநிலையைக் காண்கின்றோம். பாவத்தின் விளைவுகளை உணராதவர் இறைவனின் இரக்கத்தையும் உணரமுடியாது. கல்வாரி மேட்டில் சிலுவையில் தொங்கி நம்மை மீட்ட இயேசுவின் பாடுகளை ஆழப்படுத்தி உணர்ந்து என் பாவமே இதை நிகழ்த்தியது என்று அறியும்போதுதான் நமது பாவத்தின் தன்மைகளைப் புரியமுடியும்.

### பாவம் என்பது என்ன?

பாவம் என்பது மீறுவது, இறைசட்டங்களை சிதைப்பது, மனச்சாட்சியின் குரலை மதிக்காமலிருப்பது, இறைவனை எதிர்த்து நிற்பது, இறைவழியைவிட்டு விலகி நிற்பது ஆகும். இறைவனின் இனிய குணத்தை ஏற்காமல் வழிதவறி வேறு குணத்தை நமதாக்குவது பாவம். இது ஆன்மாவில் உண்டாகும் புற்றுநோய் அல்லது இறைவனுக்கு எதிராக வாழ்கின்ற ஒரு வாழ்வு.

### விவிலிய ஒளியில் பாவம் பற்றிய புரிதல்

பாவம் செய்யும் அனைவரும் சட்டத்தை மீறுகின்றனர். சட்டத்தை மீறுவதே பாவம் (1 யோவான் 3:4).
கடவுளை விரும்புவதைவிட சிற்றின்பத்தை அதிகம் விரும்புதல் (2தீமொ 3 : 2-4).
தீச்செயல் அனைத்துமே பாவம் (1 யோ 5:17).
நன்மை செய்ய ஒருவருக்கு தெரிந்திருந்தும் அவர் அதை செய்யாவிட்டால் அது பாவம் (1 யாக் 4:17).
கூலியைக் கொடுக்காதிருத்தல் (இச 24:15).
மேட்டிமையான பார்வை, இறுமாப்பு கொண்ட உள்ளம் இவை பொல்லாரிடம் பளிச்சென்று காணப்படும் பாவங்கள் (நீதி மொழி 21:4)
ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் அப்பெண்ணுடன் விபச்சாரம் செய்தாயிற்று (மத் 5:28).
நேர்ச்சையை செலுத்த காலம் தாழ்த்துவது (இச 23:21).
உறுதியான மனநிலையோடு செய்யப்படாததெல்லாம் பாவமே (உரோ 14:23).
ஆள்பார்த்து செயல்படுவது பாவம் (யாக் 2:9).

### பாவம் - அதன் செயல்கள்

இறைவனுக்கு விரோதமானது - (உரோ 3:23).
எல்லோரும் இறைவனுக்கு விரோதி (இச 9:7,8).
எல்லோரும் இறையன்பிலிருந்து பிரிக்கப்பட்டவர்கள் (யோசு 1:18, எசா 59:1).
தொடக்க பாவம் பிளவை உண்டாக்கியது (தொ 3:1-4).
சிலைவழிபாடு பாவம் (வி.ப 32:31, எசாயா 31:7).
பொய்க் கடவுளுக்கு தூபம் காட்டுவது (எரே 44:23).
பில்லி சூனியம் செய்வது (1 சாமு 15:23).
சட்டத்தை மீறுவது (லேவி 16:16, 1யோ 3:4).

### பாவத்தின் விளைவுகள்

உனக்குள் பாவம் என்ன விளைவுகளை கொண்டுவரும் என்று உணர்ந்தால் நீ வாழ்வு பெறுவாய், ஒளி பெறுவாய் சில மருந்துகள் பல விளைவுகளை உடலில் உண்டாக்குவது போல பாவமும் பல விளைவுகளை கொண்டுவருகிறது. இதனால் உன் ஆன்மா நிம்மதி இழந்து, அருள் இழந்துபோகிறது. சோகத்துக்கு சொந்தமாகி ஆன்மாவையே இழக்கத் துணிகிறாய்.
பாவம் இறைவனைவனிடமிருந்து நம்மைப் பிரிக்கிறது (தொட 3:23, எசா 59:2).
விண்ணக உரிமையைத் தடுக்கிறது (1 கொரி 6:9, கலா 19 - 21, வெளி 21:27).
சாவைக் கொண்டுவருகிறது (தொட3:2, யாக்.1:15, எசே.18: 4).
இறைசினத்தை கொண்டுவருகிறது (இச 25:16, 1 அர 16:2).
இறைசாபத்தை கொண்டுவருகிறது (தொட. 3: 17,18).
கடின உழைப்பைக் கொண்டுவருகிறது (யோபு 14:1, தொட 3:16,19).
பிள்ளைப்பேற்றின்போது துன்பம் (தொட 3:16).
படைப்பை அழிவுக்கு உட்படுத்துகிறது (உரோ 8:2).
பஞ்சத்தைக் கொண்டுவருகிறது (எரே 5:24, 2குறி 6:26,28).
போரைக் கொண்டுவருகிறது (2குறி 6:36,39).
நோய்களைக் கொண்டுவருகிறது (தி.பா 38:3, 1கொரி 11:30).
தேசிய பிரச்சினைகளை வரவழைக்கிறது (நீ.மொ 14:34, எரே 8:14,16).
இறைத்தண்டனையை பெற்றுத்தருகிறது (எசா 13:11, லூக் 12:47, உரோ 2:8,9).
வருங்காலத் தண்டனை (மத் 18:9, 2 பேது 2:5,6).
பாவத்தை இறைவனால் மட்டுமே மன்னிக்க முடியும் (மாற் 2:7,வி.ப 34:7).

- பாவத்துக்கு கிடைக்கும் கூலி சாவு (உரோ 6:23).
சாவு பிரிவை, சோகத்தை, துயரத்தைகொண்டு வரும்.
- காணாமல் போகச் செய்யும் - என் மகன் இறந்துபோயிருந்தான் மீண்டு உயிர்பெற்று வந்துள்ளான். காணாமற்போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான் (லூக் 15:24).
- தண்டனைத் தீர்ப்பைக் கொடுக்கும் (யோவா 3:18).
- பழிகாரணாக்கும் - குடிமக்கள் எவனாகிலும் உன் மனைவியோடு படுத்திருந்தால் பழி எங்கள்மீதல்லவா விழச்செய்திருப்பாய் (தொட 26:10).
- அழிவில் ஆழ்த்தும் - செல்வத்தை சேர்க்க விரும்புபவர்கள் சோதனையாகிய கண்ணியில் சிக்கிகொள்கிறார்கள். அறிவீனமான தீமை விளைவிக்கக்கூடிய பல்வேறு தீய நாட்டங்களில் வீழ்ந்து விடுகிறார்கள். இவை மனிதரை கேட்டிலும் அழிவிலும் ஆழ்த்துபவை (1 தீமோ 6:9).
- முடிவில்லாத் தண்டனை - இவர்கள் முடிவில்லாத் தண்டனை அடையவும் நேர்மையாளர்கள் நிலைவாழ்வு பெறவும் செல்வார்கள் (மத் 25:46).
- அணையாத நெருப்பில் தள்ளும். மக்கள் பரத்தமையிலும் இயற்கைக்கு மாறான சிற்றின்பத்திலும் மூழ்கியிருந்தார்கள். ஆகவே அவர்கள் என்றும் அணையாத நெருப்பில் தண்டிக்கப்பட்டார்கள். அவர்கள் நமக்கொரு பாடமாய் உள்ளார்கள். (யூதா 1:7).
- அலகையின் இடத்துக்கு சொந்தமாக்கும் (நகரம்) - பின்பு இடப்பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து சபிக்கப்பட்டவர்களே என்னிடமிருந்து அகன்றுபோங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள் (மத். 25:41).
- நெருப்பு ஏரியே இருப்பிடம் - சாவும் பாதாளமும் நெருப்பு ஏரியில் எறியப்பட்டன. இந்த நெருப்பு ஏரியே இரண்டாம் சாவு. நெருப்பு ஏரிக்குள் சென்றுவிட்டால் அவர்களுக்கு உயிர்ப்பு இல்லை - மீட்பு இல்லை, மீண்டும் வாழ்வு இல்லை. நீ உணர்வாயா?

### பாவத்தின் குணங்கள்

ஒரு மனிதனுடைய குணத்தை வைத்துத்தான் அவனை நல்லவன் அல்லது கெட்டவன் என்று சொல்லுகின்றோம். கடவுளின் உன்னத குணத்தை வைத்துத்தான் அவர் பேரன்பு கொண்டவர் என்கிறோம். ஒவ்வொரு பொருளுக்கும்கூட ஒரு குணமுண்டு. இப்படி எந்த நிலையிலும் சூழலிலும் பார்த்தாலும் குணத்தைக் கொண்டு அதன் தன்மை நமக்கு புலப்படும். அதுபோலவே பாவத்திற்கும் ஒரு தன்மை குணமுண்டு. அதை உணர்ந்து இறைவன் பக்கம் திரும்புவோம்.

### சாபத்தைக் கொடுக்கும்

உன் மனைவியின் சொல்லைக் கேட்டு உண்ணக்கூடாது என்று நான் கட்டளையிட்டு விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டதால் உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டது. உன் வாழ்நாளெல்லாம் வருந்தி அதன் பயனை நீ உழைத்து உண்பாய் (தொ.நூ 3:17).

### வாசற்படியில் படுக்கும்

நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா? நீ நல்லது செய்யாவிட்டால் பாவம் உன்மேல் வேட்கைகொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடக்கி ஆள வேண்டும். (தொ 4:7).

### தொடர்ந்து பிடிக்கும்

நீங்கள் இதைச் செய்யாவிட்டால் நீங்கள் ஆண்டவருக்கெதிராகப் பாவம் செய்திருக்கறீர்கள் - உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிப்பது திண்ணம் (எண் 32:23).

பாவிகளைத் தீங்கு பின்தொடரும் (நீ.மொ 13:21).

சிலருடைய பாவங்கள் வெளிப்படையானவை. அவர்களுடைய பாவங்கள் தீர்ப்புக்காக அவர்களுக்கு முன்னே சென்று சேர்கின்றன. வேறு சிலருடைய பாவங்களோ அவர்களுக்கு பின்னே வந்து சேர்கின்றன (1 தீமோ 5:24).

### எலும்புக்குள் புகும்

நீர் கடுஞ்சினங்கொண்டதால் என் உடலில் நலமே இல்லை. என் பாவத்தால் என் எலும்புகளில் வலுவே இல்லை (தி.பா 38:3).

### முன்னே நிற்கும்

ஏனெனில் என் குற்றங்களை நான் உணர்கிறேன். என் பாவம் எப்போதும் என் மனக்கண்முன் நிற்கின்றது (தி.பா 51:3).

### சிக்க வைக்கும்

பொல்லார் நம் குற்றச் செய்களில் தாமே சிக்கிக்கொள்வர். தம் தம்பாவவலையில் தாமே அகப்பட்டுக்கொள்வர் (நீ.மொ 5:22).

# முழுமையான விடுதலையை ஆண்டவர் அளிக்கின்றார்



வாக்குறுதியின் நாடான கானானுக்குச் சென்றபோது ஆண்டவர் மோசேயிடம், "இஸ்ரயேல் மக்களுக்கு நான் கொடுக்கும் கானான் நாட்டை உளவு பார்க்க ஆள்களை அனுப்பு; மூதாதையர் குலம் ஒவ்வொன்றிலிருந்தும் அவர்களுள் தலைவனாயிருக்கும் ஒருவனை நீ அனுப்ப வேண்டும் என்றார். ஆண்டவர் கட்டளைப்படியே மோசே அவர்களைப் பாரான் பாலை நிலத்திலிருந்து அனுப்பினார்" (எண் 13:1-3).

நாற்பது நாள்கள் நாட்டை உளவு பார்த்தபின் அவர்கள் திரும்பிவந்தனர். அவர்கள் மோசேயிடம் கூறியது: "நீர் எங்களை அனுப்பிய நாட்டுக்கு நாங்கள் சென்றுவந்தோம்; அதில் பாலும் தேனும் வழிந்தோடுகின்றது. ஆயினும் அந்நாட்டில் வாழும் மக்கள் வலிமைமிக்கவர்கள்" (எண் 13:27-28). "இதைக் கேட்ட மக்கள் கூட்டமைப்பு முழுதும் உரத்தக் குரலில் புலம்பிற்று. மக்கள் அன்றிரவு அழுதுகொண்டே இருந்தனர். இஸ்ரயேல் மக்கள் அனைவரும் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தனர். மக்கள் கூட்டமைப்பிலுள்ள அனைவரும் அவர்களிடம், எகிப்து நாட்டில் நாங்கள் இருந்திருந்தால் எவ்வளவோ நலம்! இந்தப் பாலைநிலத்தில் மடிந்தால் அதுவும் நலமே! வாளுக்கு இரையாகும்படியா ஆண்டவர் எங்களை இந்த நாட்டுக்கு அழைத்து வந்திருக்கிறார்? நாம் எகிப்து நாட்டுக்குத் திரும்பிச் செல்வது நலமன்றோ? என்றனர்" (எண் 14:2-3).

ஆண்டவர் இஸ்ராயேல் மக்களுக்கு முழுமையான விடுதலை அளிக்க விரும்பினார். ஆனால் அவர்கள் அதைப் புரிந்துகொள்ளாமல் ஆண்டவருக்கு எதிராக முறுமுறுத்தனர். அடிமைத்தனத்தின் நாடான எகிப்துக்குத் திரும்பிச்செல்ல எண்ணினர். அவர்கள் உலகுசார்ந்த அல்லது உடலின் விடுதலையைக் குறித்துத்தான் சிந்தித்தனர். ஆன்ம விடுதலையைக் குறித்து அவர்களுக்கு எண்ணம் இருக்கவில்லை. திருவிவிலியத்தில் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்: "அடிமை நிலையில் ஆண்டவரால் அழைக்கப்பட்டவர் ஆண்டவர் வழியாய் விடுதலை பெற்றவர் ஆகிறார். அப்படியே விடுதலை நிலையில் அழைக்கப்பட்டவர் கிறிஸ்துவின் அடிமையாய் இருக்கிறார்" (1கொரி 7:22).

உலகுசார்ந்த விடுதலையைக் குறித்து மட்டும் சிந்திப்பவர்களால் இறைவன் அருளும் முழுமையான விடுதலையைக் குறித்துச் சிந்திக்க முடியாது. "அன்பர்களே, நீங்கள் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்; அந்த உரிமை வாழ்வு ஊனியல்பின் செயல்களுக்கு வாய்ப்பாய் இராதபடி பார்த்துக்கொள்ளுங்கள்" (கலா 5:13). ஏனென்றால் ஆண்டவர் இவ்வுலகில் மனிதனாகப் பிறந்தது நமது உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆன்மாவுக்கும் முழு விடுதலையைத் தருவதற்காகத்தான். "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது; ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக் 4:18 - 19). இந்த உண்மையைப் புரிந்துகொள்பவர்களால் மட்டும்தான் உண்மையான விடுதலையைத் துய்த்துணர இயலும். "உண்மையை அறிந்தவர்களாய் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் (யோவா 8:32). ஏனென்றால் உண்மையான விடுதலையை இயேசுக் கிறிஸ்துவால் மட்டுமே அளிக்க இயலும். மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்" (யோவ 8:36).

இயேசுவை அறியாதவர்களால், உலக சுகங்களில் மூழ்கி பாவத்திற்கு அடிமையாக வாழ்பவர்களால் இயேசு அருளும் உண்மை விடுதலையைத் துய்த்துணர இயலாது. அவர்கள் பழைய இஸ்ரயேல் மக்களைப்போன்று அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையோடு வாழ்வர். "மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக்கொள்ளவில்லை; மாறாகக் கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக்கொண்டீர்கள்" (உரோ 8:15). வரப்போகும் மாட்சியைப் பறைசாற்றுபவர்களாக வாழ வேண்டும். "படைப்பு அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய பெருமையையும் விடுதலையையும் தானும் பெற்றுக்கொள்ளும் என்கிற எதிர்நோக்கோடு இருக்கிறது" (உரோ 8:21).

இயேசுக்கிறிஸ்து அருளும் உண்மைச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வோம். "கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார். அதில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தளை எனும் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளாதீர்கள்" என்று திருத்தூதர் பவுல் கற்பிப்பதைக் கேட்போம் (கலா 5:1).

நன்றி - வசனோல்சவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னார் மறைமாவட்டச் செய்திகள்**

# கூத்துக் கலை மன்னார் மண்ணில் விசுவாசத்தின் கற்கை நெறியாக மாறியது

## – அருட்திரு ஜெரோம் லெம்பேட் அடிகளார் –



வீரத்தையும் காதலையும் கருவாகக் கொண்ட தமிழ் நாடக மரபில் சோகத்தையும் பக்தியையும் கொண்டுவந்தவர்களாக கத்தோலிக்கர் கணிக்கப்படுகின்றார்கள். புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூத்துக் கலையின் ஊடாகக் கொண்டுவந்தபோது அங்கே சோகமும் பக்தியும் அதிகமாகக் கலக்கப்பட்டது. கூத்துக்கலையானது மன்னார் மண்ணில் விசுவாசக் கற்கைநெறியாக மாறியது என ஞானோதயத்தின் இயக்குனர் அருட்திரு. ஜெரோம் லெம்பேட் (அமதி) அடிகளார் குறிப்பிட்டார். முருங்கன் கமத்தில் இடம்பெற்ற சந்தியோகுமையோர் நாடகத்தின் முதல் நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து உரையாற்றும்போதே அடிகளார் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கூறும்போது, மனித வாழ்வின் அவலங்களை மையப்படுத்திய துன்பியல் நாடகங்களாகவே கிரேக்க நாடகங்கள் அமைந்திருந்தன. இதன் தோற்றுவாய் கி. மு. 5ஆம் நூற்றாண்டு ஆகும். இவற்றிற்கு சமாந்திரமாக தமிழ் நாடகங்களை இனம்கண்டார் பேராசிரியர் கா. சிவத்தம்பி. கி. பி 3ம் நூற்றாண்டில் சங்ககால இலக்கியங்களில் தமிழ் நாடக அரங்கு மகிழ்வூட்டும் அரங்காகவே அமைந்திருந்தது. அரச அவையில் அரசனையும் அவையினரையும் மகிழ்வூட்டுவதற்காக இந்த நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. பாணர், கூத்தர் போன்றவர்கள் நாடக மாந்தர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் ஆடிய ஆட்டமும், பாடிய பாட்டும், இசையும் தமிழ் நாடக மரபின் தோற்றுவாயாக அமைந்தது. இந்தக் கூத்துமுறைமையும், அபிநயங்களும் கற்கைநெறியாக மாறி, ஆதீனமயப்படுத்தப்பட்டு சமூகத்தில் உள்ள மேல் மட்டத்தினரால் உள்வாங்கப்பட்டன. அப்போது இந்தக் கலைகள் இயல், இசை, நாடகமாக இசைவாக்கம் பெற்றன. தமிழ் மக்களின் குறியீட்டு கலை வடிவமாகிய பரதநாட்டியமாக இது பரிணமித்து மகிழ்ந்தது. வீரத்தையும் காதலையும் கருவாகக் கொண்ட தமிழ் நாடக மரபில் சோகத்தையும் பக்தியையும் கொண்டுவந்தவர்களாக கத்தோலிக்கர் கணிக்கப்படுகின்றார்கள். புனிதர்களின் வாழ்வை கூத்துக் கலையின் ஊடாக கொண்டுவந்தபோது அங்கே சோகமும் பக்தியும் அதிகமாகக் கலக்கப்பட்டது. கூத்துக்கலையானது மன்னார் மண்ணில் விசுவாகக் கற்கை நெறியாக மாறியது என்றார்.

## சிறுவர் விவிலியக் குழுப் பயிற்சி

விவிலிய மறைத்தூது ஆணைக்குழுவினால் தேவன்பிட்டி பங்கில் கடந்த 28.08.2011 ஞாயிறு தினமன்று மு. ப. 9.30 - பி.ப 2.00 மணிவரை சிறுவர் விவிலியக் குழுவிற்கான பயிற்சிகள் நடைபெற்றன. இப்பயிற்சிக்கு தேவன்பிட்டி கிராம சிறுவர் சிறுமியர் 70 பேர் பங்குபற்றி பயன்பெற்றனர்.

இப்பயிற்சியில் சிறுவருக்கான தியானம், விவிலியக் கதைகள், விவிலியப் பாடல்கள், விவிலிய வினா விடைப் போட்டிகள் நடாத்தப்பட்டதோடு பழைய ஏற்பாட்டின் யோசேப்பு தமிழாக்க விவிலிய படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

## வேப்பங்குளப் பங்கில் பொது மறைக்கல்வி





வேப்பங்குளப் பங்கில் மறைக்கல்வி மாணவரின் ஆன்மீக ரீதியான தாகத்தை வளர்க்கும் நோக்குடன் நடாத்தப்படும் பொது மறைக்கல்வி கடந்த 17.07.2011 அன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. றெஜினோல்ட் அடிகளார் கலந்து சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுத்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வை எமது பங்குத்தந்தை அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகளார் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து மாணவர்களின், மறையாசிரியர்களின் கலைநிகழ்வுகள் மேடையேற்றப்பட்டது. நிகழ்வுகள் முடிவடைந்ததும் பங்கைச் சேர்ந்த அனைத்து மறையாசிரியர்களையும் இயக்குனர் சந்தித்து சிறப்புக் கருத்துரை வழங்கினார். வேப்பங்குளப்பங்கில் 3 மாதத்திற்கு ஒருமுறை பொது மறைக்கல்வி இடம்பெற்று மாணவ்ாகளின் ஆற்றல்கள் வெளிக்கொணரப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

*தகவல் : எம். ஆர். றெஜினா, வேப்பங்குளம்.*

## இளைஞர்களுக்கான விவிலியக் கருத்தமர்வு



விவிலிய மறைத்தூது ஆணைக்குழுவும் இளையோர் ஆணைக்குழுவும் இணைந்து முன்னெடுத்த இளைஞர் விவிலிய கருத்தமர்வு ஒன்று மன்னர் மறைக்கோட்ட இளைஞர் யுவதிகளுக்கு தோட்டவெளி புனித வேதசாட்சிகள் அன்னை ஆலயத்தில் கடந்த 17.09.2011 சனிக்கிழமை மு.ப. 9.30 - பி.ப 5.00 மணிவரை நடாத்தப்பட்டது.

பழைய ஏற்பாட்டின் 'ஐந்நூல்', 'படைப்பின் கதை', 'இறைவாக்கினர்கள்', 'திருப்பாடல்கள்' என்னும் தலைப்புகளில் முறையே அருட்பணியாளர்கள் கிறிஸ்ரி ரூபன் பெர்ணான்டோ, ஜெயபாலன் குரூஸ், பிரான்சிஸ் யூட் அசிசி, டேவின் கூஞ்ஞு (தி.ச) ஆகியோரால் திறம்பட வகுப்புகள் எடுக்கப்பட்டன. பல்லூடாக எறியி (Multimedia Presentation) துணையுடன் நடாத்தப்பட்ட இந்த இளைஞர் விவிலியக் கருத்தமர்வில் மன்னார் மறைக்கோட்ட பங்குகளிலிருந்து 97 இளைஞர் யுவதிகள் பங்கெடுத்துப் பயன்பெற்றனர்.

## பெரிய குஞ்சுக்குளப் பங்கில் இளைஞர் ஆண்டு சிறப்புக் கலைநிகழ்வும் தையல் கண்காட்சியும்



இளைஞர் ஆண்டை முன்னிட்டு பெரிய குஞ்சுக்குளம் புனித அங்காமத்து அன்னை ஆலயத் திருவிழா 08.09.2011 அன்று மாலை 7.00 மணிக்கு ஆலய முன்றலில் பங்குத்தந்தை அருட்பணி லக்ஸ்ரன் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக அருட்பணியாளர்கள் அகஸ்ரின் புஸ்பராசா, அன்ரன், அருள்ராஜ், ஜெகானந்தன், கியூபேட் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக பெரிய குஞ்சுக்குளப்பங்கில் பணியாற்றிய அருட்பணியாளர்கள் சீமான் மரியதாசன், லக்கோன்ஸ் பிகராடோ, முரளிதரன், செல்வநாதன் பீரிஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்விலே பெரிய குஞ்சுக்குளம், தாழ்வுபாடு, வவுனியா, முருங்கன் ஆகிய பங்குகளின் இளையோர் 'தியாக தீபங்கள்' நாட்டுக்கூத்து, நடனங்கள், கிறிஸ்தவ கானங்கள், நகைச்சுவை நாடகம், "தொட்டப்பா" போன்ற கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர். அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக அமைந்திருந்தன.

பெரிய குஞ்சுக்குளப் பங்கின் தையல் பயிற்சிநெறியானது பெரிய குஞ்சுக்குளம், மாதா கிராமம், பெரிய முறிப்பு ஆகிய கிராமங்களின் கத்தோலிக்க யுவதிகளின் நலன்கருதி பங்குத்தந்தை அருட்பணி. லக்ஸ்ரன் டி சில்வா அடிகளாரின் முயற்சியால் 14.06.2011 அன்று ஆரம்பிக்கப்பட்டது.


இப்பயிற்சிநெறியை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. சாள்சினி மற்றும் செல்வி தனுஷா ஆகியோர் வழங்கினர். இதனால் பங்கைச் சார்ந்த 19 யுவதிகள் பயனடைந்தனர். இப்பயிற்சி மூன்று மாதங்களாக நடைபெற்றது. இப்பயிற்சியின் மூலம் பெறப்பட்ட படைப்புக்கள் பெரிய குஞ்சுக்குளம் புனித அங்காமத்து மாதா ஆலய திருவிழாவன்று கண்காட்சியாக மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. இதனை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. இரா. யோசேபபு ஆண்டகை திறந்துவைத்தார்.

*- செல்வி. றேவதி,*
*செல்வி ஜே. டிலானி,*
*கத்தோலலிக்க இ. ஒன்றியம்,*
*குஞ்சுக்குளப்பங்கு.*




## வினாடி வினா போட்டி! ஓவியப் போட்டி!

"இளைஞனே, தொன் போஸ்கோ உன்னை அழைக்கின்றார்"




மன்னார் மறைமாவட்டத்தின் இளைஞர்களே, யுவதிகளே உங்களின் கவனத்திற்கு!

இளைஞர் ஆண்டாகிய இவ்வாண்டில். இளைஞர்களின் தந்தையும், ஆசானும் மற்றும் நண்பருமான புனித ஜோன் பொஸ்கோவைப் பற்றி அறிய, அன்பு செய்ய இதோ உங்களுக்காக ஒரு பொன்னான அரிய வாய்ப்பு!.

புனித ஜோன் போஸ்கோவின் புனித கரம் தாங்கிய திருப்பண்டம் உலகைச் சுற்றி வருவதையும் விசேடவிதமாக முருங்கன் தொன் பொஸ்கோவிற்கும், மன்னார் மறைமாவட்ட பேராலயத்திற்கும் நம்மைக் காண கார்த்திகை மாதம் 25 வெள்ளிக்கிழமை மற்றும் 26 சனிக்கிழமை அகிய திகதிகளில் வருவதையொட்டி நடாத்தப்படும் தொன் பொஸ்கோவின் வினாடி வினா மற்றும் ஓவியப் போட்டியிலும் பங்குபெற்று கவர்ச்சிகரமான பரிசுகளைப் பெறுங்கள்.

## அமலமரித் தியாகியாகிட...

"ஏழைகளுக்கு நற்செய்தி நவில"
என்ற விருதுவாக்கோடு
புனித இயுஜின் டி மசனெட் அவர்களால் உருவாக்கப்பெற்ற அமலமரித்தியாகிகள் துறவற குழுமத்தில் இணைந்து அமலமரித் துறவியாக, அருட்பணியாளனாக வாழ தந்தையாகிய இறைவன் உன்னையும் அழைக்கிறார்.

சுடராகிப் பிரகாசிக்க........
சூடாகிச் சுட்டெரிக்க........
எரிகின்ற திரியாக...........
எங்கும் நற்செய்தியாகிட....

**வா அன்பனே புறப்பட்டு வா**

* தரம் 09 திறமைச்சித்தியுடன் நிறைவுசெய்து தரம் 10இற்கு வகுப்பேற்றம் பெற்றவர்கள்.
* சாதாரண தரம் (O/L) கணிதம், தமிழ் உட்பட 8 பாடங்களில் சித்திபெற்று உயர்தரம் (A/L) படிக்கத் தகுதி பெற்றவர்கள்.
* உயர்தரத்தில் (A/L) மூன்று பாடங்களில் 3 ஊக் களுக்கு மேல் சித்தியடைந்திருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

உங்களது முழு விபரத்தையும், முகவரியையும், தொலைபேசி இலக்கத்தையும் தயவுசெய்து குறிப் பிடவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 10/11/2011**

தொடர்புகளுக்கு:- அதிபர்
புனித வளனார் அமதிகள் குருமடம்,
சுவாமியார் வீதி, – கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலை. இல: 021 222 5358



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

இளைஞர் ஆண்டு
சிறப்புக் கட்டுரை

# இயேசுவின் இளமைப் பருவம் இன்றைய இளைஞர்களுக்கு ஒரு சவால்

அருட்சகோதரி மரிய சாந்தனா (அ.கா)
கொழும்பு.



"இளமை" அது திருப்பி எடுக்கமுடியாத ஒரு பொக்கிஷம். ஒரு மனிதனை அவனது உன்னத நிலைக்கு உயர்த்துவது இளமை. இளமையிலே எதையும் சாதிக்கலாம் என்ற ஒரு புத்துணர்வு எந்த ஒரு இளைஞனுக்கும் உண்டு. இளைஞர்களின் இதயத்துடிப்பு சமுதாயத்தின் உயிர் மூச்சாக மாறும்போதுதான் சமுதாயம் வளரும். வீரச்செயல்களை நொடிப்பொழுதில் செய்யும் போக்கு இளைஞர்களுக்கே உண்டு. அது விவேகத்துடன் மாறும்போதுதான் சமுதாயம் உருப்படும். எனவேதான் இயேசு புறாவைப்போல் கள்ளங்கபடமற்றவர்களாகவும், பாம்பைபோல் விவேகமுள்ளவர்களாயும் இருங்கள் (மத் 10:16) என்று கூறினார். சமுதாயச் சந்தைக்குள் பொறுமையுடனும் விவேகத்துடனும் வீரநடைபோடும்போதுதான் உயிருள்ள நீதியான சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். அந்தப் பொறுமையும் விவேகமும் இளமைக்கு உண்மையான சவால்.

'இளமை' அது உணர்ச்சிவசப்படக்கூடியது என்று இளஞர்கள்மேல் குத்தப்படுகின்ற முத்திரை ஒரு சவால். விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் வேகமாக வளர்ந்துகொண்டிருக்கும்போது கணனிப்பொறி யுகத்தில் பயணிக்கும் எல்லோருக்கும் ஏன் எல்லாம் கிடைக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது. இதுவும் இளமைக்கு ஒரு சவால். கையடக்கத் தொலைபேசியில் உலகத்தையே அடக்கிவிடலாம் என்று எண்ணும் இளைஞனுக்கு வரும் பிரச்சினைகள் ஒரு சவால். இத்தனை சவால்களை சமூக, அரசியல், சமய ரீதியாக இயேசு சந்தித்தார். அவரின் வித்தியாசமான அணுகுமுறை இன்றைய இளைஞர்களுக்கு மிக முக்கியமானதொரு சவால். இவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள முற்படுகின்றேன்.

## தனிச் செபத்தில் இயேசு

இளைஞன் இயேசு செபத்தில் எப்போதும் ஈடுபட்டார். தம்மையே சிந்தித்து தியானித்தார். அவருடைய இறை உறவின் ஆழம் பிறோடு அன்பாக உறவாட அவருக்கு வழிகாட்டியது. இறைவனின் இரக்கத்தாலும் கருணையாலும் இயேசுவின் உள்ளம் நிரப்பப்பட்டிருந்தது. அவர் எடுத்த எந்த ஒரு முடிவுகளும் இறையனுபவத்தின் வெளிப்பாடுகளாகவே இருந்தன. இறைத்தந்தையிடம் கொண்டிருந்த உறவின் அடையாளமே அவருக்கு துணிச்சலைக் கொடுத்தது. அவரிடம் கொள்கைப்பிடிப்பை ஏற்படுத்தியது. சுதந்திரத்தோடும் தனிமுடிவோடும் செயல்படும் பண்பு விளங்கியது.

இயேசுவின் பணிகளை யார்தான் எதிர்த்தாலும் இயேசுவின் வாழ்க்கையில் நம்பிக்கையும் உண்மையும் ஒளிர்ந்தது. இயேசுவைக் கொலை செய்வதற்காக எத்தனையோ குற்றங்களைத் தேடினர். ஆனால் தாம் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்காக இயேசு ஒன்றுமே பேசவில்லை. தன்னுடைய வாழ்க்கையில் வந்த சோதனைகள், வேதனைகள், சவால்கள் அனைத்தையும் தமது செபத்தினால் வெற்றிகொண்டார். அவருக்கு சக்தியையும், வல்லமையையும் கொடுத்தது தனிச் செபமே.

இன்றைய இளைஞர்களால் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியவில்லை. ஏமாற்றங்களைக் கண்டு துவண்டுபோகின்றனர். ஏன் இந்த நிலமை? இன்று எம்முடைய இளைஞர்களின் வாழ்விற்கும் தனிச்செபத்திற்கும் இடையே பாரிய இடைவெளி காணப்படுகின்றது. இயேசுவின் செப அனுபவம் இன்றைய இளைஞர்களுக்கு ஒரு சவாலாக உள்ளது.

## துணிவுமிக்க இளைஞன் இயேசு

"நான் இப்படிச் செய்வதால் மற்றவர்கள் என்ன சொல்வார்கள்" என்ற தலைமுறையினரிடையே நாம் வாழுகிறோம். ஆனால் இயேசு பிறர் தன்னை மதிக்க வேண்டுமென்றோ, பட்டம், பதவி, புகழ் கிடைக்க வேண்டும் என்றோ செயற்படவில்லை. இயேசு எதையும் யாரிடமும் எதிர்பார்க்கவில்லை. மனிதருள் மாணிக்கம் இவரே என்று உரத்து முழங்கிய திருமுழுக்கு யோவானிடமிருந்துகூட நற்சான்றிதழ்பெற இயேசு விரும்பவில்லை. எங்கு சென்றாலும் என்ன செய்தாலும் இயேசு நேர்மையாகவே காணப்பாட்டார். எவரைக் கண்டும் இயேசு பயப்படவில்லை. இயேசுவின் உறவினர்கள் அவருக்கு பைத்தியம் பிடித்துவிட்டதாக எண்ணினார்கள் (மாற். 3 : 21). பரிசேயர்கள் அவரை பேய் பிடித்தவர்களாகக் கருதினார்கள் (மாற் 3: 22). இயேசு பாவிகளோடும், விபச்சாரிகளோடும் சேர்ந்து திரிகிறார் என்றும், இறை நிந்தனை பேசுகின்றார் என்றும் குற்றம் சாட்டினார்கள். இவற்றையெல்லாம் கண்டு இயேசு அஞ்சியதாக வரலாறு கூறவில்லை. இயேசுவின் இந்த நிலைப்பாடு இன்றைய இளைஞர்களுக்கு ஒரு சவாலாக அமைகிறது.

## எதிர்ப்புகளுக்கு மத்தியில் இயேசு

இயேசுவின் வாழ்வில் அவரைப் புரிந்துகொண்டவர்கள் மிகச்சிலரே. இயேசு மிகச்சிறந்த சீர்திருத்தவாதியாக, சிறந்த மதத்தலைவராக, சிந்தனையாளராக இருந்தும் ஏன் அவரை ஒருசிலரே புரிந்துகொண்டனர் என்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.

இயேசுவின் பிறப்பு பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. தங்களது ஆட்சி கேள்விக்குறியாகிவிடுமோ என சிலர் பயந்தனர். எனவே பிஞ்சு வயதிலேயே அவரைக் கொன்றுவிடவேண்டும் எனத் திட்டம் தீட்டினான் மானிடக் கயவன் ஏரோது. 12 வயதிலேயே பரிசேயர்கள், மூப்பர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல இயேசுவிற்கு துணிவும் ஆற்றலும் இருந்தது. இயேசுவை சோதனைக்குட்படுத்தவேண்டுமென எண்ணி விபச்சாரப் பெண்ணை தம்மிடம் கூட்டிவந்த பரிசேயர்களை இயேசு எதிர்த்தார். "உங்களில் பாவம் செய்யாதவன் முதலில் கல் எறியட்டும்" (யோ 8 : 7) என்று சொல்லி அவர்களைத் தலைகுனியச் செய்தார். தம்மை அடித்தவனையும் "ஏன் என்னை அடிக்கிறாய்? எது தவறு என்று சொல்" (யோ 18: 23) என இயேசு எதிர்த்தார். தாம் எதிர்க்கப்படும்போது உணர்ச்சிவசப்பட்டு, பிறரை மனதளவிலும், உடலளவிலும் காயப்படுத்தத் தயங்காத இன்றைய இளைஞர்களுக்கு இயேசு ஒரு சவால்.

## பகிரும் தன்மையில் வளர்த்த இயேசு

இருப்பவன் தன்னில் இருப்பதை பகிர்ந்து வாழ்ந்திருந்தால் இன்று நாம் அடிக்கடி கேள்விப்படும் பசி, பட்டினி எம்மிடம் அறிமுகமாகி இருக்காது. திருச்சபையின் முதல் கிறிஸ்தவ குடும்பம் பகிர்தலின் ஆழ்ந்த கருத்தை எமக்கு தருகின்றன. தம்மிடம் இருப்பதைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்கு இயேசு கொடுத்த எடுத்துக்காட்டு அப்பமும் மீனும் பகிர்ந்த நிகழ்வு. "இரண்டு ஆடைகள் வைத்திருப்பவன் ஒன்றை இல்லாதவனோடு பகிர்ந்துகொள்ளட்டும் (லூக்.3:11) என திருவிவிலியம் கூறுகிறது. இன்று உலகில் உள்ள அனைத்து செல்வங்களையும் தமதாக்க வேண்டுமெனத் துடிக்கும் இன்றைய இளைஞனுக்கு இயேசுவின் பகிர்வு ஒரு சவால்.

வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்ட இன்று பலர் முன்வரலாம். ஆனால் இயேசுவைப் போன்ற ஒரு உன்னத வழிகாட்டியை நாம் காணமுடியாது. "வாளெடுத்தால் வாளால் சாவாய்" என்று பேசினாலும் தேவையானபோது வாளெடுக்க அஞ்சாத இரத்தம் தான் இயேசுவின் இளைய இரத்தம். இவர் அன்று பேசிய புரட்சிச் சிந்தனைகள் இன்றைய இளைஞர்கள் சிலரை இறைவாக்கினர்களாக்கியது. அந்தப் புரட்சி இளைஞன் இயேசுவின் வாழ்க்கையே இன்றைய பகட்டு சமுதாயத்திற்கு பெரியதொரு சவாலாக உள்ளது. முப்பத்து மூன்று ஆண்டுகள் பயணம் செய்து இறுதியில் இரத்தம் சிந்தி கல்வாரியின் கதாநாயகனாகத் திகழ்ந்த இயேசு உனக்கும் எனக்கும் சவால் விடுக்கிறார்.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் விந்தை மனிதர்களுடன் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். "யானையின் பலம் தும்பிக்கை, மனிதனின் பலம் நம்பிக்கை" என்பார்கள். இந்த நம்பிக்கையை தூர நோக்காகக் கொண்ட இயேசுவால் புதியதொரு சமுதாயத்தை உருவாக்க முடிந்தது.

திருப்பி எடுக்கமுடியாத பொக்கிஷமான இளமைப்பருவத்தில் பிறரின் சுமை தாங்கிகளாக நாம் வாழ வேண்டும். இளமைப்பருவம் ஆக்கும் திறன் கொண்டது. ஆனால் ஆவேசப்பட்டு எந்த முடிவினையும் எடுக்கக்கூடாது. எமது உணர்வுகளை உயரிய சிந்தனைகளாக உருவாக்கி அந்தச் சிந்தனையில் மனிதம் மலர இளைஞர்கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இளைஞர்களே நீங்கள் உதிராக்கனிகள். உங்களைத் தூண்டிவிட்டு தூரப்போகும் துட்டர்கள் யார் என்றும், துணைநின்று தோள்கொடுக்கும் தூண்கள் யார் என்றும் இனம் கண்டு கொள்ளுங்கள். வறண்டு கிடக்கும் சமுதாயத்திற்கு நீர் பாய்ச்சும் வாய்க்கால்களாக மாறுங்கள்.

உலகு உங்கள் உள்ளங் கையில் உள்ளது. உங்களை அங்கீகரிக்கத் தயங்கும் அடுத்திருப்போருக்கு சொல்லாலும் செயலாலும் உங்களை வெளிப்படுத்துங்கள். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்திடுங்கள். இயேசு விடுக்கும் சவால்களை தூர நோக்கோடு அணுகி இயேசுவின் சாட்சிகளாக மாறுங்கள்.

---

# வாழ்க்கை!

*அருட்சகோதரி மார்த்தா (CIC) எழுதும் தொடர் சிந்தனை*

## உயரே செல்லும் வாழ்க்கை!...

ஊனம் என்றாலும் உயரே செல்வதற்கு தடை இல்லை என்பது பலரின் வாழ்க்கை அனுபவங்கள்.

உயரே செல்வதற்கான பல வழிகள் இருக்கின்றது என்றாலும், வரும் யதார்த்தங்களை எதிர்கொள்வதற்கு எடுத்த விடயத்தை முடிப்பதற்கு மனது என்ற மாணிக்கத்திடம் சொல்லி செயல்பட்டு முடிப்பது கடினமான காரியமாகவே இருக்கிறது.

காரணம் தற்போதைய அறிவியல் யுகம்..... தேவைகளின் மிகுதி.... எல்லாவற்றையும் தொட்டுவிட ஆசை .... இவைகளினால் குறுக்குவழிகளை நாடி, குறுகிய எண்ணம் கொண்டவர்களாய் எப்படியோ, எங்கிருந்தோ அன்றாடம் தேவைகளை நிறைவுசெய்து கொள்கிறோம் என்றுதான் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது.

உழைக்க வலுவிருப்பினும் ரோஜாவை பறிக்கச் சென்றவன் முள்ளிருக்கிறது என்று பயந்து பறிக்காமல் விட்டுவிட்ட நிலைதான் இன்று பெருகிவருகிறது.


இன்றைய காலகட்டத்தில் வாழ்க்கையில் வெற்றிபெற வயது தேவையில்லை என்றாலும் இயல்பாகவே ஒரு பருவத்தை கண்டதும் உயர வேண்டும், புகழ்பெற வேண்டும், பதவி பெறவேண்டும், தான் அடைய நினைப்பதை அடைய வேண்டும் என்ற துடிப்பு 25 வயது தொடக்கம் 40 வயது வரை இருப்பதைக் காண்கிறோம்.

இந்த உயர்ந்த எண்ணத்திற்கு பக்கபலம் தருவது குறையும் பட்சத்தில், காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப வெறும் உணர்வு, உணர்ச்சி நிலையில் இருந்து கொண்டு, கடக்கவும் முடியாது, இருக்கவும் முடியாது போராட்ட நிலையில் இருக்கின்றோம்.

விடியும், விடியும் என்று மேடைபோட்டுக் காத்திருக்கிறோம். முள்ளிருக்கும் செடியில் அழகிய மலரை பறிக்க முடியும், தடைகற்கள் இருக்கும் இடத்தில் புனிதம் புதைந்திருக்கிறது என்று தெரிந்தும் தெரியாதவர்கள் போன்று எல்லாம் விதி என்ற எண்ணத்தில் வாழ நினைக்கிறோம்.

காதல் வயப்பட்ட அளவுக்கு வாழ்க்கை இல்லை என ஏங்கிகொண்டே இருக்கிறோம். காதல் உணர்வைக் கடந்து அன்பு என்ற மையத்திற்கு வரும்போதுதான் வாழ்வை அனுபவிக்கலாம் என்ற தெளிவு இல்லாதவர்களாய் இருக்கிறோம்.

சாதனை செய்வதில்தான் உயர்வு வெற்றி என்பதல்ல வாழ்க்கை. [illegible] சாதனை செய்ய வேண்டும்.



மனப்போராட்டத்திடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டால் அதாவது இதுவா, அதுவா, தன்னை பற்றிய, பிறரை பற்றிய எண்ணங்கள் போன்றவைகளில் இருந்து தெளிவை அடைந்து நிதானத்தை கைக்கொண்டால், குணத்தில், பார்வையில், நம்பிக்கையில் முதிர்ச்சி இருந்தால் நிச்சயம் வெற்றி நம்மைத் தேடிவரும்.

எவ்வாறெனில் (லூக் 10 : 5-6) இயேசு கூறுகிறார் "நீங்கள் எந்த வீட்டிற்கு சென்றாலும் இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக! என முதலில் கூறுங்கள். அமைதியை விரும்புபவர் அங்கு இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவரிடம் தங்கும்; இல்லாவிட்டால் அது உங்களிடமே திரும்பிவிடும்" என்கிறார். செய்யவேண்டியதைச் செய்து உயர்வடைய அழைக்கிறார் இயேசு.

நண்பர்களே! வீழ்ச்சியின் விதையில் முளைப்பது வெற்றி. தோல்வியின் யதார்த்தத்தில் துளிர்ப்பது வெற்றி. தேடலின் பாதையில் காண்பது வெற்றி. ஆசையின் ஆழத்தில் அடைவது வெற்றி. விதியின் வீதியைக் கடப்பதுதான் வெற்றி என்பதை உணர்வோம்.

ஒருமுறை நான் பேரூந்தின் வரவிற்காக சாலை ஓரமாக நின்றுகொண்டிருந்தேன் பக்கத்தில் இளநீர் விற்றுக்கொண்டிருந்தார் ஒரு பெரியவர். அந்த இடத்திற்கு சில நண்பர்கள் வந்தார்கள். அவர்களைப் பார்த்த பெரியவர், "இளநீர் வாங்கி குடியுங்கள். சாயம் கலந்த நீரைவிட இது உடலுக்கு நல்லது" என்றார். வந்தவர்களில் ஒருவர் பெரியவரைப் பார்த்து முறைத்தார். மற்றவர், "ஏன் முறைக்கிறாய்? அவர் உண்மையைத்தானே சொல்கிறார்" என்றார்.

வாழ்க்கை வசதியானவர்களுக்கும், படித்தவர்களுக்கும், பெரிய பதவியில் உள்ளவர்களுக்கும் மட்டுமல்ல. அது அனைவருக்கும் சொந்தம். அதை வாழும் கலையோடு வாழ்ந்தால் இந்த வாழ்வே வெற்றியை, உயர்வை, மதிப்பை, புகழைப் பெற்றுத் தரும். வாழ்க்கை என்ற வானவில்லை வளைக்க, வண்ணமயமாக்க, நாம் தேவை. எனவே வாழ்வோம் வாழ்க்கை நமதே!

*வாழ்க்கை தொடரும்...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# பெரும்பான்மையினர் சிறுபான்மை மக்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்

## அநுராரதபுர ஆயர் மேதகு அன்ராடி கவலை



இலங்கையில் பெரும்பான்மையாய் உள்ள மக்கள், சிறுபான்மை மக்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர் என்று இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் செயலரான ஆயர் நோபேட் அன்ராடி கூறினார். 'சமுதாயமும் மதங்களும்' என்ற அமதிகள் மையத்தின் 40வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் ஒரு நிகழ்ச்சியின்போது கொழும்பில் பேசிய ஆயர் அன்ராடி, உள்நாட்டுப் போர் முடிந்து ஈராண்டுகள் கடந்த பிறகும் இங்கு அமைதியும் சிறுபான்மையினரின் உரிமைகளும் கானல் நீரைப்போல் இருந்து வருகின்றன என்று சுட்டிக்காட்டினார்.

பழைய வரலாற்றை முற்றிலும் புதைத்துவிட்டு உண்மையான அமைதியை நிலைநாட்ட முடியாது என்று கூறிய ஆயர் அன்ராடி இலங்கை பல்வேறு கலாச்சாரம், மதங்கள், மொழிகள் ஆகியவற்றின் சங்கமம் என்பதை அனைவரும் கட்டாயம் உணர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அரசியல்வாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே தற்போது நிலவிவரும் உறவுகள் குறித்து நாம் கேள்விகள் எழுப்ப வேண்டும் என்றார். அரசியல் ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்ட ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் அனைவரும் அக்கறைகாட்ட வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைத்தார்.

## தனது எதிர்பார்ப்புக்களை முதலில் தன்னுள் வாழ வேண்டும்

### சிலாப மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டில் கருத்து

சிலாப மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டின் 2வது மாபெரும் கருத்தமர்வு கடந்த 18.07.2011ல் காலை 9.00 முதல் பி.ப 1.00 மணிவரை சிலாபம் சுதசுன மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கு அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் உட்பட 600 அங்கத்தினர்கள் சமூகம் தந்திருந்தனர். அன்றைய தினம் "இலங்கையின் தற்போதைய நிலையும், திருச்சபையின் மறைத்தூதுப் பணியும்" என்ற தலைப்பில் திரு. விக்டர் ஐவன், திரு.கெமிலஸ், பேராசிரியர் திரு. அன்டன் மீமன ஆகியோர் கருத்துள்ள சொற்பொழிவுகளை ஆற்றினர்.

சமூகத்தை, நாட்டைப் பற்றிய எனது எதிர்பார்ப்புக்களை நான் அடையவேண்டுமாயின், அவற்றை முதலில் என் வாழ்வில் நனவாக்க வேண்டும். அன்றைய சமூகத்தில் வாழ்ந்த இயேசு மனிதனின் நன்மைக்காகவே உழைத்தார். இது கிறிஸ்தவ அழைப்பு. இன்றும் கிறிஸ்தவன் உண்மை, நீதி, நேர்மையின் பொருட்டு உழைக்க, குரல் கொடுக்க வேண்டும். காரணம் இறைவன் நன்மையானவர், உண்மையுள்ளவர். எனவே கிறிஸ்தவன் இப்பணிகளைத் தன் வாழ்வில் உண்மையாக்க வேண்டும், இயேசுவின் பார்வையில் அனைத்தையும் பார்க்க, செயல்படுத்த வேண்டும். சமூகத்தில், நாட்டில் பிரச்சினை இருந்தால், அதன் தீர்வின் ஓர் பகுதி 'நான்' என்ற ஆளைச் சேரும். விஞ்ஞானம், தொழிநுட்பத்தினால் மட்டும் பிரச்சினைகளை வெற்றிகொள்ள முடியாது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஆன்மீகத்தினூடாக தீர்வைப் பெறலாம்.

"நான்" என்ற ஆளினுள் மேலான ஆளுமைத் தன்மை இருக்க வேண்டும். "ஆன்மீக மனமாற்றத்தை" நான் பெற வேண்டும் என இம்மாநாட்டில் கருத்துரைக்கப்பட்டது.

இலங்கைத் திருச்சபை தமிழ், சிங்கள மக்களால் ஆனது. இதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும். அவர்களுக்கும் இலங்கையில் தகுந்த மதிப்பும், மரியாதையும், கௌரவமும் கொடுக்கப்படவேண்டும் எனவும், தன் மறைமாவட்டத்திலும் இவ்விரு இன மக்களும் இருப்பதால், அவர்களின் எதிர்பார்ப்புக்களில் தான் அக்கறைகொள்ள முயற்சிப்பதாக சிலாப ஆயர் வலன்ஸ் மென்டிஸ் அவர்கள் எடுத்துக்கூறினார்.

*- அருட்சகோதரி மானெல் பர்னாந்து, குறிஞ்சிப்பிட்டி.*

## கிளிநொச்சியில் புதிய பங்குமனை திறப்பு

கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய பங்குப்பணிமனை புனித கன்னிமரியாளின் பிறப்பு விழாவாகிய கடந்த புரட்டாதி 8ம் திகதி திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதியான யோசப் ஸ்பிறிற்ரேறி ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இதுவே போரின்பின் வன்னியில் திறக்கப்படும் முதற் குருமனையாகும். இந்தப் பங்குப் பணிமனைக்கான அடிக்கல் 2010ம் ஆண்டு நாட்டப்பட்டது.

இந்நிகழ்வுக்கு திருத்தந்தையின் பிரதிநிதியோடு இணைந்து யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களும், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், கிளிநொச்சி பங்குமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் தூய நற்கருணையின் தசாப்த பிரகடனம்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இந்த ஆண்டு நற்கருணை ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டின் நிறைவில் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு நற்கருணையை மையமாகக்கொண்டு மறைமாவட்டத்தில் செயற்திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கோடு தூய நற்கருணையின் தசாப்த பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (ஒரு தசாப்தம் என்பது பத்து ஆண்டுகளைக் குறிக்கும்)

கடந்த 28.08.2011 அன்று ஞாயிற்றுக்கிழமை தேவத்தை பெசிலிக்கா வளாகத்தில் நோயாளர் தின வழிபாட்டின்போதே கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ஆண்டகையினால் இந்தப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

இனிவரும் ஒன்பது வருட காலம் தூய நற்கருணை ஆண்டவரைப்பற்றி வெவ்வேறு தலைப்புகளிலும், கோணங்களிலும், சிந்தித்து செயற்படவும், தூய நற்கருணையில் ஊறிய தலத்திருச்சபையாக உருமாறி மற்றவர்களுக்கு ஆசீராய் மாறுவதுமே இந்தத் தசாப்தத்தின் நோக்கமாகும் என கொழும்பிலிருந்து வெளிவரும் ஞான ஒளி பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

## காலி தெனியாய பங்கின் முதலாவது தமிழக் குரு

காலி மறைமாவட்டத்தின் தெனியாய பங்கின் முதல் தமிழ்க் குருவாக அருட்திரு. எண்டன் மொரிஸ் அவர்கள் கடந்த 17.05.2011 அன்று பலாங்கொடை புனித சூசையப்பர் ஆலயத்தில் இரத்தினபுரி ஆயரினால் திருநிலைப்படுத்தப்பட்டார்.



இவர் தனது முதல் திருப்பலியை 2011.05.22ம் திகதி ஞாயிறு காலை 9.00 மணிக்கு தெனியாய புனித் சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார். இவரை பங்கு மக்கள் அனைவரும் வாழ்த்துகின்றோம்.

## கொழும்பில் திருவழிபாட்டு மாநாடு

கொழும்பு உயர் மறைமாவட்ட பொதுநிலையினருக்கான திருவழிபாட்டு மாநாடு கடந்த ஆவணி மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் கொழும்பு – 07, புனித பிரிஜிட் கல்லூரியில் நடைபெற்றது. இந்த மாநாடு கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்கருக்கு புத்தூக்கம் அளிக்கும் ஒன்றாக அமைந்திருந்தது.

கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையின் வழிநடத்தலில் கொழும்பு மறைமாவட்ட திருவிழிபாட்டு இயக்குனர் அருட்திரு. சிசில் ஜோய் பெரேரா, தேசிய திருவழிபாட்டு இயக்குனர் அருட்பணி இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம், கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயரின் சிறப்புப் பதிலாளர் அருட்திரு. இம்மானுவேல் பர்னாந்து அடிகள் மற்றும் உதவிக் குருக்கள் பலரின் ஒத்துழைப்புடன் இந்த மாநாடு சிறப்பாக இடம்பெற்றது.

செயலமர்வுகள் யாவும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் இடம்பெற்றன. தமிழ் பிரிவில் 70 பேரும் சிங்களப் பிரிவில் 200 பேரும் இதில் கலந்துகொண்டனர்.

## அருட்சகோதரர் எட்வேட் ஜெயபாலன் வாழ்க்கைக் குறிப்புகள்

குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ள அருட்சகோதரர் எட்வேட் ஜெயபாலன் அவர்கள் நாானாட்டன் பங்கு பள்ளங்கோட்டைக் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை, புஷ்பம் தம்பதிகளின் மகனாக 22.07.1974ல் பிறந்தார். இவர் தமது ஆரம்ப மற்றும் உயர்தரக் கல்வியை மன்/ நானாட்டான் மகாவித்தியாலயத்தில் நிறைவுசெய்தார். 1999ம் ஆண்டு கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள பிரான்சிஸ்கன் துறவற சபையின் உருவாக்கல் இல்லத்தில் சேர்ந்து தனது குருத்துவ உருவாக்கற் பயணத்தை ஆரம்பித்தார். பின்னர் அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார். 09.12.2010 அன்று தியாக்கோனாக அருட்பொழிவு செய்யப்பட்டார். கண்டி புனித அந்தோனியார் பேராலயம், மாங்குளம் புனித அக்னஸ் அம்மாள் ஆலயம், கப்புத்தளை புனித வனத்துச் சின்னப்பர் ஆலயம் ஆகியவற்றில் தனது தியாக்கோன் பணியை மேற்கொண்டார்.

ஏழு பிள்ளைகளைக் கொண்ட இவரது குடும்பத்தில் இவர் ஆறாவது பிள்ளை ஆவார். யுத்த சூழ்நிலை காரணமாக உள்நாட்டில் கல்வியைத் தொடரமுடியாது இவர் இந்தியா செல்லவேண்டியதாயிற்று. நான்கு வருடங்களின் பின்னர் நாடு திரும்பிய இவர் மீண்டும் தனது கல்வியைத் தொடர்ந்தார். தனது அயராத முயற்சியினால் கல்வியைக் கற்றுக்கொண்டு இருக்கும் காலங்களில் இறை அழைத்தலைப் பெற்று பிரான்சிஸ்கன் துறவற சபையில் தன்னை இணைத்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவில் கியூடெக் நிறுவனத்தால் 95 நிரந்தர வீடுகள் கையளிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் செல்வபுரம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுள் 95 குடும்பங்களுக்குக் கரித்தாஸ் (கியூடெக்) வன்னி நிறுவனம் நிர்மாணித்துக் கொடுத்த 95 நிரந்தர வீடுகள் கையளிப்பு நிகழ்வு இயக்குனர் வண பிதா. ஆ. யாவிஸ் அடிகளாரின் தலைமையில் 07.09.2011 புதன் கிழமையன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்கள் காலை 10.00 மணியளவில் பெயர் பலகையை திறந்துவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி அதி வண. யோசவ் ஸ்பிறிற்ரேறி, யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, இலங்கைக்கான நோர்வே தூதுவர், கரித்தாஸ் தேசிய இயக்குனர் அருட்திரு ஜோர்ச் சிகாமணி, மேன்மை தங்கிய திருமதி. குல்டே கரால்டேற்றா, வட மாகாண ஆளுநர் ஜி. ஏ. சந்திரசிறி, கௌரவ அமைச்சர் றிசாட் பதியுதீன், கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாண மறைமாவட்ட இயக்குனர் அருட்திரு. பேணாட் றெக்னோ, முல்லைத்தீவு மாவட்ட இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் மாக் மற்றும் அரச அதிகாரிகள் கலந்துகொண்டார்கள்.

## யாழ் பேராலயப் பங்கிற்கு புதிய பணிமனை

யாழ் பேராலயப் பங்கிற்கு ஓர் சிறந்த பங்குப் பணிமனை இல்லை என்ற குறை மிக நீண்ட நாட்களாக இருந்து வந்தது. இப்பெரும் குறையை நீக்கி கடந்த 15.08.2011 ஆலயத் திருவிழா அன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பங்குமனையை யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை திறந்துவைத்தார்.

பங்குத் தந்தை அருட்பணி. ஆர். எச். சகாயநாயகம் தன் அதீத முயற்சியினாலும், பங்கு மக்களினதும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மரியன்னை பக்தர்களின் தாராள நன்கொடையாலும் இதைக் கட்டிமுடித்துள்ளார். குருக்கள் வாழும் இல்லிடத்தையும் உள்ளடக்கியதாக தற்போது இப்பணிமனை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பாதுகாவலன் செய்தியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க செய்திப்பத்திரிகையான பாதுகாவலன் பத்திரிகையின் செய்தியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த 19ஆம் திகதி (19.08.2011) யாழ்ப்பாணம் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் அருட்திரு. எயின்சிலி றொஷான் அடிகளார் ஒழுங்குசெய்த இந்த நிகழ்ச்சியில் யாழ் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த 35 பேர் கலந்துகொண்டனர்.

இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த தோழன் சஞ்சிகையின் ஆசிரியர் அருட்திரு. மரிய டெலஸ், அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை, மன்னா பத்திரிகையின் ஆசிரியர் அருட்திரு தமிழ் நேசன், அருட்திரு. றெஜிஸ் இராஜநாயகம் ஆகியோர் இப்பயிற்சிப் பட்டறையில் வளவாளராகக் கலந்துகொண்டனர்.

## குருணாகலில் ஆலயம் கட்ட அனுமதி மறுப்பு

இலங்கையின் குருணாகல் மறைமாவட்டத்தின் ஹெண்டியாகாலா எனுமிடத்தில் அப்பகுதியின் 100க்கும் மேற்பட்ட கத்தோலிக்கக் குடும்பங்களுக்கான வழிபாட்டுத்தலமாக 1997ம் ஆண்டு கட்டப்பட்ட தற்காலிகக் கோவில் சில புத்தமதத் தீவிரவாதிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

தற்போது புதிய கோவில் கட்டுவதற்கென எடுத்த முயற்சிகளுக்கு அப்பகுதியின் புத்த மதத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளதால் அதைக் காரணமாகக் காட்டி அரசாங்கம் அனுமதி வழங்க மறுத்துள்ளது.

## உப்பு சத்தியாகிரகத்தின் முக்கியத்துவம்

அமெரிக்காவின் டைம்ஸ் பத்திரிகை, உலக நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்திய பத்துப் போராட்டங்கள் குறித்து வெளியிட்டுள்ள பட்டியலில் மகாத்மா காந்தியின் உப்பு சத்தியாகிரகமும் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்...? இந்த மௌன ஊர்வலம்

## முள்ளிக்குள மக்களின் மீள்குடியேற்றப் பிரச்சினை

### – ஓர் அலசல் –

*ஆக்கம் - அமிர்தம்*

பூர்வீக காலத்தில் பிரசித்திபெற்றிருந்த பல கிராமங்கள் இன்று அவை தம் பொலிவிழந்து, முகவரி இழந்து, அதன் மக்கள் அந்நியப்பட்டு, கிராமம் சுடுகாடுபோல் காட்சியளிப்பதைக் காண முடிகிறது. இதில் 'முள்ளிக்குளம்' கிராமம் விதிவிலக்கல்ல.

மன்னார் மாவட்டத்தின் தென் கோடி முனையில், முசலி பிரதேச செயலாளர் பிரிவில், மன்னார் - புத்தளம் மாவட்டங்களைக் கூறுபோட்டு ஓடும் "மோதரகம" ஆற்றின் இறங்குதுறையில் அமைந்துள்ளது இக்கிராமம். இதன் மேற்கு எல்லையை இந்து மா கடலும், வடக்கு எல்லையை நன்செய் வயல்கள், காடுகள் அணிசெய்ய, கிழக்கு எல்லையை மன்னார் - புத்தளம் குறுந்தூரப் போக்குவரத்து நெடுஞ்சாலை கோடிட்டுச் செல்கிறது.

கிழக்கு - மேற்கு 8 கி.. மீ. நீளம், வடக்கு - தெற்கு அகலம் 6 கி. மீ. நிலப்பரப்பைக் கொண்ட இக்கிராமம், பாலை, குறிஞ்சி, மருதம், நெய்தல், முல்லை நிலங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. சரித்திரப் புகழ் பெற்ற 'குதிரமலை', ஸ்ரீலங்காவின் தலைசிறந்த வனவிலங்கு சரணாலயம் "வில்பத்து", அல்லி அரசாணியின் கோபுரம் போன்றவை இதன் அருகே அமைந்துள்ளன.

இக்கிராமத்தின் ஆரம்ப வரலாறு 17ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பமாகின்றது. அன்று தொட்டு இன்றுவரை எம் மக்கள் பாரம்பரியமாகத் தொடர்ந்து இக்கிராமத்தில் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

1786ல் எம் மூதாதையரால் அமைக்கப்பட்ட 'புனித பரலோக மாதா' தேவாலயம் இன்றும் அங்கு மாபெரும் ஆலயமாக கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இன்று இக்கிராமத்தின் சொந்தக்காரர் 7வது பரம்பரையினர். புலவர் கபிரியேற் பிள்ளை இக்கிராமத்தின் 'ஞான சௌந்தரி' நாடகத்தை பாடியபோது அவர் இக்கிராமத்திற்கு ஏட்டில் விட்டுச் சென்ற பெயர் "வந்தாரை வாழவைக்கும் சிங்கார முள்ளிக்குளம்" என்பதாகும். ஆனால் இன்று அங்கே அந்த மக்கள் இல்லை. நடந்தது என்ன?.....

1990 காலப்பகுதி யுத்த அனர்த்தம் எமது கிராமத்தையும் பாதித்தது. அதன் விளைவு 1990 ஆனி 19ம் நாள் இரவு நாம் எமது கிராமத்தைவிட்டு வெளியேற்றப்பட்டோம்.

1990 - 2003 ஆம் ஆண்டுவரையிலான 13 வருடங்கள் நாங்கள் தொடர் அகதிகளாக பல இடங்களிலும், பல நிலைகளிலும் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து வந்தோம். அவ்வேளை, எங்கள் கிராமத்தில் என்ன நடந்தது என எதுவும் எங்களுக்குத் தெரியாது. நாங்கள் அப்பொது அங்கு இல்லை.

2002ம் வருட இறுதியில் நாட்டில் ஏற்பட்ட ஓர் தற்காலிக சுமூக நிலையில் எங்களில் ஒரு பகுதியினர் - சுமார் 100 குடும்பங்கள் - மீளக் குடியமர்த்தப்பட்டோம். அவ்வேளை அங்கே, புதிய கட்டிடங்கள், வீடுகள், பாடசாலைகள், பல மீள் எழுச்சித்திட்டங்கள் போன்றவை அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டன. ஆனாலும் அவை கைக்கு எட்டாத நிலையில் "வெண்ணை திரண்ட வேளை தாளி உடைந்த" கதையானது.

2007ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இராணுவம் எம் கிராமத்தை திடீரென முற்றுகையிட்டது. நாங்கள் வெளியேற்றப்பட்டோம். அவர்கள் இங்கு நிலை கொண்டார்கள். தற்போது எம் கிராமத்தில் கடற்படையினர் சீவிக்கிறார்கள்.

1990 தொடக்கம் 2003 வரை 13 வருடங்கள். 2007 தொடக்கம் 2011 வரை 4 வருடங்கள். 13 + 4 = 17 வருடங்கள் அகதிகளாக வாழுகின்றோம். அது இன்னும் தொடர்கதையாகவே சென்றுகொண்டிருக்கிறது.

2009ம் வருடம் வைகாசி மாதம் 19ஆம் திகதி நாட்டின் யுத்த நிலை முடிவுக்கு வந்தபோது மக்கள் எல்லோரும் தம் சொந்த இடங்களுக்கு சுதந்திரமாய் சென்றார்கள். 'வடக்கின் வசந்தம்' 'தெற்கின் உதயம்', எங்கும் மீள் எழுச்சித் திட்டங்கள், மீள் குடியேற்றங்கள்! இதில் எமது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எமது முசலி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் பலரும் இன மத வேறுபாடின்றி குடியேற்றம் செய்யப்பட்டனர். அதிலும் குறிப்பாக எமது கிராமத்தின் அயல் கிராமங்களான பாலைக்குளி, மறிச்சுக்கட்டி, கரடிக்குளி முஸ்லீம் மக்களும், பூக்குளம் சிங்கள மக்களும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு தம் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளார்கள். ஆனால் எம்மை மட்டும் மீள்குடியேற்றம் செய்யாது, தனிமைப்படுத்தி, அகதிகளாக வைத்திருப்பது எமக்கு வேதனையாக உள்ளது. இது எம்மட்டில் "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய" செயல். "

13.03.2010 அன்று எமது மீள்குடியேற்றம் சம்பந்தமாக எமது மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகை ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு ஓர் மனு சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பலனாக... 30.07.2010ல் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் ஆயர் பணிமனையில், "முள்ளிக்குளம் மீள்குடியேற்றம்" தொடர்பான ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு சார்ந்த செயலாளர் கனம் கொட்டி ஆராய்ச்சி அவர்களும், பாதுகாப்புப் படையினர், மன்னார் மாவட்ட அரச அதிபர், முசலி பிரதேச செயலாளர், அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள், 25க்கும் மேற்பட்ட குருக்கள், முள்ளிக்குளம் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**மேற்படி கூட்டத்தில் நாங்கள் கேட்டுக்கொண்டது.**

1. கடற்படையினர் எமது கிராமத்தில் இருப்பதில் எமக்கு எவ்வித ஆட்சேபனைகளுமில்லை. நாங்கள் அவர்களுடன் சுமூகமாகக் கூடிவாழ விரும்புகிறோம்.

2. எங்கள் வயல் நிலங்கள் சார்ந்த காணி, மேட்டு நிலங்களில் எம்மை மீளக் குடியமர்த்துவதுடன், இதனை அண்டிய கடல் பிரதேசத்தில் நாங்கள் மீன்பிடி தொழில் செய்ய உதவ வேண்டும்.

இதன் பலனாக. பாதுகாப்பு அமைச்சு கடித இல/D/865/L/NY கூற்றின்படி நாங்கள் எங்கள் கோயிலுக்குச் செல்லமுடியும், எங்கள் வயல் நிலங்களில் விவசாயம் பயிரிட முடியும்.

இதைக் கடிதம் கூறுகிறது. ஆனால் நாம் குடியமர கடற்படையினர் மறுக்கிறார்கள். மேற்படி கடிதத்தின் கூற்றுப்படி கடந்த 26.08.2011ல் எமது ஆலய திருவிழாவை கொண்டாடும் முகமாக கடந்த 2011 ஆடி மாதத்தில் மன்னார் மாவட்ட அரச அதிபர், பாதுகாப்பு படையினர் (இராணுவம், கடற்படை), உயர் மட்ட அதிகாரிகள், அமைச்சர் போன்றோருக்கு எமது ஆலயசபை ஊடாக விண்ணப்பித்தும் எத்தரப்பில் இருந்தும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

எனினும் 22.08.2011ல் மன்னார் மாவட்ட அரச அதிபர் பணிமனையில் ஓர் கூட்டம் எமக்காகக் கூட்டப்பட்டது. இக் கூட்டத்திற்கு அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்புப் படையினர், குருக்கள் போன்றோர் சமூகமளித்திருந்தனர்.

இக்கூட்டத்தில் எமது மீள்குடியேற்றம், ஆலயத் திருவிழா விடயங்கள் மீண்டும் முன்வைக்கப்பட்டன. கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இறுதியில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு ஆவன செய்வதாகக் கூறப்பட்டது. இதுவரை எவ்வித பதிலும் இல்லை.

**இன்று எங்கள் நிலை**

1. 1990ல் எங்கள் கிராமத்தின் குடும்களின் எண்ணிக்கை 200 - தற்போது 400இற்கு மேல்.

2. எங்கள் கிராமம் அந்நியமாகிவிட்டதால் எங்களுக்கென்று ஓர் நிரந்தர வதிவிடமில்லை.

3. எங்கள், ஆலயத் திருவிழா, விவசாய நடவடிக்கைகள் யாவும் தடைப்பட்டுள்ளது.

4. பிறிதோர் கிராமங்களுக்கு அருகில் யாம் தற்காலிகமாகக் குடியிருக்க முயற்சித்தாலும், கிராமவாசிகளின் எதிர்ப்புக்கும், ஆட்சேபனைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளதுடன், பல பின் விளைவுகளும் ஏற்படவுள்ளது.

5. நாங்கள் தற்போது அந்நியர் வீட்டு முற்றங்களிலும், எல்லைப் புறத் தோட்டங்களிலும், ஓலைக் குடிசைகளில் முடங்கி வாழ்ந்துகொண்டிருக்கிறோம். காணிக்காரர்கள் தங்கள் காணிகளைவிட்டு வெளியேறும்படி நச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

6. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் எம்மை நினைவுகூரும்வேளை வழங்கும் உணவுப் பண்டங்கள் மூலம் எம் வயிற்றுப் பசி போக்கப்படுகிறது.

7. எங்கள் குடும்பத் தலைவர்களுக்கு நிரந்தர தொழிலில்லை, வருமானம் இல்லை. கூலி வேலை அவர்கள் ஆயுளைக் குறைத்துக்கொண்டிருக்கிறது.

8. எங்கள் பிள்ளைகளின், கல்வி, திறமைகள், அவர்கள் எதிர்காலம் யாவும் கேள்விக் குறியாகவுள்ளதுடன், பாடசாலை, பொது இடங்கள் வைபவங்களில் இவர்கள் பிழையான கண்ணோட்டத்தில் கணிக்கப்படுகிறார்கள் (அகதி)

9. எங்களில் பலர் படகேறி காந்தியின் தேசத்திற்கும் அதற்கு அப்பாலும் போய்விட்டார்கள்.

இப்போது எங்களுக்கு எங்கள் கிராமம் தேவைப்படுகிறது. இவைகளின் வெளிப்பாடுதான் "எமது மௌன ஊர்வலம்" அது வெளிச்சத்திற்கு வந்து. விட்டது. "உலகம் ஒரு முறை எங்களையும் திரும்பிப் பார்க்கும் என ஆறுதல் அடைகிறோம்.

இறுதியாக எங்கள் மௌன ஊர்வலத்தில் கலந்து கரம் கொடுத்த மேதகு ஆயர், குருக்கள், அதிகாரிகள், பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், பொது மக்கள், பாதுகாப்பு நல்கிய பொலிசார் அனைவருக்கும் எம் முள்ளிக்குளம் மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் - அதை காக்கிறவன் கண்விழிப்பது வீண்" பைபிள்.*

# வார்த்தைை வாசிப்போருக்கு!

## ~ சில நடைமுறைச் சிந்தனைகள்~

*P. ஞானராஜ் J.P*
*ஆசிரியர், மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார்.*

திருவழிபாடுகளில் குறிப்பாக திருப்பலியில் இறைவார்த்தைப் பகுதி முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

பொதுவாக நாளாந்த திருப்பலிகளில் 2 வாசகங்களும், ஞாயிறு மற்றும் திருவிழா திருப்பலிகளில் 3 வாசகங்களும் வாசிக்கப்படுவது வழமை. 3 வாசகங்கள் வாசிக்கையில் 1ம் வாசகம் பழைய ஏற்பாட்டிலும், 2ம் வாசகம் புதிய ஏற்பாட்டிலும் 3ம் வாசகம் நற்செய்தி வாசகமாகவும் அமையும்.

"இறைவார்த்தை அறிவிக்கப்பட வேண்டும். அது வாழப்படவேண்டும்" என்பது நமக்குத் தெரியும். அறிவிக்கப்படும் இறைவார்த்தையை சரியாகப் புரிந்துகொண்டால்தான் அதை வாழ்வாக்க முடியும்.

ஆனால் இன்றைய யதார்த்தம் என்ன? "ஏதோ வாசிக்க வேண்டும்" என்பதற்காக வாசகங்களை வாசித்துவிட்டுச் செல்கின்ற நிலையே பெரும்பாலான இடங்களில் உள்ளது. இறைமக்களாகிய நாம் இது தொடர்பாக சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

வாசகம் வாசிக்கும்போது வாசிப்பவர் அந்த நேரத்தில் இறைவனின் "இறைவாக்கினராக" இருந்து இறைவனின் செய்தியை இறைமக்களுக்கு அறிவிக்கிறார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். தான் இறைவாக்கினராக தெரிவு செய்யப்பட்டமைக்காக நன்றி தெரிவிப்பதுடன், அவ்வார்த்தையை நன்கு ஆயத்தம் செய்து, மொழியாற்றலுடன் நன்கு வாசிக்க வேண்டும். திக்கு முக்காடாமல், ஒரு சொல்லை இருமுறை வாசிக்காமல், தடங்காமல், சொற்களை பொருள் தரும் வகையில், தொனிப்பொருளுடன் சேர்த்து, ஏற்ற இறக்கத்துடன், இறைமக்களுக்கு விளங்கக்கூடிய வகையில் வாசிப்பது அவசியமாகும்.

வாசிப்பதை மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டால் அதற்கு அதிக விளக்கம் கொடுக்கத் தேவையில்லை. ஏனெனில் அனேகமான வார்த்தை தன்னிலேயே விளக்கத்தைகொண்டதாக இருக்கிறது.

எனவே இங்கு வாசிப்பவரின் பங்கு பெரும் இடத்தைப் பெறுகின்றது.

வாசிக்கும்போது ஒலிவாங்கியை நன்கு பயன்படுத்தி, சத்தமாக வாசிக்க வேண்டும். வாய்க்குள் முணுமுணுக்கக்கூடாது. இறைவன் மக்களுடன் பேசுவதுபோல் அழகாக, தெளிவாக, உறுதியாக வாசிக்க வேண்டும். கடமைக்காக, ஏதோ வாசித்து முடித்தால் சரி என்றோ அவசரப்பட்டோ வாசிக்கக்கூடாது. பயத்துடனும், நடுக்கத்துடனும் வாசிக்கக்கூடாது.

வாசிக்கும்முன் வாசிப்பவர் அந்த வார்த்தையை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அதை நன்கு தியானித்து தனது வாழ்வில் அதை வாழ்வாக்க முயற்சிக்க வேண்டும்.

அத்துடன் ஆடம்பரமான ஆடைகளுடனோ, அணிகலன்களுடனோ வாசிப்பு மேடைக்கு ஏறுவது கூடாது. இறைமக்களின் சிந்தனையை பராக்காக மாற்றுவதற்கு இது வழியாக அமைந்துவிடுவதுடன், நாம் வாசிக்கும் இறைவார்த்தைக்கு மக்கள் கவனம் செலுத்தாமல், எம்மைப் பற்றி அவர்கள் விமர்சிப்பதற்கு அது வழியாக அமைந்துவிடும்.

நாம் வாசித்த இறைவார்த்தைப் பகுதியானது கேட்டுக் கொண்டிருக்கும் இறைமக்களுக்கு புரியவில்லை என்றால், வாசித்தது சரியில்லை என்றுதான் அர்த்தம். அத்தவறை வாசித்தவரே ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். ஏனென்றால் இறைவன் அளித்த வாய்ப்பை நாம் அவர் விரும்பியவாறு பயன்படுத்தவில்லை. எனவே வாசகம் வாசிப்பது என்பது ஒரு காத்திரமான மாபெரும் பொறுப்பாகும்.

மொழி ரீதியிலும், ஆன்மீக ரீதியிலும் எம்மை நன்கு ஆயத்தம் செய்தபின்னரே நாம் வாசிக்க வேண்டும். தூய ஆவியினால் நாம் அபிஷேகம்செய்யப்பட்டு இறைவார்த்தையை வாசிக்கவேண்டுமானால் நாம் நன்கு செபிக்க வேண்டும்.

சில இடங்களில் ஒரு சிலரே தொடர்ச்சியாக வாசகங்களை வாசிப்பதைக் காணமுடிகிறது. நன்கு வாசிக்கக்கூடிய ஏனைய இறைமக்களுக்கும் இந்த "இறைவாக்கினர்" பணியை பகிர்ந்து கொடுக்கலாம் அல்லவா? இது எமது 'பகிர்தல்' வாழ்வை வளமுள்ளதாக்கும்.

எனவே நாம் வாசகங்களை வாசிக்கையில் ஆவியின் துணையுடன், இறைமக்களுக்கு விளங்கக் கூடிய விதத்தில், சிறந்த மொழியாற்றலுடன், ஆன்மீக ஆயத்தத்துடன் வாசித்து இறைமக்களுக்கு உதவ முன்வருவோமாக.

*"வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்."*

*"ஆதியிலே வார்த்தை இருந்தார். அவ்வார்த்தை கடவுளோடு இருந்தார். கடவுளாயும் இருந்தார்."*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# பெற்றோர் குழந்தைகளுக்கு மறைக்கல்வி வழங்குவது மிகவும் முக்கியம்

### – திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் –



கத்தோலிக்கப் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு மறைக்கல்வி வழங்க வேண்டும். இதன்மூலம் குழந்தைகள் தங்கள் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் உறுதியான நம்பிக்கைப் பயணத்தை மேற்கொள்ள முடியும் எனத் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறியுள்ளார்.

இந்தப் பணியில் முதலில் பெற்றோர் நம்பிக்கைக்கு சாட்சிகளாக விளங்க வேண்டும் என்று வலியுறுத்திய திருத்தந்தை, பிள்ளைகளை வளர்ப்பதில் எதிர்நோக்கும் பிரச்சனைகளைக் கண்டு பெற்றோர் பயப்படக்கூடாது என்றும் கூறினார்.

பிள்ளைகளுக்குக் கிறிஸ்தவக் கல்வி வழங்கும் முக்கிய பொறுப்பு குடும்பங்களுக்கு உள்ளது என்பதையும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

தனக்காக மட்டுமே வாழ்தல், நுகர்வுக் கலாச்சாரம், பொறுப்புக்களிலிருந்து விலகியிருக்கும் போக்கு போன்ற இக்காலத்தய போக்குகள் பல குழப்பங்களை ஏற்படுத்துகின்றன. ஆனால் கிறிஸ்தவ சமூகங்கள் எப்போதும் தகுந்த நம்பிக்கைப் பாதைகளைத் தேர்ந்துகொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

### பாலியல் கல்வி கற்பிப்பதற்கான பெற்றோரின் உரிமை

மனிதப் பாலியல் கூறுகள், இனவிருத்தி நலவாழ்வு உள்ளிட்ட விவகாரங்களில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதற்குக்கொண்டிருக்கும் உரிமையை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் இளையோர் குறித்த கொள்கைகள் மதிக்க வேண்டும் என்று ஐ. நா.வுக்கான வத்திக்கான் அதிகாரி பேராயர் பிரான்சிஸ் சுள்ளிக்காட் கூறினார்.

நல்லிணக்கம் கொண்ட சமுதாயச் சூழலில் ஒவ்வோர் இளைஞனும் யுவதியும் வளர்க்கப்பட வேண்டும் என்பதையும் பேராயர் சுள்ளிக்காட் ஐ. நா. நிறுவனத்தின் உயர்மட்ட அளவிலான கூட்டத்தில் நினைவுபடுத்தினார்.

### நல்லதோர் இந்தியாவை உருவாக்குவதில் திருச்சபையின் பங்கு

'நல்லதோர் இந்தியாவை உருவாக்குவதில் திருச்சபையின் பங்கு' என்ற தலைப்பில் இந்தியாவின் 164 மறைமாவட்டங்களிலிருந்து ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினரின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் சிசிஐ என்ற இந்திய கத்தோலிக்க அவையின் 11வது பொதுக்குழுக் கூட்டம், கொச்சியில் வருகிற நவம்பர் 24 முதல் 27 வரை நடைபெறவுள்ளது.

### ஐரோப்பாவில் மீண்டும் நற்செய்தி அறிவிப்பு

ஐரோப்பாவின் சில முக்கிய நகரங்களில் மீண்டும் நற்செய்தி அறிவிக்கும் புதிய திட்டத்தை புதிய நற்செய்திப்பணிக்கான வத்திக்கான் அவை அறிவித்துள்ளது. இப்புதிய முயற்சியானது 2012ம் ஆண்டு தவக்காலத்தில் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### உண்மை, நன்மைத்தனம் வழியாக இறைவன் மக்களை ஈர்க்கிறார்

தன்னில் நம்பிக்கை கொள்ளும்படி எவரையும் இறைவன் கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் உண்மை, நன்மைத்தனம் வழியாக மக்களை ஈர்க்கிறார் எனத் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் தனது மூவேளை தினச் செப உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அன்பு எப்போதும் சுதந்திரத்தை மதிக்கக்கூடியது. இயேசு கூறிய உவமைகளின் பொருளை புரிந்துகொள்ள அறிவுத்திறனைப் பயன்படுத்தியும், மனச்சுதந்திரத்துடனும் மக்கள் முயற்சி செய்ய வேண்டும். தன்னில் நம்பிக்கைகொள்ளும்படி எவரையும் இறைவன் கட்டாயப்படுத்துவதில்லை. ஏனெனில் அன்பு சுதந்திரத்தை மதிக்கிறது. அதேவேளை இறைவனோ உண்மை, நன்மைத்தனம் வழியாக மக்களை ஈர்க்கிறார் எனவும் திருத்தந்தை கூறினார்.

### உரோமையில் வாழ்ந்த 11 ஆயிரம் யூதர்களை திருத்தந்தை 12ம் பத்திநாதர் காப்பாற்றினார்

இரண்டாம் உலகப்போரின்போது திருத்தந்தை 12ம் பத்திநாதரின் நேரடித் தலையீட்டால் உரோமையில் 11 ஆயிரத்திற்கும் அதிகமான யூதர்கள் காப்பாற்றப்பட்டனர் என்று உரோமையிலுள்ள ஜேர்மன் தேசிய ஆலயமான சான்ட்டா மரியா தேல் அனிமா ஆலயத்தின் பொதுச் சுவடிக்கூடத்தில் ஆய்வுசெய்தபோது கிடைத்த ஆவணங்கள் கூறுகின்றன.

### பாரம்பரியத் தனித்தன்மைகளை மதித்து சமய உரையாடல் நடைபெற வேண்டும்

#### – கர்தினால் டர்க்சன் –

அநீதிகளுக்கான காரணங்களுக்கு எதிராக அனைத்து மதச் சமூகங்களும் இணைந்து போராடுவதற்கு அக்டோபர் மாதத்தின் அசிசி பல்சமயக் கூட்டம் நல்லதொரு வாய்ப்பாக இருக்கும் என வத்திக்கான் அதிகாரி கர்தினால் பீட்டர் டர்க்சன் தெரிவித்துள்ளார்.

'உண்மையின் திருப்பயணிகள் அமைதியின் திருப்பயணிகள்' என்ற தலைப்பில் உலகின் அனைத்துமதப் பிரதிநிதிகளும் இத்தாலியின் அசிசி நகரில் கூடுவதற்கு திருத்தந்தை விடுத்துள்ள அழைப்புப்பற்றிக் குறிப்பிட்ட வத்திக்கானின் நீதி மற்றும் அமைதி அவையின் தலைவர் கர்தினால் டர்க்சன், வாழ்விற்கான உரிமை பாதுகாக்கப்படுவதே அனைத்து முயற்சிகளின் முதல் நோக்கமாக இருக்க வேண்டும் எனவும், சமய உரையாடல்கள் அந்தந்த மதங்களின் பாரம்பரியத் தனித்தன்மைகள் மற்றும் வேறுபாடுகளை மதிப்பதாக இருக்க வேண்டும் எனவும் கூறினார்.

### 101 நாட்கள் இடைவிடாமல் செபமாலை

உலகின் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கும் திருச்சபையின் தூய்மையான வாழ்வுக்குமென கேரளாவின் தாமரச்சேரி மறைமாவட்டம் 101 நாட்கள் இடைவிடாமல் செபமாலை செபிக்கும் பக்தி முயற்சியைத் தொடங்கியுள்ளது.

வருகிற அக்டோபர் 29 வரை நடைபெறும் இச்செபமாலை வழிபாட்டில் தாமரச்சேரி மறைமாவட்டத்தின் 117 பங்குகளிலிருந்து இரவும் பகலும் தொடர்ச்சியாக கத்தோலிக்கர் கலந்துகொள்கிறார்கள்.

### ஐரோப்பாவில் வாழும் நாடோடி இனத்தவரின் பிரதிநிதிகள் 2000 பேருடன் திருத்தந்தை சந்திப்பு

ஐரோப்பாவில் வாழும் நாடோடி இனத்தவரின் பிரதிநிதிகளாக உரோம் நகர் வந்திருந்த ஏறத்தாழ 2000 பேரை வத்திக்கானில் சந்தித்த திருத்தந்தை 16ம் பெனடிக்ட், தற்போது நாடோடி இனத்தவரின் மாண்பு பற்றி விழிப்புணர்வு அதிகரித்து, அவர்களின் வாழ்வுச்சூழல் மேன்மையடைந்து வருவதுகுறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். ஐரோப்பிய நாடோடி இன மக்களுடன் தொடர்ந்து பணியாற்றிவரும் திருச்சபை அவர்களிடையே நற்செய்தியை அறிவிப்பதற்கான துணிவையும், அர்ப்பணத்தையும் அம்மக்களிடமிருந்தே எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

பல்வேறு நாடுகளில் பல்வேறு பெயர்களைத் தாங்கி வாழும் நாடோடி இனத்தவர் இன்று உலகில் 3.60 கோடி மக்கள் என்றும், இவர்களில் 1.20 கோடி பேர் ஐரோப்பாவில் வாழ்கின்றனர் என்றும் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

## உலக இளைஞர் தின நிகழ்வில் கலந்துகொள்ள ஸ்பெயின் நாட்டிற்குச் சென்ற திருந்தந்தையை வரவேற்கும் மக்களும் இளையோர்களும்





### 53 தடவைகள் இரத்ததானம் செய்த அருட்சகோதரி

கடந்த 29 ஆண்டுகளில் 53 தடவைகள் இரத்ததானம் செய்ததற்காக கொங்கொங் நாட்டு அருட்சகோதரி ஒருவரை செஞ்சிலுவைச் சங்கம் கௌரவித்துள்ளது. இவர் திருஇரத்த சபையைச் சார்ந்த அருட்சகோதரி ஆவார்.

25 தடவைகளுக்குமேல் இரத்ததானம் செய்த 1,600 பேர் கொங்கொங்கில் செஞ்சிலுவைச் சங்கத்தால் கௌரவிக்கப்பட்ட நிலையில் அருட்சகோதரி 53 தடவைகள் இரத்ததானம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சீனாவில் சமய சுதந்திரத்தை வலியுறுத்தி பேரணி

சீனாவில் சமய சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி ஹாங்காங் முன்னாள் ஆயர் கர்தினால் ஜோசப் ஜென் தலைமையில் கத்தோலிக்கர் ஹாங்காங்கில் மாபெரும் பேரணி ஒன்றை நடத்தினர். சீனாவில் சிறையிலுள்ள 'திருத்தந்தைக்கு விசுவாசமாயுள்ள' மறைந்துவாழும் கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்த ஆயர்களும் அருட்பணியாளர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் இப்பேரணியில் வலியுறுத்தப்பட்டது.

### 150 ஆண்டுகள் நிறைவைக் காணும் வத்திக்கான் கத்தோலிக்க பத்திரிகை

வத்திக்கானில் இருந்து வெளிவரும் திருப்பீடச்சார்பு தினத்தாளான 'லொசவற்றறே ரொமானோ' (L'Osservatore Romano) என்ற பத்திரிகை இவ்வாண்டு 150 ஆண்டுகள் (1861 - 2011) நிறைவைக் கொண்டாடுகின்றது.

இப்பத்திரிகை விசுவாசிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கிறிஸ்துவின் அருள்வாக்கு மற்றும் திருச்சபையின் அதிகாரபூர்வ போதனைகளின் ஒளியில் காண உதவுகின்றது எனத் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் பாராட்டினார்.

இப்பத்திரிகையின் பணியாளர்கள் தங்களது பணியைச் செய்வதற்கு நவீன தொழில்நுட்பங்களில் போதுமான பயிற்சியையும், திறமைகளையும் வளர்த்துக்கொள்வது மட்டும் போதாது. செப உணர்வு, சேவை மனப்பான்மை, கிறிஸ்துவுக்கும் அவரது போதனைக்கும் விசுவாசமாக இருப்பது ஆகியவற்றையும் வளர்த்துக்கொள்ளுமாறு திருத்தந்தை வலியுறுத்தினார்.

### திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரை நவீன தொடர்புசாதனங்களின் பாதுகாவலர் என அறிவிக்குமாறு கோரிக்கை

அருளாளர் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் புனிதர் என அறிவிக்கப்படும்போது அவர் நவீன சமூகத்தொடர்பு சாதனங்களின் பாதுகாவலர் என்று அறிவிக்கப்படவேண்டும் என இத்தாலிய பத்திரிகையாளர் கழகம் கேட்டுள்ளது.

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புதிய தொழில்நுட்பங்களுக்கு விவேகத்துடன் திறந்த மனது காட்டினார் என்று கூறி இவர் நவீன சமூகத்தொடர்பு சானதங்களின் பாதுகாவலர் என அறிவிக்கப்படவேண்டும் என உரோம் நிருபர் கழகமும் வலியுறுத்தியுள்ளது.

மறைந்த திருத்தந்தை தனது 26 வருட பாப்பிறைப் பணியின்போது ஊடகத்துறையினரோடு நெருங்கிய உறவு வைத்திருந்தார் எனவும், இவரைப்போல் வேறு எந்தத் திருத்தந்தையும் இத்தகைய நெருக்கமான தொடர்பை வைத்திருந்ததில்லை எனவும் சுட்டிக்காட்டப்படடுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையின் மறைதூதுப் பணியில் கிறிஸ்தவக் கல்விப்பணி

அருட்பணி.
ஜெராட்டீ ரொசய்ரோ அ.ம.தி

*முன்னுரை*

இன்றைய உலகிற்கு நம்பிக்கையையும், மகிழ்வையும் தன் நற்செய்திப்பணியால் அளித்திட திருச்சபை முனைப்புக் கொண்டுள்ளது. தனது முனைப்பில் கிறிஸ்தவக் கல்விப் பணியை சிறப்பான பொறுப்பாகக் கணிக்கின்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு வித்திட்ட திருத்தந்தை 23ம் யோவான் மாறும் உலக நியதிக்கு ஏற்ப மாற்றம்பெற வேண்டிய மானிட தேடலுக்கு, நற்செய்தியின் ஒளியில் எழும் அர்ப்பண உணர்வால் கிறிஸ்தவக் கல்வி வழிகாட்டியாக நின்றது என்றார். மேலும், திருச்சங்கம் நாடும் திருச்சபையின் மறுமலர்ச்சி, உலகுடன் திருச்சபையின் உடனிருப்பின் வளர்ச்சி என்பவற்றுக்கு கிறிஸ்தவக் கல்வித் தொண்டு அவசியமாகும் எனக் கோடிட்டுக் காட்டினார்.

வத்திக்கான் சங்கத்தில் பங்குகொண்ட 3ம் உலக நாடுகளின் ஆயர்கள், கிறிஸ்தவ கல்விக்கூடங்கள் திருத்தூதுப் பணிக்கு உதவ வேண்டும் எனவும், கிறிஸ்தவப் பள்ளிகளில் பயிலாத கிறிஸ்தவர்களின் நிலை பற்றியும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் விழிப்பூட்டினார்கள்.

இப்பின்புலத்தில் வத்திக்கான் சங்க ஏட்டில் இடம்பெற்ற கிறிஸ்தவ கல்வி பற்றிய அறிக்கை கிறிஸ்தவ கல்வியின் பேராவணமாகும். இங்கு இவ்வறிக்கையில் காணப்படும் கிறிஸ்தவக்கல்வியின் பங்களிப்பு, கிறிஸ்தவ கல்விக்கூடங்களின் பணியின் தன்மை பற்றிய தொகுப்பை நோக்குவோம்.

*கிறிஸ்தவ கல்வியின் நோக்கம்*

இன்றைய சமுதாயத்தில் பல்பரிமாணக் கல்வி நின்று நிலவுகின்றது. இவை மானிடரை தம் சமூக வாழ்வில் பங்கெடுக்கத் தயாரிக்கின்றது. ஒழுக்கநெறி விழுமியங்களை மனச்சான்றின் ஒளியில் ஆய்ந்து வாழ்வில் கடைப்பிடிக்க வழிகாட்டுகின்றது. எனினும் இப்பல்பரிமாணக் கல்வியின் மத்தியில் கிறிஸ்தவக் கல்வி தனிச்சிறப்பு பெற்றது என்பது இவ்வறிக்கையின் அடிநாதக் கருத்தாகும்.

மாண்புமிக்க மானிடருக்கு கல்வி பெறல் அடிப்படை உரிமையாகும். ஆக, மானிடம் பெறும் கல்வி அவர்கள் வாழ்க்கை இலக்குக்கு பொருந்தியதாக, அவர்கள் பண்பு, பால் வேறுபாடு, நாட்டின் பண்பாட்டுக்கும், மரபுக்கும் ஒத்ததாக அமைய வேண்டும். தனித்துவத்தை இழக்காததாகவும் பன்மையில் ஒருமை பேணும் உண்மையான ஒற்றுமையைப் பேணவும், நேர்மையுடன் நீதியால் கைகூடும் அமைதியை வளர்க்கவும், சகோதரத்துவ உறவுகொள்வதற்கும் வழிவகுப்பதாக கல்வி அமைய வேண்டும். அவரவர் சமூகங்களைக் கண்முன் கொண்டு கிறிஸ்தவக்கல்வி மானிடரை உருவாக்க வேண்டும் (எண் 1).

மேலும் சிறுவரும், இளையோரும் ஒழுக்க விழுமிய நலன்களை நேரிய மனச்சான்றோடு சீர்தூக்கிப் பார்க்கவும், உள்ளார்ந்த பற்றுதலுடன் அவற்றைத் தழுவவும், உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் இறைவனை வழிபடவும் (யோவா 4:23) உண்மையான நீதியும், தூய்மையும் வெளிப்படும் விதத்தில் (எபே 4:22-24) தம் வாழ்வை வடிவமைக்கப் பயிற்சி பெறவும், அன்புணர்வால் தூண்டப்படவும் கிறிஸ்தவக் கல்வி அவர்களுக்கு துணையாகிட வேண்டும். ஏனென்றால் மேற்கூறியவை அவர்கள் வாழ்வில் கைகூடுவதற்கு அவர்கள் உரிமை பெற்றுள்ளார்கள். (எண் 2). "கற்கக் கசடற கற்பவை கற்றபின், அதற்கு தக நிற்பது" ஆறத் தேர்வாகும்.

*கிறிஸ்தவக் கல்வியில் பங்களிப்பு*

இங்ஙனம் மானிட முதிர்ச்சியை நோக்காகக் கொண்டுள்ள கிறிஸ்தவக் கல்வி, மானிட சமூகத்தில் அனைவரதும் "நிறைவாழ்வின் வழியை" (உரோ 14 : 17 : யோவா 10:10) காணும் அறிவும், நிறைவாழ்வை அறிக்கையிட்ட (யோவா 10:10, லூக் 4:18-20) கிறிஸ்து இயேசுவின் மறைதூதுப் பணியில் அங்கமாகின்றது. ஆக, மக்களின் முழுநிறைவை ஊக்குவித்து, மனிதநேயம் கொண்ட உலகை உருவாக்கிட அனைவருக்கும் உதவியளிப்பது திருச்சபையின் கடப்பாடெனக் கொள்கிறது (எண் 3). இப்பொறுப்பையும், கடமையையும் தன்னகமாய்க் கொண்ட திருச்சபை பெற்றோரை கிறிஸ்தவக் கல்வியில் பங்குகொள்ள அழைக்கின்றது. ஏனென்றால் பிள்ளைகளுக்கு கல்வி அளிக்கும் முதன்மைப் பொறுப்பு பெற்றோர்களது என திருச்சபை நம்புகின்றது.

அடுத்து கல்விப் பணியில் அர்ப்பணிப்புடன் பங்குகொள்ள ஆசிரியர்களையும், ஆசிரியைகளையும் பணிக்கின்றது. திருச்சபையின் இப்பணிப்பு பின்வரும் வள்ளுவ வாக்கை நினைவுகூரச் செய்கின்றது. தக்கார் தகவிலார் என்பது அவர்தம் எச்சத்தால் அறியப்படும்.

அதாவது உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தனது சமூகத்திற்கு வழங்கும் தொண்டைப் பொறுத்தே வரலாற்றில் பதிவு பெறுகின்றனர். இது கல்வித் தொண்டால் சிறப்புற நடைபெறுகின்றது. ஏனெனில் அனைத்து சமூகநலப் பணிகளிலும் கல்வித் தொண்டே அடிப்படையும் அத்திவாரமுமாகும். இதனை தொடர்ந்து, சமூக - சமய - பண்பாட்டு வாழ்வை வளர்க்கும் கழகங்கள், குடிமைச் சமூக சேவை நிறுவனங்கள், அமைப்புகளையும், அனைத்து சமூகத்தினரையும் பிள்ளைகளின் கல்விப் பணியில் பங்கேற்க திருச்சபை அழைக்கின்றது.

இறுதியாக எல்லாக் குடிமக்களும் அறிவு வளர்ச்சியில் தகுந்த சமநிலையை எய்துவதற்கு அரசின் பங்களிப்பைக் கோடிட்டுக் காட்டுகின்றது. மக்களின் குடிமைசார் கடமைகள், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் வாழ அவர்களைத் தயாரிப்பது, சிறுவர் உரிமையைப் பேணிவளர்ப்பது, ஆசிரியரின் திறமைகளையும், கல்வியின் தரத்தையும் விழிப்புடன் கவனிப்பது என அரசின் பங்களிப்பின் தன்மையைப் பட்டியலிடுகின்றது திருச்சபை (எண் 6).

இக்காலத் தேவைகளுக்கும், அறிவியல் ஐயப்பாடுகளுக்கும் தீர்வு காணும் வகையில் பல்கலைக்கழகத்தினர் முழுச் சுதந்திரத்துடன் உழைத்திடுவது அவர்களது கடப்பாடாகும் என திருச்சபை அறிவுறுத்துகின்றது.

*கிறிஸ்தவக் கல்விக்கூடங்களின் சிறப்பு*

கிறிஸ்தவக் கல்வியின் முதன்மை நோக்கை அடைய கல்வியில் அனைத்து நிலையினரின் பங்களிப்பையும் ஊக்குவித்து நாடும் திருச்சபை கிறிஸ்தவக் கல்விக்கூடங்களின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. அனைத்து நோக்குகளும், பங்களிப்புகளும் நடைமுறைச் சாத்தியமாகிட களம் சரியாக அமைய வேண்டும்.

கல்விப் பயிற்சிக்கான எல்லா வழிவகைக்குள்ளும், வலயங்களுக்குள்ளும் கல்விக்கூடம் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அறிவு ஆற்றலைப் பேணிவளர்த்தல், சரியாக மதிப்பீடு செய்யும் ஆற்றலை வளர்த்தல், முன்னைய தலை முறையினரிடம் பெற்ற பண்பாட்டு கருவுலங்களுக்கு மாணவர்களை இட்டுச்செல்லல், விழுமிய நலன்களை உணர்த்தும் திறமை வளர்த்தல், வாழ்க்கையில் மேற்கொள்ள இருக்கும் தொழிலுக்கு தயார் செய்தல், பல்வேறு நிலையிலுள்ள மாணாக்கர் மத்தியில் நட்புறவை உருவாக்கி, ஒருவர் ஒருவரை புரிந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்த்தல் என இன்னும் பலவற்றுக்குகல்விக்கூடம் மையமாகும். இத்தகைய மானிட வளர்ச்சியை எய்துவதற்கு களமான கல்விக்கூடம் நாம் பெற்ற கிறிஸ்தவ நம்பிக்கை எனும் கொடையை நாளும் பொழுதும் உணர்த்தி வளர்க்கும் களமாகிட வேண்டும் (எண் 5). கிறிஸ்தவ நம்பிக்கை என்பது கிறிஸ்தவ வாழ்வுக்கு அச்சாணியாகும். அது என்றும் ஒருவரது எதிர்நோக்கை வளரச் செய்கிறது. (உரோ4:13 - 21).

கிறிஸ்தவக் கல்விப் பணி திருச்சபையின் நிறைவாக மறைத்தூதுப் பணியில் சிறப்பான பணியாகும். ஆக இன்று மாறிவரும் கல்விப் புலத்தின் மாறுதல்களை உள்வாங்கி நம் கிறிஸ்தவக் கல்விப் பணியின் தரத்தை திறனாய்வு செய்வது இன்றைய தேவையாகும்.

ஒரு சமூகத்தினரின் தனித்துவம், பண்பு, தேவைகள், எதிர்காலம், நிறைவாழ்வு போன்றவற்றிற்கு கல்வியே கருந்தனம் என்பது திருச்சபையின் நிலைப்பாடாகும். திருச்சபை நாடும் கிறிஸ்தவ சமூகத்தை தனித்துவமாய் வளர்க்கவும், வழிநடத்தவும் அவரவர் தத்தம் தாய் மொழியில் கல்வி பெறும் வாய்ப்பை நோக்கி நகர்வதற்கு தலத்திருச்சபையில் இடமுண்டு. 'கிறிஸ்தவக் கல்வி அறிக்கையின்' அடிப்படையில் கல்விப் பணியின் தன்மையை முழுமையாக வாழ்வித்தால், கிறிஸ்தவக் கல்விக்கூடங்களில் பேணி வளர்த்தால் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அது வழியாகும்.

கிறிஸ்தவக் கல்வியை அதன் முழுமைத் தன்மையுடன் வழங்க அனைத்து வழிவகைகளையும் செய்ய வேண்டிய கடப்பாட்டைக் கொண்டவர்கள் அருட்பணியாளர்களாவர் (எண் 2). கல்வி அறிக்கையில் காணப்படும் இப்பணிப்பு, இன்னும் மேய்ப்பனில்லாத ஆடுகளாய் நிற்கும் நம் கல்விக்கூடங்களை தூக்கிவிடுவதற்கு நம் அருட்பணியாளர்களின் துணையை நாடிட நம்மைத் தூண்டுகின்றது. நம் நம்பிக்கையை வளர்க்க இன்னும் இடமுண்டு.

பல்பரிமாண அந்நிய கலாச்சாரத் தாக்கங்களுக்குப் பலியாகி, பாரம்பரிய கலாச்சார வேர்களை இழந்து, இயல்பு வாழ்வில் தடுமாறி, நாளைய வாழ்வுக்கு அடிப்படை தேடி இடறும் இன்றைய சூழமைவில் முறைசார் கல்வியும், விழிப்புணர்வுக் கல்வியும் நமது கல்விக்கூடங்களில், மறைக்கல்வி வலயங்களில் இடம்பெறுவது இன்றைய தேவையாகும்.

முறைசார் கல்வி அறிவைப் பெறமுடியாத வாய்ப்பை இழந்தவர்களுக்கு முறைசாராத வழிகளில் அறிவினைப் புகட்டும் ஆக்கப் பணியில் தியாகத்துடன் ஈடுபடுவதுடன், பல மறைமாவட்டங்கள், ஒரே மறைமவட்டத்துக்கும் மேய்ப்புப் பணி வலயங்கள் ஒன்றிணைந்து, துறவிகளின் ஒத்துழைப்புடன் தொழிற் கல்லூரிகள், ஆய்வு மையங்கள் அமைத்து கிறிஸ்தவர்களின் திறமைகளை வளர்க்க கவனம் செலுத்துவதும் இன்றைய தேவையாகும்.

சமய சுதந்திரத்தை தத்தம் சமய அறநெறிக் கோட்பாடுகளுக்கு அமைய பேணிட கல்வி அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும் எனப் பணிக்கின்றது திருச்சபை. சங்கத் தந்தையரின் இவ்விருப்பின்படி கிறிஸ்தவப் பள்ளிகளில் பயிலும் கத்தோலிக்கர் அல்லாதவர்கள், பிறபள்ளிகளில் பயிலும் கிறிஸ்தவர்கள் நிலைபற்றி அக்கறைகொள்வதும் தேவையாகும்.

"பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்" என்ற பாரதியின் பார்வையில், கல்விப் பணியில் வெறும் அரச ஊழியர்களாகவே பணிபுரிவது, பணம் ஈட்டும் நோக்குடன் ஏழைகள் படிக்க முடியாதவிதத்தில் கல்விக்கூடங்களை நடத்துவது போன்ற இன்னோரன்னவை நோக்கப்பட வேண்டும்; மாற்றங்காண வேண்டும். நற்செய்தியின் ஒளியில், திருச்சபையின் மறைதூதுப் பணியில் மாற்றுமுறை காண வேண்டும்.

"துன்பம் உறவரினும் செய்க, துணிவு ஆற்றி இன்பம் பயக்கும் வினை" என்பது கிறிஸ்தவ கல்விப் பணியில் உணர்ந்து வாழப்பட வேண்டிய விழுமியமாகும். மேலும், ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவால் கல்விக்கு இடையூறு விளையக்கூடிய இடங்களில் தளரா மனமும், அர்ப்பணிப்பும் கொண்ட கல்விப் பணியின் தேவை உணரப்படுகின்றது.

"கிறிஸ்தவ கல்வி" அறிக்கை வத்திக்கான் சங்கம் வழங்கிய கிறிஸ்தவ கல்விக்கான பேராவணமாகும். இன்றைய சூழமைவுக்கு இவ்வறிக்கை ஓர் சவாலாகின்றது. அதேவேளை கல்விப் பணியால் எதிர்கால சமுதாயம் "வயதில் வளர வளர ஞானத்திலும் வளர..." (லூக் 2:52) அடித்தளமிட இவ்வறிக்கை தூண்டலாகின்றது.

# புனிதர்களின் பாதையில்

குரு – (கி.பி. 1581 – 1660)

## புனித வின்சென்ற் டி போல்

புனித வின்சென்ற் டி போல் பிரான்சில் காஸ்கனி என்ற நகரில் பிறந்தார். குருத்துவப் படிப்பிற்குப் பின், பாரிஸில் பங்குத்தந்தையாக பணியாற்றினார். சில ஆண்டுகளுக்குப்பின் தந்தை பெருய்ல் என்பவரின் தோழமையினால் இவரது ஆன்மீகம் ஆழமடைந்தது. 40 வயதளவில் முற்றிலும் இறைவனுடன் ஒன்றியவராக வாழ்ந்தார். எங்கெல்லாம் இவரது தியாகத்தொண்டு தேவைப்பட்டதோ அங்கெல்லாம் முழுமையாகத் தம்மை அர்ப்பணித்தார்.

நாளடைவில் டிகோண்டி பெருமகளும் அவரின் கணவரும் எளியோருக்குப் பணிபுரிய முன்வருவோருக்கு நிலம், மானியம் முதலானவைகளை வழங்குவதாக வாக்களித்தனர். முதலில் வின்சென்ற் இதற்குத் தலைமையேற்க முற்றிலும் தயங்கினார். ஆனால் நாளடைவில் இப்பணியை ஏற்றுக்கொண்டு "வின்சென்சியன்" என்ற துறவறசபைக் குருக்களை உருவாக்கினார்.

புனிதர் ஏற்கெனவே ஆபிரிக்காவுக்கு முகமதியன் ஒருவனால் நாடுகடத்தப்பட்ட நாட்களில், அங்கே அடிமைச் சந்தையில் இவர் ஆற்றிய பணிகளின் அனுபவம் இவருக்குக் கைகொடுத்து




செப்ரம்பர்

உதவியது. இவருடைய சபைத் துறவிகள் ஏழைகள் மற்றும் ஆதரவற்றோரை பேணுவதற்காகவே தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று சபை ஒழுங்குகளை அமைத்தார். இந்த வியத்தகு பணிகளைப் பார்த்து லூயி தெ மரியாக் என்பரின் தாராளமான பொருளுதவியுடன்

**மாதமொரு புனிதரை அறிந்து கொள்வோம்**

பெண்களுக்கும் ஒரு துறவற சபையைத் தோற்றுவித்தார். "பிறரன்புச் சகோதரிகள்" என்று இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

இவற்றோடு நின்றுவிடாமல், 3ஆம் சபை ஒன்றையும் அவர் காலத்தில் தொடங்கினார். இந்தச் சபையினர் ஆழ்ந்த தியாக உணர்வுடன், ஏழை எளியோரின் கண்ணீரை இயேசுவின் பெயரால் துடைக்க வேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன் அன்றுபோல் இன்றும் திருச்சபையின் எல்லாப் பகுதிகளிலும் அன்பையும் இரக்கத்தையும் பரப்புகின்றனர்.

இதில் வியப்பு என்னவென்றால், வின்சென்ற் இயல்பாகச் சினமே உருவானவராகக் காணப்பட்டவர். "கடவுளின் அருள் எனக்கு இருந்திராவிடில், நான் இறுதிவரை கல் மனதினனாக, எல்லோருக்கும் சுமையாகவே இருந்திருப்பேன்" என்கிறார்.

திருச்சபையில் இருக்கும் எல்லாக் கொடை நிறுவனங்களுக்கும் பாதுகாவலராக பாப்பு 13 ஆம் சிங்கராயர் புனித வின்சென்ரை அறிவித்தார்.

தலத் திருச்சபையில் நாம் காணும் வின்சென்ட் டி போல் 3ஆம் சபையினரிடம் தாராளமான பொருளுதவி கொடுத்து அவர்கள் இயேசுவின் பெயரால் இன்னும் பன்மடங்கு தொண்டு செய்ய உதவுவோம்.

*சிந்தனைக்கு புனிதரின் நூலிலிருந்து :* விசுவாசக் கண்ணால் ஏழைகளைப் பார்க்கும்போது எளிமைத்தனத்தைத் தெரிந்து கொண்டு இறைமகனின் வடிவத்தை அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பது தெரியவரும்.... எனவே இயேசுவின் மனப்பான்மையை நமதாக்கிக்கொண்டு, அவரைப் பின்பற்றி ஏழைகளைப் பேணுவோம். ஆறுதல் அளிப்போம். உதவிபுரிந்து அவர்களை ஆதரிப்போம். கடவுள் ஏழைகளை அன்பு செய்கிறார். ஏழைகளை அன்பு செய்வோரையும் அன்புசெய்கிறார். அவர்களின் இடுக்கண்களில் பங்கேற்றுத் திருத்தூதர் பவுல் கூறுவதுபோல் "எல்லோருக்கும்எல்லாமாக" நடப்போம். பிறருடைய துயர் துடைப்பதில் மிகுந்த பங்கேற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தையின் உலக மறைபரப்பு ஞாயிறு தினச் செய்தி



## இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி உலக மறைபரப்பு ஞாயிறு தினம்

"தந்தை என்னை அனுப்பியதுபோல
நானும் உங்களை அனுப்புகின்றேன்" (யோவான் 20:21)

கிறிஸ்தவ யுகத்தின் புதிய மிலேனியம் ஆரம்பமாகிய 2000ஆம் ஜூபிலி ஆண்டு தொடர்பாக "தொடக்க கிறிஸ்தவர்களின் ஆர்வத்துடன்" (திருத்தூது மடல், புத்தாயிரமாம் ஆண்டின் நுழைவினிலே – Novo Millennio Ineunte, 58), நற்செய்தி அறிவிப்பதற்கான அர்ப்பணிப்பு புதுப்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப்பற்றி வணக்கத்துக்குரிய 2ஆம் அருளப்பர் சின்னப்பர் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார். தமது இருப்பை முழுமையாய் வாழ்வதற்குரிய ஆழ்ந்த காரணத்தைத் தேடுகின்ற மனுக்குலத்துக்கும், ஒவ்வொரு தனிநபருக்கும் திருச்சபை ஆற்றக்கூடிய விலையுயர்ந்த பணியாக இது அமைகிறது. எனவே, உலக மறைபரப்புத் தினம் கொண்டாடப்படும் ஒவ்வொரு ஆண்டிலும் அதே அழைப்பு எதிரொலிக்கப்படுகின்றது. உண்மையில், இடைவிடாத நற்செய்தி அறிவிப்புப் பணி திருச்சபைக்கு, அவளது ஆர்வத்துக்கு, அவளது திருத்தூதுத் தன்மைக்கு புத்துயிர் அளிக்கிறது; புதிய சந்தர்ப்பங்களுக்கு – நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட வேண்டியவர்களுக்கு – உகந்த வகையிலும் மறைப்பரப்பு அழுத்தத்தினால் உயிரூட்டமளிக்கும் வகையிலும் அவளது மேய்ப்புப்பணி அணுகுமுறைகளில் புதுப்பித்தலையும் ஏற்படுத்துகின்றது: "மறைபரப்புப் பணியானது திருச்சபையைப் புதுப்பித்து விசுவாசத்திற்கும் கிறிஸ்தவ அடையாளத்திற்கும் புத்துயிர் அளித்து, புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் வழங்குகின்றது. அடுத்திருப்பவர்க்கு கொடுக்கும்போது விசுவாசம் உறுதியடைகின்றது! திருச்சபையின் உலகளாவிய மறைப்பரப்பு அர்ப்பணத்தில்தான் கிறிஸ்தவர்களின் புதிய நற்செய்திப் பணி ஊக்கமும் உதவியும் பெறுகின்றது (2ம் அருளப்பர் சின்னப்பர், சுற்றுமடல் மீட்பரின் பணி, 2).

### சென்று அறிவியுங்கள்

இறைவழிபாட்டில், குறிப்பாக, "செல்லுங்கள்..." (மத் 28: 19) என இயேசு திருத்தூதர்களுக்கு வழங்கிய பணிப்புரையை மீண்டும் நினைவுப்படுத்தி நிறைவடையும் நற்கருணைக் கொண்டாட்டத்தில், இந்நோக்கமானது மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது. திருவழிபாடானது ஒருவரை எப்பொழுதும் "உலகிலிருந்து" அழைப்பதாகவும் தாம் பெற்ற அனுபவத்திற்கு சான்று பகர "உலகினுள்" புதிதாக அனுப்புவதாகவும் அமைகின்றது. மீட்பளிக்கும் ஆற்றலுள்ள இறைவார்த்தை, மீட்பளிக்கும் ஆற்றலுள்ள கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள். எம்மாவுக்குச் சென்ற இரு சீடர்களைப்போல, உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்த அனைவரும் மற்றவருக்கு அவரை அறிவிக்கவேண்டுமென உணர்ந்தார்கள். அப்பத்தை பிட்கையில் ஆண்டவரைக் கண்ட அவர்கள், உடனடியாக புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பினர். பதினொருவரும் அங்கே ஒன்றாகக் குழுமியிருப்பதைக்கண்டு வழியில் தமக்கு நிகழ்ந்தவற்றை அவர்களுக்குச் சொன்னார்கள். (லூக்கா 24:33-34) "அவரது முகத்தை அடையாளம் காண விழிப்புடன் ஆயத்தமாக இருந்து 'நாம் ஆண்டவரைக் கண்டோம்' எனும் நற்செய்தியுடன் சகோதர சகோதரிகளிடம் ஓடிவர வேண்டும்" என திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் எமக்கு அறிவுறுத்தியுள்ளார். (திருத்தூது மடல், புத்தாயிரமாம் ஆண்டின் நுழைவினிலே – Novo Millennio Ineunte, 59)

### அனைவருக்கும்

அனைவருக்கும் நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது; அனைவரும் நற்செய்தி அறிவிப்பின் பயனை அனுபவிக்கிறார்கள். "இறைத்தந்தையின் திட்டப்படி மகன் அனுப்பப்பட்டதிலிருந்தும், தூய ஆவி அனுப்பப்பட்டதிலிருந்தும் திருச்சபை தோன்றியது. எனவே, நற்செய்தி அறிவிப்பதே பயணம் செய்யும் திருச்சபையின் இயல்பான பணி" (இரண்டாம் வத்திக்கான் சங்கம், திருச்சபையின் நற்செய்தி பணி 2). இது "திருச்சபையின் ஆழ்ந்த அடையாளத்துக்கே உரிய அருளும் அழைப்புமாக உள்ளது. நற்செய்தி அறிவிப்பதற்காகவே அவளது இருப்புத்தன்மை உள்ளது (6ம் சின்னப்பர், திருத்தூது அறிவுரை மடல் - நற்செய்தி அறிவிப்பு, 14). எனவே, அவள் தனக்குள்ளேயே ஒருபோதும் பின்வாங்கக்கூடாது. அனைத்தையும் கடந்துசெல்லவேண்டும் என்பதற்காகவே அவள் குறிப்பிட்ட இடங்களில் ஊன்றப்பட்டுள்ளாள். கிறிஸ்துவின் பணிப்புரைக்குப் பணிந்து, அவரது அருளாலும் அன்பாலும் உந்தப்பட்டு, எல்லா மனிதரையும் மக்களினங்களையும் கிறிஸ்துவில் நம்பிக்கைகொள்ள வழிநடத்துவதற்காக அவளது செயல் அவர்கள் மத்தியில் முழுமையாகவும் உண்மையாகவும் உடனிருக்கின்றது (திருச்சபையின் நற்செய்திப் பணி 5).

இக்கடமையானது தனது அவசரத்தன்மையை இழந்துவிடவில்லை. உண்மையில் "திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மீட்பராம் கிறிஸ்துவின் பணியானது அதன் நிறைவைக் காண்பதற்கு இன்னும் வெகுதொலைவில் உள்ளது. இப்பணியானது இன்னும் தொடக்க நிலையில் உள்ளதெனவும் இப்பணிக்காக நாம் எம்மை முழு இதயத்துடன் அர்ப்பணிக்க வேண்டுமெனவும் மனுக்குலத்தைப்பற்றிய பரவலான கண்ணோக்கு சுட்டிக்காட்டுகின்றது" (2ம் அருளப்பர் சின்னப்பர், சுற்றுமடல், மீட்பரின் பணி 1). 2000 ஆண்டுகளின் பின்வரும் கிறிஸ்துவை அறியாமலும், மீட்பின் செய்தியை கேளாமலும் இன்னும் மக்கள் இருக்கிறார்கள் என்பதை அவதானிக்கும்போது நாம் திருப்தியடைய முடியாது.

மேலும், நற்செய்தி அறிவிப்பைப் பெற்றிருந்தும், அதை மறந்து, அல்லது அதைக் கைவிட்டும் திருச்சபையின் உறவிலிருந்து விலகியும் பலர் வாழ்கின்றனர்; பலர், பாரம்பரிய கிறிஸ்தவ சமூகங்கள்கூட, விசுவாச வார்த்தைக்குத் தம்மைத் திறந்துவிட விருப்பமில்லாதவர்களாக உள்ளனர். உலகமயமாக்கல் சிந்தனையாலும் ஏனைய கருத்தாக்க இயக்கங்களாலும், ஒப்பீடு கருத்தாக்கங்களும் ஊட்டம்பெற்று கலாச்சாரங்கள் மாற்றமடைகின்றன. இம்மாற்றமானது, நற்செய்திப் போதனையை உதாசீனம் செய்தும், இறைவன் இல்லை என்பதுபோல, அறநெறி விழுமியங்களுக்குப் பங்கம் விளைவித்தும், தமது நலன், இலகுவான பணம், தொழில்துறை, வெற்றி என்பவற்றை வாழ்வின் இலக்காகக் கொண்ட தேடலை பெருமைப்படுத்தும் மனநிலைக்கும் வாழ்க்கைமுறைக்கும் வழிவகுக்கின்றது.

### அனைவரதும் கூட்டுப்பொறுப்பு

அனைத்துலக மறைபரப்புப் பணியானது ஒவ்வொருவரையும், ஒவ்வொன்றையும், எப்பொழுதும் ஈடுபடுத்துகின்றது. நற்செய்தியானது, அதைப் பெற்றுக்கொண்டவர்களின் தனிப்பட்ட சொத்து அல்ல; மாறாக, அது பகிரப்படவேண்டிய ஒரு கொடை; நற்செய்தியானது அடுத்தவரைச் சென்றடைய வேண்டும். இறைவனின் மகத்தான செயல்களை அறிக்கையிடுவதற்காக இக்கொடையும், அர்ப்பணமும், ஒருசிலரிடம் மட்டுமல்ல, "தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர்..., தூய மக்களினத்தவர், அவரது உரிமைச் சொத்தான மக்கள்" (1 பேதுரு 2:9) ஆகிய திருமுழுக்குப்பெற்ற அனைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அனைத்துச் செயற்பாடுகளும் இதில் ஈடுபடுத்தப்படுகின்றது. உலகில் மறைபரப்பு செயல்பாடுகள் பற்றிய திருச்சபையின் அவதானமும் ஒத்துழைப்பும் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்கோ, நிகழ்வுகளுக்கோ மட்டும் வரையறுக்க முடியாது; பல மேய்ப்புப் பணிகளில் ஒன்றாகவும் இதைக் கருதவும் முடியாது. திருச்சபையின் மறைபரப்புத் தன்மையானது அடிப்படையான ஒன்றாகும். எனவே, இதை எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும். திருமுழுக்குப்பெற்ற ஒவ்வொருவரும், திருச்சபை குழுமங்களும் மறைப்பரப்புப் பணியில் ஒழுங்கான முறையிலும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையிலும் ஈடுபடுவது மட்டுமல்ல, அதை கிறிஸ்தவ வாழ்க்கை முறையாகக் கருதி, அதில் இடைவிடாமல் ஈடுபட வேண்டும். மறைபரப்புத் தினமானது வருடத்தில் வரும் ஒரு தனி நிகழ்வு அல்ல; இது திருச்சபையின் வாழ்விற்கு அடிப்படைப் பதிலாக அமையும். மறைபரப்பு அழைப்பிற்கு, நாம் பதிலளிக்கின்றோமா எனவும், எவ்வாறு பதிலளிக்கின்றோம் எனவும் தரித்து நின்று சிந்திப்பதற்குரிய பெறுமதிமிகு நிகழ்வாகும்.

### உலகலாவிய நற்செய்திப் பணி

நற்செய்திப்பணியானது பன்முகத்தன்மையை கொண்டுள்ளதுடன் பல்வேறு கூறுகளையும் இணைத்துள்ளது. இவற்றுள், மறைபரப்பு ஊக்குவித்தலில் ஒருமைப்பாட்டிற்கு எப்பொழுதும் சிறப்பான அவதானம் வழங்கப்பட்டுள்ளது. மறைபரப்பு பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் நற்செய்தி அறிவிப்புச் செயற்பாடுகளுக்கு உதவுமாறு திருத்தந்தையின் மறைப்பரப்புச் சபைகளின் வழியாக கோரிக்கை விடுக்கும் உலக மறைபரப்புத்தினத்தின் நோக்கங்களில் இதுவும் ஒன்றாகும். மறையாசிரியர், குருமடங்கள், குருக்கள் வழியாக திருச்சபையை நிறுவி அதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நிறுவனங்களுக்கு உதவிபுரிவதும் இதில் அடங்குகின்றது;

அத்துடன், ஏழ்மை, ஊட்டக்குறைவு, எல்லாவற்றிலும் மேலாக, குழந்தைகளின் ஊட்டக்குறைவு, நோய், சுகாதார பணிப்பற்றாக்குறை, கல்வி ஆகிய மிகவும் பாரிய சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு ஒருவரது சொந்த பங்களிப்பையும் இது குறித்து நிற்கின்றது. இதுவும் திருச்சபையின் மறைபரப்புப் பணியின் ஒரு பகுதியாகும். நற்செய்தி அறிவிக்கும்பொழுது மனித வாழ்வின் முழுமையான தன்மையை அவள் தனது இதயத்தில் ஏற்றுக்கொள்கிறாள். இறைவனின் ஊழியர் 6ம் சின்னப்பர் கூறியதுபோல, மனித மேம்பாடு, நீதி, எல்லா வகையான அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை, சிறப்பாக அரசியல் அரங்கில் சுய ஆட்சி உரிமைக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றை புறக்கணிப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## ஸ்பெயின் நாட்டில் இடம்பெற்ற 11வது உலக இளைஞர் தின நிகழ்வுகளில் பங்கேற்ற

# மன்னார் மறைமாவட்டக் குழுவின் அனுபவப் பகிர்வு

ஸ்பெயின் நாட்டின் மற்றிற் நகரில் கடந்த ஆவணி மாதம் 16ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை உலக இளைஞர் தினம் திருத்தந்தை பரிசுத்த பாப்பரசர் 16ம் பெனடிக்ற் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வுகள் ஆவணி 12ம் திகதி ஆரம்பமானது. இலங்கையிலிருந்து இரத்தினபுரி ஆயர் கிளிற்றஸ் ஆண்டகை தலைமையில் 7 குருக்கள் உட்பட மொத்தம் 29 இளைஞர் யுவதிகள் இந்நிகழ்விற்காக சென்றிருந்தனர்.

மன்னார் மறைமாவட்டத்திலிருந்து மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் யோகராச் பீரிஸ், தோட்டவெளிப் பங்கைச் சேர்ந்த மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியச் செயலாளர் செல்வன் டெலிஸ்ரன் நிஷாந், வங்காலைப் பங்கைச் சேர்ந்த மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியப் பொருளாளர் செல்வன் அந்திரேஸ் டயஸ் (கொன்சால்) ஆகியோர் பங்குபற்றினார்கள்.

ஆவணி 11ம் திகதி கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு 12ம் திகதி டோகா கட்டார் சர்வதேச விமான நிலையத்தினூடாக ஸ்பெயின் மற்றிற் நகரை அடைந்து மீண்டும் 22ம் திகதி மற்றிற் நகரில் இருந்து புறப்பட்டு 23ம் திகதி கொழும்பு சர்வதேச விமானநிலையத்திற்கு வந்தடைந்தோம்.

### இடம்பெற்ற நிகழ்வுகள்

ஆவணி 15ம் திகதி தொடக்கம் 18ம் திகதி வரை ஒவ்வொரு நாளும் காலையில் ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலியும் தொடர்ந்து மறைக்கல்வி வகுப்புக்களும் மறை சம்பந்தமான கேள்விகளும் விளக்கம் கூறும் நிகழ்வும் பாவசங்கீர்த்தனமும் மற்றிற் நகரில் உள்ள வெவ்வேறு பங்குகளில் குழுக்கள் குழுக்களாக இடம்பெற்றது. மாலை வேளைகளில் பல்வேறு இடங்களில் கலாசார நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள் போன்றவை இடம்பெற்றன.

### விசேட நிகழ்வுகள்

ஆவணி 18ம் திகதி அதிகாலை 12.45ற்கு பாப்பரசர் மற்றிற் நகரிற்கு வருகை தந்தார். நாங்கள் யாவரும் அவரைப் பார்ப்பதற்காக சென்றிருந்தோம். பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் திருத்தந்தையை நாம் சந்தித்து அவரது ஆசீரைப் பெற்றோம். 19ம் திகதி பெரிய அளவிலான சிலுவைப்பாதை இடம்பெற்றது. இதிலும் திருத்தந்தை பங்கெடுத்து ஆசீர்வழங்கினார். ஏறத்தாழ 20 இலட்சத்திற்கும் அதிகமான இளைஞர் யுவதிகள் இந்நிகழ்வுகளில் பங்கெடுத்தனர். ஆவணி 20ம் திகதி மாலை நற்கருணை வழிபாடும் ஆசீர்வாதமும் திருத்தந்தை தலைமையில் இடம்பெற்றது. விசேடமான நிகழ்வு யாதெனில் கடவுளுடைய ஆசீர்வாதத்தின் அடையாளமாக இலட்சக்கணக்கான இளைஞர் யுவதிகள் கூடியிருந்தபோது நற்கருணை எழுந்தேற்றத்தின்போது மழை பெய்து எவ்லோரையும் நனைத்தது. இறுதியில் திருத்தந்தையை மேடையில் மூடும் அளவிற்கு மழை ஓயவில்லை. இறுதியில் நற்கருணை ஆசீர்வாத்தின் பின்னரே மழை நின்றது. இது உண்மையிலேயே ஸ்பெயின் நாட்டிற்கு கிடைத்த ஆசீர்வாதமாகும்.

21ம் திகதி காலை 9.00 மணிக்கு ஞாயிறு திருப்பலியின்போது, "கிறிஸ்துவை உங்கள் வாழ்வின் மையமாக்குங்க்ள். நீங்கள் பெறும் விசுவாசத்தை மற்றவர்க்கும் பகிர்ந்துகொடுங்கள்" என திருத்தந்தை வலியுறுத்தினார். இறுதி நாள் நிகழ்வில் நூற்றுக்கணக்கான ஆயர்கள், கர்தினால்மார், ஆயிரக்கணக்கான குருக்கள் கலந்துகொண்டனர். இதில் ஸ்பெயின் நாட்டு அரசர் மற்றும் அரசியாரும் பங்குபற்றினர். இறுதியில் தன் பரிபூரண ஆசீர்வாதத்தை இளைஞர் யுவதிகளுக்கு வழங்கும்போது இளைஞர் யுவதிகள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

அடுத்த உலக இளைஞர் தினம் பிறேசில் நாட்டில் இடம்பெறும் என திருத்தந்தை பகிரங்கமாக அறிவித்தார். இலங்கை நாட்டிலிருந்து சென்ற அனைவரையும் சிங்கள மொழியைச் சேர்ந்த அருட்தந்தை றொணி பொறுப்பேற்றார்.

எமது திருச்சபையின் தலைவர் பரிசுத்த பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பரை உலக இளைஞர் தினத்தில் நேரில் கண்டு ஆசீர்பெற சந்தர்ப்பம் வழங்கிய மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கட்கும் ஏனைய குருக்கள் மற்றும் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் [illegible] நன்றி கூறுகின்றோம்.

எ. [illegible] இளைஞர் ஒன்றியச் செயலர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### நட்புக்காக

அன்புத் தோழியே
ஆருயிர்ச் செல்லமே
தினமும் என் விழிகள்
உன்னையே தேடியலையுதடி.
எங்கு போனாலும்
சொல்லிவிட்டுச் செல்லும் நீ
இன்று மட்டும்
சொல்லாமற் சென்றது
ஏனடி சகியே?
"எங்கு போயினும் காகிதம்
எழுத மறவாதே"
எனச் சொல்லிவிட்டு
நீமட்டும் போகுமிடம்
சொல்லாமற் போனது
ஏனடி சகியே?
நீ கொண்ட இலட்சியம்
பாதியிலே முறிந்தது
என் மனதை வாட்டுதடி.
உன் இலட்சியக் கனவை
சுமக்கின்றேன் நான்
உனக்காக அல்ல
உன்னில் கொண்ட
நட்புக்காக!

*செ. ஜெசி,*
*5ம் வட். மண்டைதீவு,*
*யாழ்ப்பாணம்.*

### பூமித்தாயின் புலம்பல் ........!

மனிதா! உன்னையும், என்னையும் படைத்தவர் ஒருவர்
அவர்தான் இறைவன்.
வியாபார நோக்கிற்காக பச்சை மரங்கள் எங்களை
பாங்கு பாங்காய் பிளக்கின்றாய். வலிக்கிறது எனக்கு!
நண்பனே! நண்பியே! என் வேதனையில் கலக்கமாட்டாயா?
கௌரவம் தேடி 'வடக்கின் வசந்தம்' 'கிழக்கின் உதயம்' என்று
ரீங்காரம் செய்து, அரக்க குணம் படைத்தவனாக அலைகிறாய்.
ஆறுகள், காடுகள், நாடுகளெனச் சுற்றித் திரிகின்றாய்!
அடியோடு வளங்களை அழித்து இன்பம் தேடுகின்றாய்.
மதிகெட்ட மானிடமே உன்தேடல் சரியா? சிந்தி!
வீடுகள், நாடுகள், நகரங்களில் சமர் தொடுத்தாய்.
விஷம் கொண்டு என்னையும் என் பிள்ளைகளையும்
கொன்று குவித்து கோர நர்த்தனம் ஆடினாய்.
இதன் விளைவாக எனது சினத்திற்குள்ளாகினாய்
சினத்தின் மறுவடிவம் சுனாமி, நிலநடுக்கம், பெருவெள்ளம்!
எனை நோக்கி எதிர்கொள்ள பலமிழந்தவனாய்
நாளும் பொழுதும் நலிந்து மெலிந்து பலியாகின்றாய்.
என் புலம்பல் புன்னகையாக ........
உன் சாவுகள் வாழ்வாக மலர ......
உன் வாழ்வை என்னுடன் இரண்டறக் கலந்துவிடு!

*அருட்சகோதரி மேரி மாக்ரட்,*
*திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.*

### வழிநடத்துவீர்

சின்னஞ்சிறிய மொட்டுக்கள்.
மலரத்துடிக்கும் சிட்டுக்கள்.

அன்னையின் அன்பில்
தவழ்ந்து,
அப்பாவின் பாசத்தில் மிதந்து,
அறிவு தேடியே பள்ளிவந்த
அன்பு செல்வங்கள் நாம்.

பார்போற்றும் மகனாய் மிளிர
பட்டங்கள் பலபெற்று உயர!
படிப்புடன் பண்பையும்
பாசத்தோடு ஊட்டிடுவீர்!

கண்ணான கல்விதனை
கருத்துடனே கற்பிப்பீர்!
எரிந்து விழாமல்
எழுத்தறிவு ஊட்டிடுவீர்!
எம் பிஞ்சு உள்ளங்கள்
கசங்காமல் காயப்படாமல்
மனிதநேயக் கல்விதனை
கனிவோடு ஊட்டிடுவீர்!

*லீனஸ்சியாம்,*
*தரம்- 04, அடம்பன்.*

### செஞ்சோலைத் தாக்குதல்

ஈழத்தின் தலைநகர்
முல்லை நகரினிலே
வெடித்துச் சிதறிய
மனித உடல்களை
நினைத்துப் பார்த்தாலே
நெஞ்சம் வெடிக்கிறது.
கொஞ்சமும் இல்லையா
ஈவு இரக்கம்?
எங்கே செல்கிறது
என் இனிய தேசத்தின்
மனிதாபிமானம்?
யாரால் விளைகிறது
இந்த மகா கொடூரம்?
இறைவன் கொடுத்த
ஈடில்லா உயிரை
கொன்றொழிக்க
யார் கொடுத்தது
அதிகாரம்? உன்
தீராத தீவிரவாத
பசிக்கு சிதறிய உடல்களும்
உறைந்துபோன
இரத்தங்களும்தான்
தீர்வாகுமா?
தாயின் கருவறையில்
இருந்து
கலையாமல் வெளிவர
ஜனனத்திற்கு தேவை
பத்து மாதங்கள்.
அப்படி ஜனித்த உயிரை
உருக்குலைக்க
மரணத்திற்கு தேவை
ஒரு சில நொடிகளா?
இது நியாயம்தானா?
ஒரு கோடி ஆண்டுகள்
நீ எடுத்தாலும் - மீண்டும்
திருப்பித்தர முடியுமா?
இழந்துபோன உயிரை.
துடிதுடித்துப் பெற்ற
உயிர்களை வெடிவெடித்து
சிதறடித்தது வீரம்தானா?
சிதறிய உடலைப் பார்த்தும்
துடிக்கும் உள்ளங்களைக்
கண்டும்
பதறும் நெஞ்சங்களைப்
பார்த்தும்
அடங்கவில்லையா இன்னும்
உன் தீவிரவாதம்?
இந்த மகா பாதகத்தை
யார் செய்தாலும்
தண்டிக்கப்பட வேண்டும்.
உனக்குத் தண்டனை
இங்கு இல்லாவிட்டாலும்
நிச்சயம் இறைவனிடம்
உண்டு.

*நிகால், பெரியகடை,*
*மன்னார்.*


## கொஞ்சம் சிரிங்க

மது : கல்யாணம் ஆனதுலேர்ந்து எனக்கும் என் மனைவிக்கும் ஒரே ஒரு தடவைதான் சண்டை வந்தது!
விது : "அப்படியா ஆர்ச்சர்யமா இருக்கே!"
மது : "அட போப்பா, அந்தச் சண்டை இன்னும் முடியவே இல்லை!"

***

டாக்டர் : "உங்க கிட்னியில கல் இருக்கு, உடனே அதை எடுக்கணும்!"
மருமகள் : "போங்க டாக்டர்... இப்பிடித்தான் ஒவ்வொரு முறையும் ஆசை வார்த்தை சொல்லி ஏமாத்திட்டே இருக்கீங்க!"

*எஸ். றொக்சி*
*பவித்திரா*
*ஆட்காட்டிவெளி.*



அலன் : இசைக் கருவிகள் என்றால் அவனுக்கு அத்துப்படி.
கெலன் : அப்படி ஒரு கலைஞனா அவன்?
அலன் : இல்ல அந்தக் கடையிலதான் அவன் வேலை செய்கிறான்!

***

டொக்ரர் : உங்க ஹார்ட்ல ஒப்பரேசன் செய்யனும்!
அலன் : உங்ககிட்ட வேல பார்க்கிற நேர்ஸ்கிட்டதான் அது இருக்கு. அவங்ககிட்ட கேளுங்க.

*ம. காமலின்*
*சௌமியா குருஸ்.*

ஒருவர் : அழுகிய தக்காளி ஒரு கிலோ, அழுகிய கத்தரிக்காய் ஒரு கிலோ, காய்ந்த கீரைக்கட்டு மூன்று....
கடைக்காரன் : எதுக்கு எல்லாத்தையுமே அழுகினதா பார்த்து வாங்கிறீங்க?
வந்தவர் : அப்பதான் என் பொண்டாட்டி என்னை சந்தைக்கு அனுப்பமாட்டா?

***

நீதிபதி : ஏம்மா உன் மாமியாரை வேணும்னுதானே கிணத்தில தள்ளிவிட்டய்.
குற்றவாளி : இல்ல இல்ல வேணாம்னுதான் தள்ளிவிட்டேன்.

*அ. டல்சிக்கா,*
*கற்கிடந்தகுளம்,*
*முருங்கன்*

# சிறுவர் பொழிவு

## இப்படி ஒருவழி

*ஆர். றொபின்சா,*
*வண்ணாகுளம்.*

கதிரவன் தூங்குகின்றான். புள்ளினம் தூங்குகின்றது. பூமாதேவி தூங்குகின்றாள் அவனும் தூங்குகின்றான். ஆனால் அவன் மனம் மட்டும் தூங்கமுடியாமல் தவிக்கின்றது. அன்று நடந்த சம்பாசனைகள் அவன் உள்ளத்தைத் துளையிட்டு வருத்துகின்றன.

"ஏண்டா சுரேஸ் ஒருநேரம் சாப்பிட வழியில்ல, அதுக்குள்ள உனக்கு என்னடா படிப்பு? நீ படிச்சா போதாதென்று தங்கச்சியவேற ஸ்கூலுக்கு அனுப்பிறாயே! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? இந்தக் காலத்துல பொம்பிளப் பிள்ளைகள் படிக்க வேண்டிய அவசியம் இல்லை. நீயும் பேசாமல் நான் வேண்டித்தந்த மாட்டை ஒழுங்காக வளர்த்து குடும்பத்தை ஓட்டுற வழியப்பாரு. அப்பா இல்லாத இடத்தில நீதானே செய்யணும்" என்று தனக்குத்தான் பேசத் தெரிந்ததுபோல பேசிவிட்டு போய்விட்டார் சித்தப்பா. எதிர்த்துப் பேசமுடியாமல் அடங்கிப்போனாள் அம்மா. அவனுடைய உள்ளம் மட்டும் பொங்கி எழுந்தது. "அப்பா இருந்திருந்தால் 'என்ர பிள்ளை படித்து பெரிய இடத்துக்கு வருவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. நீங்க பேசாமல் இருந்தா நல்லது' என்ற ஒரே வார்த்தையில் அவர் வாயை அடக்கியிருப்பாரே" என்று அவனுடைய அடிமனம் சொல்லிக்கொண்டிருந்தது. நீண்டநேர யோசனையின்பின் ஏதோ முடிவு எடுத்தவனாய் உறங்கிப்போனான் சுரேஸ்.

ஆம் சுரேஸ் ஒரு மாணவன். படிப்பிலே வகுப்பில் அவன்தான் முதலிடம். தந்தை இறந்ததனால் ஏற்பட்ட திடீர் கஸ்ரத்தை சுமக்கமுடியாமல் தவிக்கின்றான். புத்திசாலித் தங்கை, அமைதியான அம்மா என்று அழகான குடும்பம் அவன் குடும்பம்.

காலையில் எழுந்த தாய் "எங்க இந்த நேரத்துல போய்ற்றான் இவன்" என்று யோசிக்கும்போதே தலையில் புற்கற்றையுடன் வந்தான் சுரேஸ். "அம்மா மாட்டுக்கு புல்லு வெட்டியாச்சு. இனி நீங்கள் பாருங்கள். நான் ஸ்கூலுக்குப் போகிறேன். இன்னும் இரண்டே வருசப்படிப்புத்தான். அதற்கு ஆசிரியர்கள் உதவுவதாகக் கூறினார்கள். படிப்பு முடிஞ்சதும் நல்ல வேலையில சேர்ந்து தங்கச்சியையும் படிக்கவைக்கிறன்" என்று ஊர் விமர்சனங்களைக் கேளாமல் கைகால் அலம்பி பாடசாலைக்குப்போகும் பிள்ளையின் துணிவையே பார்த்தபடி நின்றாள் அந்தத்தாய். ஆம் அவன் எதிர்காலம் என்னவென்று இப்போதே அந்தத் தாய் தெரிந்துகொண்டாள். "அம்மா, அண்ணா படிக்கிறதுக்கு எப்படியும் ஒருவழி கண்டுபிடிக்குமென்று எனக்கு அப்பவே தெரியும்" என்று கூறி புன்னகைத்த மகளின் சொற்களும் இலேசாக அவள் காதில் விழுந்தது.

## சிறுகதை: கனவு

*இ. ஸ்ரீபனா, பரிகாரிகண்டல், முருங்கன்.*

அழகான பூஞ்செடிகள் நிறைந்த அந்த பாடசாலையின் மைதானம் பரபரப்புடன் காணப்பட்டது. ஏதோ நிகழ்வு நடந்துகொண்டு இருந்தது. மாணவர்கள் எல்லோரும் பட்டாம் பூச்சிகளாய்த் திரிந்தனர். "வாழ்த்துக்கள் சாதனா...." என்றபடி முதலில் வந்து கை குலுக்கினாள் தோழி றம்மியா. அதைத் தொடர்ந்து வகுப்பு மாணவர்கள் எல்லோரும் வந்து "கொங்ராஜிலேசன் சாதனா" என்றார்கள். சாதனாவும் "ரெம்ப தாங்ஸ்..." என்று மொட்டவிழ்ந்து பூ மலர்ந்தாற்போல இதழ் விரித்து புன்னகைத்தாள். சாதனாவின் மகிழ்ச்சி எல்லை கடந்தது. எங்கோ உயரத்தில் பறப்பதுபோல இருந்தது. கலை நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன. பாடசாலை அதிபர் எழுந்து ஆசியுரை வழங்கினார்.

"அன்பார்ந்த மாணவ மாணவியரே! நமது பாடசாலை மாணவி சாதனா உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளார். இவர் எமது பாடசாலைக்கு பெரும் மதிப்பைப் பெற்றுத் தந்திருக்கிறார். இவர் பல்கலைக்கழகத்திலும் சிறந்த மாணவியாகத் திகழ்ந்து எமது பாடசாலைக்கு மதிப்பைப் பெற்றுத்தரவேண்டுமென்று கேட்பதோடு, இவருடைய முயற்சிகளும் செயற்பாடுகளும் இவரை நற்பிரஜையாக உருவாக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இவர் மென்மேலும் உயர எனது ஆசிகளையும் தெரிவித்து நிற்கின்றேன். நீங்களும் இவரைப்போன்று நல்ல மதிப்பெண் பெற எனது ஆசிகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி!" என்று கூறி தமது ஆசனத்தில் அமர்ந்தார்.

அனைவருடைய முகங்களும் அன்று மலர்ந்த மலர்கள்போல காணப்பட்டன. "அதிபரின் ஆசியுரையைத் தொடர்ந்து எமது பாடசாலை மாணவி சாதனா சிறு சொற்பொழிவு ஆற்றுவார்" என்று அறிவிக்கப்பட்டது. மேகத்திரைக்குள் இருந்து வெண்ணிலா வந்ததுபோல நண்பர் நண்பிகளிடையே இருந்த சாதனா எழுந்து வந்தாள். அவள் அமைதியான அடக்கமான பெண்மணி எவரையும் எளிதில் கவர்ந்து விடுவாள்.

சூரியனைச் சுற்றி நவகிரகங்கள் இருப்பதுபோல அதிபருக்கருகிலே ஏனைய ஆசிரியர்கள் அமர்ந்திருந்தார்கள். வான்வெளியில் பரந்து கிடக்கும் நட்சத்திரங்களுக்கு ஒப்பாய் மைதானத்தில் மாணவர்கள் காணப்பட்டார்கள். இவர்களிடையே பௌர்ணமி நிலவாய் நின்று உரையாற்றினாள் சாதனா.

"அனைவருக்கும் எனது இந்நேர வணக்கங்கள்! கதிரவனால் எப்படி நிலா ஒளி பெற்று உலகிற்குக் கொடுக்கிறதோ அது போலத்தான் ஆசான்களின் ஊக்கம் ஒவ்வொரு மாணவரையும் நற்பிரஜையாகத் திகழச் செய்கிறது. என் பிள்ளை பெரியவனாக வேண்டுமென்று எவ்வளவு ஆவலுடன் பெற்றோர் பாடசாலைக்கு அனுப்புகிறார்களோ அதைவிட பன்மடங்கு ஆவலுடன் ஆசான்கள் எம்மை வழிநடத்திச் செல்கிறார்கள். நான் உங்கள் முன் சிறந்த மாணவியாகத் திகழ இறைவனும், இவ்வுலகைக் காட்டிய பெற்றோரும், அறிவையும், ஆற்றலையும் அமுதமாய் ஊட்டிவிட்ட ஆசான்களுமே காரணம். இவர்களுக்கு எத்தனை தடவை நன்றிப்பா பாடினாலும் தீராது. மேலும் ஊக்கமுடன் நான் வளர இவர்களே ஆசியளிக்க வேண்டும். என்னை நற்பிரஜையாக இங்கு வீற்றிருக்கும் ஆசான்கள் உருவாக்கியதுபோல நானும் இன்னும் பல மாணவச் செல்வங்களை உருவாக்க வேண்டும். இதுவே என் இலட்சியம்" எனக்கூறி மேடையை விட்டுக் கீழே இறங்கினாள்.

அப்போது தாயார் எழுப்பும் குரல் கேட்டது. கண்களை விழித்துப் பார்த்தாள். விடிந்துவிட்டது. இதுவரை கண்டது கனவு என உணர்ந்துகொண்டாள். அதிகாலைக் கனவு பலிக்கும் என்பார்கள். இந்தக் கனவும் நனவாகுமா? என மனதிற்குள் எண்ணினாள்.

"நிச்சயம் இது நனவாகும்... என்று சொல்வதைப்போல் எங்கிருந்தோ சாரளத்தினூடாக வந்த தென்றல் சாதனாவைத் தழுவிச் சென்றது. தென்றல் சொல்வது உண்மை நம்பு! என்று கூறுவதைப்போல மரங்கள் முற்றத்தில் நின்று தலையசைத்தன.

மெல்ல புன்னகைத்த வண்ணம் எழுந்து, காலைக் கடன்களை முடித்துக் கொண்டு. இன்றைய தினம் கல்லூரிக்கு வரும் உயர்தர பெறுபேற்றைப் பார்க்க புறப்பட்டாள் சாதனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

அத்தியாயம் – 07

— ஆங்கில மூலம் —

அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குருஸ் FSC

*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

## இதயங்களின் இராணியாக மாறிய இளவரசி



சூட்சுமமான தேவையின் துக்ககரமான முடிவுக்கதையைத் திடீரெனக்கேட்ட அந்த நாளில் இளவரசி டயானா உலகில் உள்ள கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் இராணியாக மாறிவிட்டாள். தொட்டு உணரக்கூடிய வழியிலே குஷ்டரோகிகள், புற்றுநோயாளர்கள், எயிட்ஸ் நோயாளர்கள் (இவர்களுக்கு அவள் இளவரசியைவிட நண்பியாகவே இருந்தாள்) தேவைப்படுவோர், இல்லிடமற்றோர், கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டவர்கள் யாவருக்கும் செய்த நன்மைத்தனத்தின் பயனாக அவள் மக்களின் மனதில் இடம்பிடித்தாள்.

மனிதப்பிறவிக்குப் பொதுவாய் உள்ள மனிதத்தவறு, பலவீனம் ஆகியவற்றை தவிர்த்து மக்கள் அவளை தங்களுடைய இளவரசியாக - இல்லை இராணியாக தங்கள் இதயங்களில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். சிலர் இன்னும் அவளை உயர்த்தி "இங்கிலாந்துக்கு கிடைத்த சிறந்த இராணி" என்றும் "இங்கிலாந்துக்கு ஒருபோதும் கிடைக்காத சிறந்த இராணி டயானா" என்ற வாசகங்களையும் விளம்பரப்படுத்தினர். இந்த எல்லாவிதமான தன்னிச்சையான வெளிப்பாடுகளும், மனவெழுச்சிகளும், மனப்பூர்வமான புகழ்ச்சிகளும் மக்களின் இளவரசிக்கு உலகம் காட்டும் அனுதாபத்தின் முக்கியத்துவத்தை சிந்திக்கத் தூண்டி இதயத்தின் இராணிக்கு சோகமும், கண்ணீரும் நிறைந்த பிரியாவிடையைச் செலுத்தியது.

ஒளிமிகுந்தவர்கள், ஏழைகள், வசீகரமானவர்கள், இளவரசர்கள், ஏழைக்குடிமக்கள், சமயத்தவர்கள், சமயம் அல்லாதவர் யாவருடனும் அவள் கலந்திருந்தாள். அவளுக்கு கொடுப்பதற்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு செய்தியை வைத்திருந்தார்கள். அவள் அவர்களுடைய வாழ்வைத் தொட்டாள். தனது சொந்த கௌரவத்தையும், சக்தியையும் ஆபத்தான நிலையில்கூட தனது நேரத்தையும், திறமையையும், செல்வத்தையும் பங்கிடத் தயாராக இருந்தாள். ஒவ்வொருவரும், ஒவ்வொன்றும் அவளைச் சுற்றி ஒரு சக்கரத்தின் குடம்போலச் சுழன்றுகொண்டிருந்தது. உலகம் முழுவதும் சுற்றித்திரிந்து மனித சமுதாயத்துக்கு விலைமதிக்க முடியாத சேவைகளைச் செய்து வந்தாள். கல்கத்தாவில் உள்ள அன்னை தெஅரசாவின்மேல் அவள் கொண்டிருந்த மகத்தான அன்பினாலும், வியப்பினாலும் தானே சென்று அன்னையைச் சந்தித்தாள். எவ்வாறாகிலும், அவளது சேவை எங்கே தேவைப்பட்டதோ அங்கே அவள் இருந்தாள். அவள் தனது நேர்மையின் காரணமாகவும், கவர்ச்சியான புன்னகையினாலும், மென்மையான தொடுகையினாலும் இலட்சக் கணக்கான மக்களின் இதயத்தைத் தேற்றினாள்.

அவருடைய நேரம் குறிப்பிடாத மரணத்தினால் உலகம் பிரமிப்படைந்தது. அவளில் பாசம் கொண்டவர்கள் பல்லாயிரக்கணக்கில் வந்து அவளுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். அவர்கள் மௌனமாகவும், ஆழ்ந்த துக்கத்துடனும் வந்தார்கள். அனேகர் கண்ணீர் சிந்திக்கொண்டும் மற்றவர்கள் ஏங்கி ஏங்கி அழுதுகொண்டும் வந்து தங்களின் இதயங்களைத் தொட்ட இளவரசிக்கு அரச குடும்பத்தில் வேறு எவருக்கும் முன்பு ஒருபொழுதும் இல்லாதவாறு தங்கள் அன்பையும் நல் மதிப்பையும் காட்டினார்கள்.

அவளுடைய மரணச்சடங்கிற்கு ஒருவேளை இங்கிலாந்தின் சரித்திரத்தில் இடம்பெற்றிருக்க முடியாத அளவு மக்கள் கூட்டம் பொங்கி வழிந்தது. இதுவே அவளுடைய குறுகிய வாழ்நாளில் அவள் கடந்து வந்த பயங்கர குழப்பங்கள், நம்பிக்கைத் துரோகம், ஒதுக்கப்படல், விவாகரத்து, துர் அதிஷ்டவசமான காதல் விவகாரம், மனவேதனை துன்பம் போன்றவற்றிற்கூடாக ஒரு பெண்ணுக்குள்ள பொறுப்பை எடுத்துக்காட்டியது. பயங்கர விபத்து அவளது குறிப்பிடக்கூடிய வாழ்வுக்கு ஒரு சீக்கிரமான முடிவைக் கொடுத்து விட்டது.

எல்லா சக்தியும், கௌரவமும், வசீகரமும், பிரகாசமும் பிரபல்யமும், புகழும், சந்தோஷமும் அவளைத் தவிர்த்துவிட்ட போலி போன்று தெரிகின்றது. தற்பொழுது சமாதானமாக உறங்கும் அவள் தலைமுறையாக நினைவுகூரப்படுவாள்.

இங்கிலாந்தின் வாரிசான இளவரசன் சாள்ஸ் அவளை 19 வயதில் திருமணம் முடிக்கும்பொழுது அத்திருமணத்தை "நூற்றாண்டின் திருமணம்" எனக் கூறப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் தொலைக்காட்சியில் அவர்களது திருமணத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கண்டு களித்தனர். அந்தோ! ஒரு சில வாரங்களுக்கு முன்பு தங்கள் இதயத்தின் இராணிக்கு ஆறு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வருத்தந்தோய்ந்த இறுதி மரியாதையுடனே தகுந்த பிரியாவிடையைக் கொடுத்தனர். இங்கிலாந்தைப் பொறுத்தமட்டில் அது ஒரு "நூற்றாண்டின் மரணச் சடங்கு" என்றே அமையும்.

## உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 97

திருவெளிப்பாடு புதியஏற்பாடு நூல்களின் இறுதி நூலாக எண்ணப்படுகின்றது. இதில் மொத்தமாக 22 அதிகாரங்கள் உள்ளன.

திருச்சபை வரலாற்றிலே ஆரம்பகால கிறீஸ்தவர்கள் பல கொடிய துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். சித்திரவதைகளுக்கு உள்ளாகியும் தம் உயிரைக் கொடுத்தும் கிறீஸ்தவ விசுவாசத்தைக் காத்துக்கொண்டார்கள்.

அந்நாட்களில் உரோமைப் பேரரசின் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்ட நாடுகளாகவே பலஸ்தீனமும் அண்டை நாடுகளும் இருந்தன. உரோமைப் பேரரசர்கள் அதிகாரிகள் அரச வணக்கத்தைக் கட்டாயப்படுத்தினார்கள்.

அரச வணக்கத்திற்கு எதிரான ஒன்றாக கிறீஸ்தவம் எண்ணப்பட்டது. அதனால் கிறீஸ்தவர்கள் அரசனுக்கு எதிரான-வர்களாக எண்ணப்பட்டார்கள். அதனால் கிறிஸ்தவர்கள் கொடுந்-துன்பங்களுக்கு உள்ளாகினர்.

இவ்வாறான சூழ்நிலையில் நொந்து வாழ்ந்த மக்களுக்கு தெம்பூட்டவும் வலுவூட்டவும் கடவுள் தெரிந்து கொண்ட திட்டமே இத்திருவெளிபாடுகளின் காட்சியும் அதன் எழுத்துருவமும் ஆகும். இது இன்று நமக்கு வாழ்வின் விழுமியங்களையும் நெறிமுறைகளையும் கற்றுத் தருகின்றது.

**இனி நமது வினாக்களுக்கு வருவோம்.**

**வினாக்கள் திருவெளிபாடு நூல் 3 முதல் 7ம் அதிகாரம் வரை உள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.**

1. சர்தையிலுள்ள திருச்சபையினருக்கு விடுக்கப்பட்ட செய்தி என்ன?
2. மனவுறுதி தரும் வாக்கைக் கடைப்பிடித்தால் பிலதெல்பியா திருச்சபைக்கு என்ன கிடைக்கும் என்று வாக்குப் பண்ணப்படுகின்றது?
3. கடவுள் யார்மீது அன்பு கூருகிறாரோ அவர்களை என்ன செய்கின்றார்?
4. "எங்கள் ஆண்டவரே எங்கள் கடவுளே மாட்சியும், மாண்பும் வல்லமையும் பெற நீர் தகுதி பெற்றவர். ஏனெனில் அனைத்தையும் படைத்தவர் நீரே" என்று பாடியவர்கள் யார்?
5. கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டி வல்லமையும், செல்வமும், ஞானமும், ஆற்றலும், மாண்பும், பெருமையும், புகழ்ச்சியும் பெறத் தகுதிபெற்றது என்று பாடியவர்கள் யார்?
6. அரியணையில் வீற்றிருந்தவரது வலக்கையில் இருந்த சுருளேட்டில் எத்தனை முத்திரைகள் பொறிக்கப்பட்டிருந்தன?
7. கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டி எனக் குறிக்கப்படுவது யார்?
8. ஆட்டுக்குட்டி நான்காவது முத்திரையை உடைத்து 'வா' என அழைத்தபோது வந்தது எது? அதனமேல் ஏறியிருந்தவர் யார்?
9. இஸ்ராயேல் மக்கள் குலங்கள் அனைத்திலும் முத்திரையிடப்பட்டவர்கள் எத்தனை பேர்?
10. வெண்மையான தொங்கலாடை அணிந்து கையில் குருத்தோலைகள் பிடித்திருந்தவர்கள் என்ன சொல்லிப் பாடினார்கள்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 95 இற்கான கேள்விகளுக்கு 12 பேர் விடையளித்திருந்தனர்**

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

*அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.*

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. அருட்சகோதரி பற்றீசியா, ஆலய வீதி, தோட்டவெளி.
2. ஆன் சுசாந்தினி, முருங்கன் பிட்டி, முருங்கன்
3. சுரேஸ் டெவ்லின், யோசப்வாஸ் நகர், தோட்டவெளி,
4. ப. தீபா, எழுத்தூர், மன்னார்
5. பா. செந்தூரன், பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்
6. சு. லக்ஸ்மன், பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்
7. கவின், தாமோதரம்பிள்ளை வீதி, கீரி, மன்னார்
8. சுகிர்தா, தாமோதரம்பிள்ளை வீதி, கீரி, மன்னார்
9. ஜெசில்டா, சாந்திபுரம், மன்னார்
10. தனுசியா, பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்

### உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி 95இற்கான சரியான விடைகள்

1. யேசுவே இறைமகன் என்று ஏற்று அறிக்கையிடுவோரோடு கடவுள் இணைந்திருக்கிறார். (1யோ 4:15)
2. கடவுளிடம் அன்பு காட்டுவதாகச் சொல்லிக்கொண்டு தம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் பொய்யர் (1 யோ 4:20)
3. தூய ஆவியார், நீர், இரத்தம்.
4. கிறிஸ்துவின் போதனையில் நிலைத்திராமல் வரம்புமீறிச் செல்வோர் கடவுளைத் தம்மில் கொண்டிருப்பதில்லை (2 யோ 1:9)
5. காயு என்பவருக்கு (3 யோ1:1)
6. எல்லாக் காலத்துக்குமென இறை மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட விசுவாசத்துக்காகப் போராடும்படி உங்களை ஊக்குவிக்க எழுதும் தேவை ஏற்பட்டது என்று கூறுகின்றார். (யூதா 1:3)
7. அதன் மக்கள் பரத்தமையிலும் இயற்கைக்கு மாறான சிற்றின்பத்திலும் திளைத்திருந்ததால் (யூதா 1:7)
8. ஆதாமுக்குப் பின் ஏழாம் தலைமுறையினரான ஏனோக்கு (யூதா 1:14-15)
9. ஆண்டவர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று மட்டும் சொன்னார்.
10. 13 வசனங்கள் (முன்னுரை)

## கிறிஸ்தவ மாநாடு .......

1ம் பக்கத் தொடர்ச்சி

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து மாநாட்டின் தொடக்க உரையை தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் ஆயர் பேரருட்திரு கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் நிகழ்த்தினார். ஆசியுரையை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளார் வழங்கினார். மாநாட்டின் நோக்கங்கள் பற்றி கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. க. பேர்ணாட் அவர்கள் எடுத்துரைத்தார்.

"சமகால இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்களும் தீர்வுகளும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற முதலாவது அரங்கை வ/ இலுப்பைக்குளம் அ.த.க. பாடசாலை அதிபர் திரு. எஸ். கே. மரியநாயகம் நெறிப்படுத்தினார். இவ்வரங்கில் 'உலகமயமாதல்' என்ற தலைப்பில் மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல் அவர்களும், 'அனர்த்தங்கள்' என்ற தலைப்பில் மன்னார் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்திரு. றெஜினோல்ட் பிரான்சிஸ் அவர்களும் உரை நிகழ்த்தினர்.

"தற்கால இளைஞர்களின் பங்கு" என்ற தலைப்பில் இடம்பெற்ற இரண்டாவது அரங்கை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். சோமராஜா நெறிப்படுத்தினார். இவ்வரங்கில் "இளைஞர்களுக்கான சமூகப் பொறுப்புக்கள்" என்ற தலைப்பில் யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் நிர்வாக உத்தியோகஸ்தர் திரு. இ. அ. திலகரெட்னம் அவாகளும், "இளைஞர்கள் மட்டில் சமூகத்தின் பொறுப்புக்கள்" என்ற தலைப்பில் யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடத்தின் அதிபர் அருட்திரு. கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் அவர்களும் உரைநிகழ்த்தினர். ஒவ்வொரு உரையின் பின்னரும் கலந்துரையாடலும், பாடல்களும் இடம்பெற்றன. பாடல்களை அருட்பணி விமல்ராஜ் அமதி) அவர்கள் நெறிப்படுத்தினார்.

இம்மாநாடடையொட்டி சிறிய மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. இதில் மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்களின் செய்திகளும், கிறிஸ்தவ மன்றக் காப்பாளர் திரு. மி. சூசைதாசன், கிறிஸ்தவ மன்ற ஆன்மீக இயக்குனர் அருட்திரு இயேசுராஜன், உபபீடாதி (கல்வியும் தரமேம்பாடும்) கு. சிதம்பரநாதன், உபபீடாதிபதி (நிதி முகாமைத்துவம்) ஜனாப் சஹாப்தீன், விரிவுரையாளர் - இணைப்பாளர் திரு. சுவர்ணராஜா, போன்றோரின் ஆசிச் செய்திகளும் இடம்பெற்றிருந்தன.

## திருத்தந்தையின் உலக மறைபரப்பு தினச் செய்தி

11ம் பக்கத் தொடர்சசி

மனிதனது இவ்வுலகப் பிரச்சினைகளை புறக்கணிப்பதானது, "துன்புறும், தேவையில் இருக்கும் எமது அயலவரை அன்பு செய்வது பற்றி நற்செய்தி எமக்கு கூறும் படிப்பினையை மறப்பதற்கு சமமாகும்" (திருத்தூது அறிவுரை மடல், நற்செய்தி அறிவிப்பு, 31,34); இது "நகர்கள், சிற்றூர்கள் எல்லாம் சுற்றிவந்து எங்கும் அவர்களுடைய தொழுகைக்கூடங்களில் கற்பித்து, விண்ணரசைப் பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றி, நோய்நொடிகள் அனைத்தையும் குணமாக்கிய" (மத்தேயு 9:35) இயேசுவின் செயல்களுக்கு முற்றும் முரணானதாக அமையும்.

எனவே, திருச்சபையின் மறைபரப்பு பணியில் இணைப்பொறுப்புடன் பங்கேற்பதன் வழியாக கிறிஸ்து எமக்கு வழங்கிய ஒற்றுமை, மகிழ்ச்சி, ஒருமைப்பாடு என்பவற்றை கிறிஸ்தவரால் கட்டியெழுப்ப முடியும்; இதனால் அவர் அல்லது அவள் முழு மனுக்குலத்திற்கும் உரிய இறைவனின் மீட்புத்திட்டத்தை நிறைவேற்றுவதில் பங்களிக்கிறார். இதில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் அனைவரையும் ஒன்றிணைந்து பயணிக்குமாறு கிறிஸ்தவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது; எல்லோரும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இப்பயணத்தின் முழுமையான அம்சமாக மறைபரப்புப் பணி உள்ளது. இதில், மண்பாண்டமாக இருந்தாலும் கூட எமது கிறிஸ்தவ அழைப்பு, நற்செய்தியின் விலை மதிப்பற்ற செல்வம், திருச்சபையில் சந்தித்து விசுவசிக்கப்படும் இறந்து உயிர்த்த இயேசுவுக்கு உயிருள்ள சாட்சியம் பகரல் என்பவற்றை வெளிக்கொணருகின்றோம்.

அனைவருக்கும் கிறிஸ்துவைக் கொண்டு செல்பவர்களாக, மனுக்குலத்தைச் சந்திப்பதற்காக "செல்வதில்" ஏற்படும் மகிழ்விற்கும் விருப்பத்திற்கும் உலக மறைபரப்பு தினம் ஒவ்வொருவருக்கும் புத்தெழுச்சி ஊட்டுவதாக. நற்செய்திக்காக மிகுதியாகப் பணியாற்றி துன்புறும் அனைவர் மீதும் அவரின் பெயரால் எனது திருத்தூது ஆசீரை முழு இதயத்துடன் வழங்குகின்றேன்.

தை 06.2011 திருக்காட்சி பெருவிழாவன்று, வத்திக்கானிலிருந்து

*(தேசிய செயலகத்திற்காக :*

*தமிழாக்கம் அருட்பணி.*

*அ.றெ.லொய்ட் சாந்திகுமார் (திருவுளப்பணியாளர் சபை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.110

## 1 சாமுவேல் அதிகாரம் 1 முதல் 16 முடிய

உங்கள் விடைகளை பத்திரிகை உங்கள் கைக்கு கிடைத்து ஒரு வாரத்திற்குள் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ✱ | 06 | | 12 | | | | | 04 | |
| 22 | 30 | | | 25 | 16 | | ✱ | | 20 |
| | 07 | 21 | | | 19 | | ✱ | | |
| | ✱ | | | 08 | | | 27 | | ✱ |
| | 32 | ✱ | | 11 | ✱ | | | | 14 |
| 10 | 26 | | | | | 15 | | 24 | |
| ✱ | | | ✱ | | 18 | ✱ | | | |
| | | 02 | 33 | | | 29 | | | 28 |
| | ✱ | 17 | | 23 | | | 05 | ✱ | |
| 09 | | | | ✱ | 03 | ✱ | 31 | | 13 |

(___என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

3. ........... வானம் வெளுத்தபோதே___வெட்டி வீழ்த்தினர்.
4. அவருடைய ................ மகனின் பெயர் யோவேல்.
6. ஆனால் அவர்களைக் கண்டித்து.................
7. ஒரு படையினர் ஒபிரா வழியாகச் ................ நாட்டிற்குப் பிரிந்து சென்றனர்.
8. தடுமாறினோர் ................ பெறுகின்றனர்.
9. ................ பார்ப்பதுபோல் நான் பார்ப்பதில்லை.
10. பெத்லகேமைச் சார்ந்த ................ டம் உன்னை அனுப்புகிறேன்.
16. ஒன்று போட்சேசு என்றும் மற்றொன்று .................... என்றும் அழைக்கப்பட்டன.
17. பெலிஸ்தியரின் எல்லைக் காவல் ................ கணவாய் வரை நீடித்திருந்தது.
19. நான் உன்னிடம்___வரை.............. நாள்கள் காத்திரு.
27. இவ்வனைத்து___உங்கள்................ நடவடிக்கைகளைப் பற்றிக் கேள்விப்படுகிறேனே.
29. சாமுவேலின்___ஆண்டவரின் ................ பெலிஸ்தியருக்கு எதிராக இருந்து.
30. அங்கே தரையில் ........... காணப்பட்டது.

### வலமிருந்து இடம்

4. சாமுவேலது வார்த்தை எதையும் அவர் ......... விழவிடவில்லை.
5. ஆனால் உமது.............. நிலைக்காது.
7. கலகம் ................ யத்திற்கு நிகரான பாவம்.
13. இந்தத் ............... கடவுளாகிய ஆண்டவர் திருமுன் நிற்கத் தகுந்தவன் யார்?
14. உங்கள் மந்தைகளில் பத்தில் ஒரு ........... எடுத்துக் கொள்வான்.
27. ஆனால் நீங்கள் தொடர்ந்து ................ செய்தால்.___விடுவீர்கள்.
31. அவன் ............... மீட்டுவதில் வல்லவன்.
32. ................. பெத்தாவேனையும் தாண்டி நடந்தது.
33. இதுவரை .............. பூட்டாத___வண்டியில் பூட்டுங்கள்.

### மேலிருந்து கீழ்

4. என் கண்களில் அவனுக்குத் ................ கிடைத்துள்ளது.
11. அதற்கு அவர்கள், "அவரே .............!" என்றார்கள்.
12. ............. இன்னும் கில்காலில் இருந்தார்.
14. அங்கே ஆண்டவருக்கு ஒரு ............. பீடம் எழுப்பினார்.
18. அக்காலத்தில் .............. என்னும்___முற்றுகையிட்டான்.
19. குரு ............... ஆண்டவரின்___அமர்ந்திருந்தார்.
20. .............. கிரியத்து எயாரிமில் பலநாள்கள் தங்கியது.
21. என் ................. என் எதிரிகளைப் பழிக்கின்றது.
22. எனவே .................. அமலேக்கியரிடமிருந்து விலகிச் சென்றனர்.
24. இதன்பின் அவர் .................... வாடியிருக்கவில்லை.
25. அவன் ___ வழியோரம்.................. இருக்கையில் அமர்ந்துக் காத்துக்கொண்டிருந்தார்.
26. .................... நாட்டு வழியே சென்றார்.
28. நான் உள்ளம் நொந்த ஒரு .............

### கீழிருந்து மேல்

1. ஆண்டவர் மீண்டும் ............. தோன்றினார்.
2. ................ பார்வை மங்கியிருந்ததினால் அவரால் பார்க்க முடியவில்லை.
3. பென்யமின் குலத்தில் .............. என்ற___ஒருவர் இருந்தார்.
5. அப்போது மக்கள் அனைவரும் ................ நீடூழிவாழ்க என்று ஆர்ப்பரித்தனர்.
9. ஆண்டவர் அவரை ............... யாக்கியிருந்தார்.
11. ஆனால் உன்___வயதில் ..................
13. ஒரு ............... பாறை வடக்கே___இருந்தன.
15. அப்போது___பள்ளத்தாக்கில் ............... அறுவடைசெய்து கொண்டிருந்தார்கள்.
16. பிறகு, ஏலி, மனநிறைவோடு ................
18. சவுலை அரசனாக்கியதற்காக .................. வருந்துகிறேன்.
21. அந்நகரின் கூக்குரல் ................ மட்டும் எழும்பியது.
23. இஸ்ரயேலின் .................. ஏமாற்றமாட்டார்.
28. சவுலும் இஸ்ரயேலரும் ................ மகிழ்ச்சி அடைந்தார்கள்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 108ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
தேவிகா பத்மராஜா,
மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
அ. கரோலின்,
41,புனித மரியாள் வீதி,
திருகோணமலை.

**மூன்றாம் பரிசு:**
செ. ஆ. டில்ஷான் மொறாய்ஸ்,
1ம் வட்டாரம்,
வங்காலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 20 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 18 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 108ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. S. நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை.
2. S. டெசியா குலாஸ், புனித பவுல் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
3. செ. ஜெசில்டா, ஆயர் இல்லம், பட்டித்தோட்டம், மன்னார்
4. மி. சுஷாந்தினி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
5. டெபோறா மோகன்ராஜ், தபாற்கந்தோர் வீதி, பெற்றா, மன்னார்.
6. ச. தினேஸ் குமார், ஆயர் இல்லம், மன்னார்.
7. அகுஸ்தீன் இசைக்கியேல், யோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
8. குணமணி சேவியர், பெரிய கடை, மன்னார்.
9. செல்வி. செ. குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
10. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலய வீதி, தோட்டவெளி.
11. கமலா கிறிஸ்ரோபர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்,
12. ஞா. அருள், ஆயர் இல்லம், மன்னார்.
13. கென்றீசன் சுகந்தினி, பொன்தீவு கண்டல், முருங்கன்.
14. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்
15. திருமதி. தாமோதரம்பிள்ளை, தபாற் கந்தோர் வீதி, மன்னார்.

## இல.108 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நா | * | க | ல் | கை | வி | டா | தே | யு | ம் |
| * | ன் | * | வ | க் | செ | * | ர் | * | ர |
| ர் | யா | க் | கோ | மி | ன் | ரி | மி | ஒ | ம |
| ள | * | சீ | வ | ம் | உ | எ | த | ர் | * |
| வெ | ற | றி | ச | ந | * | ன் | மை | ரி | நே |
| து | ய | ஏ | மா | ன் | பு | ன் | அ | ர | ண் |
| தி | * | ழை | தா | மை | க | யி | னா | * | க |
| ர் | வ | இ | ன | ஆ | ழ் | தா | கை | வா | ம் |
| ந | தி | * | ம் | ல் | ர | கு | மி | ழி | கு |
| அ | ரு | ட் | பா | வ | ம் | * | கு | க் | சா |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.109ற்கான முடிவுகளை 2011ம் ஆண்டு ஒக்டோபர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## கவிதை நூல் வெளியீட்டு விழா ...16ம் பக்க தொடர்

சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளாரும் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியன் அவர்களும் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினராக மன்னார் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பெப்பி விக்ரர் லெம்பட் அவர்கள் கலந்துகொண்டார்.

நூல் ஆய்வுரையை ஆசிரியர் திரு. த. செபஸ்ரியன் அவர்கள் நிகழ்த்தினார். ஞானோதய இயக்குனர் அருட்திரு. ஜெரோம் லெம்பட், சிவஸ்ரீ எஸ். மனோகரக் குருக்கள், ஜனாப் மக்கள் காதர் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புரை ஆற்றினார்.

அமரர் கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்களின் புதல்வர் அருட்திரு. பீற்றர் மனோகரன் அடிகளார் நூலை வெளியிட்டுவைத்தார். முதல் பிரதியை மன்னார் அரசாங்க அதிபர் பெற்றுக்கொண்டார். இந்நூலை பதிப்பித்த திரு. சுந்தரம் பாண்டியன் அவர்களின் குருபக்தியை, ஆர்வத்தை, முயற்சியை பலரும் பாராட்டினர்.

## மறைமாவட்ட பொதுநிலையினர் ...1ம் பக்க தொடர்

இவர் ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பணிப்பாளராக பணியாற்றிய காலங்களில் திருச்சபைப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. திருச்சபையின் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் உள்ளவர். புதிய பணிப்பொறுப்பை ஏற்றுள்ள திரு. ஜேக்கப் அவர்களுக்கு மறைமாவட்டம சார்பான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

## தொழில் முயற்சியாண்மை .... 3ம் பக்கத் தொடர்

இப்பல்கலைக்கழகத்தில் 2ம் வருட மாணவியாகக் கல்வி பயிலும் இவர் பிரிட்டிஷ் கவுன்சில் அமைப்பினால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் தொழில் முயற்சியாண்மை முகாமைத்துவ விருதுப் போட்டியில் பங்கெடுத்தார்.

வெவ்வேறு பல்கலைக்கழக மாணவர்கள் குழுக்களாகப் பங்கெடுத்த இப்போட்டியில் இவர் தனியாக பங்கெடுத்து இச்சாதனையை நிலைநாட்டியமை குறிப்பிடத்தக்கது. பனை ஓலையைக் கொண்டு மணிக்கூட்டு பார், செருப்பு பார் போன்ற பல பொருட்களை உருவாக்க முடியும் என்பதை இவர் பிரிட்டிஷ் கவுன்சில் நடுவர்களுக்கு முன்னால் செய்முறை மூலம் செய்து விளங்கப்படுத்தினார். நடுவர்களின் தீர்ப்பின் அடிப்படையில் இவருடைய இந்தக் கண்டுபிடிப்புக்கு மேற்படி விருது கிடைத்துள்ளது. இவருடைய சாதனையை மெச்சி மன்னா இவரைப் பாராட்டி மகிழ்கின்றது.

## துறவற அர்ப்பண வாழ்வில் வெள்ளிவிழாக் காணும்
# அருட்சகோதரர் அன்ரனி கிறிஸ்துராஜன்

அருட்சகோதரர் அன்ரனி கிறிஸ்துராஜன் அவர்கள் மன்னார் புதுக்கமம் கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமதி. அந்தோனி அந்தோனியா தம்பதிகளின் ஐந்தாவது புதல்வனாக 1965 மாசி 13ல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை புதுக்கமம் அ. த. க பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை வங்காலை புனித. ஆனாள் மகாவித்தியாலயம், வவுனியா மத்திய கல்லூரி, மன்னார் புனித சவேரியார் கல்லூரி, ஊர்காவற்துறை புனித.அந்தோனியார் கல்லூரியிலும் பயின்றார்.

1982ல் புனித வளனார் துறவற சபையில் சேர்ந்து மட்டக்களப்பில் தனது துறவற கல்வியை மேற்கொண்டு 1986 புரட்டாதி 8ல் தனது முதல் அர்ப்பணத்தைக் கொடுத்து தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்தார்.

பின்னர் கல்முனை, இளவாலை, ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் அர்ப்பணிப்போடு இறைபணியாற்றினார். சிறந்த சேவை மனப்பான்மையும் மனித நேயமும் மிக்க இவர் 1990ல் யாழ் கோட்டை முற்றுகை முறியடிப்பு சமரினால் மிகவும் பாதிக்கப்பட்ட யாழ் காவலூர் மண்ணில் நின்று தனது உயிரையும் பொருட்படுத்தாது அருட்திரு கிருபானந்தன் அடிகளாருடன் இணைந்து செய்த அரும்பெரும் சேவைகளை இன்றும் அந்த மக்கள் நன்றியோடு நினைவுகூர்கின்றார்கள்.

1995ல் இலங்கை ஆசிரியர் சேவையில் இணைந்த இவர், ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரிக்கு வந்தார். காவலூரிலிருந்து இடம்பெயர்ந்து நானும் அப்போது அதே கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். சிறந்த உதைபந்தாட்ட வீரரான இவரை கல்லூரி நிர்வாகம் இனங்கண்டு விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராகவும் நியமித்தது. ஆங்கிலத்தையும் விளையாட்டையும் இரு கண்களாக மதித்த இவர் இரு துறைகளிலும் பெயர் பெற்று விளங்கினார். அதிபர் அருட்திரு சூசைதாசன் அவர்களின் உறுதுணையோடு சிறந்த முறையில் கல்லூரியின் உதைபந்து மற்றும் கிறிகட் அணிகளை வழிநடத்தி இவர் சேவை செய்த 10 ஆண்டுகளில் இரு தடவைகள் கிறிக்கட் அணி அகில இலங்கை ரீதியில் தங்கப்பதக்கங்களையும் 14 தடவைகள் உதைபந்தாட்ட அணிகள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களையும் வென்றெடுக்க வழிசமைத்தது,

2004ம் ஆண்டு உரோமாபுரியிலும், பெல்ஜியத்திலும் தனது மேலதிக ஆன்மீகப்பயிற்சிகளை மேற்கொண்ட இவர், வசதியற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அரும்பணியாற்றினார். இவரது துறவற வாழ்வில் இடைநடுவில் வந்த மாபெரும் தடைச்சுவரை தனது மன உறுதியாலும் இறை துணையோடும் வெற்றிகொண்டு நீதியின்முன் தெளிவுற நிரூபித்து தனது தளராத இறை நம்பிக்கையினை வெளிப்படுத்தினார். தனது துறவற வாழ்வில் நிலைத்துநின்று வெள்ளி விழாக்காணும் இந்த வெள்ளை நிலாவின் துறவற வாழ்வு மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

## செபமாலைக் கன்னியர் ......3ம் பக்க தொடர்

இம்மூன்றாம் மிலேனியத்தில் சபையின் ஆழத்தின் கருவூலங்களைக் கண்டு பயன்கொடுக்க சபையினர் விளைகின்றனர். வல்லமையின் ஆவியார் தியான யோகிகளுக்குரிய புதிய மாற்றங்களை சபையில் ஏற்படுத்த, சபையின் கொள்கைகளை மீளப் புதுப்பிகக்க, அதன் வழியாய் உலகிற்கு பலனளிக்கும் ஊற்றுக்களைக் கண்டுகொள்ள துணை புரிவாராக! புதிய தலைமைத்துவம் சபையில் உருவாகி பயன்பெறத் தூண்டுவாராக!

சபையின் வாழ்விலும், பணியிலும் பங்குபெறும் இறைமக்களாகிய நீங்கள் இச்சபையின் பொதுச் சங்கம் நடைபெறும் இந்நாட்களில் இதன் நோக்கத்தை அடைய சகோதரிகள் வாழ்வையும், பணியையும் இம் 3ம் மிலேனியத்தில் புதுப்பிக்க உங்களின் செப உதவிகளை எதிர்பார்க்கின்றார்கள்.

*செபமாலைக் கன்னியர், துறவற சபை சகோதரிகள்.*

## இலங்கை ஆயர்கள் ..... 3ஆம் பக்கத் தொடர்

அத்தோடு அங்கிருக்கும் இனப்பிரச்சனையை சித்தரிக்கும் காட்சியகங்கள், தேசிய நினைவுச் சின்னங்கள், உள்ளூர் நினைவுச் சின்னங்கள், மக்கள் குடியிருப்புக்கள், பேராலயங்களையும் பார்வையிட்டு விடயங்களை அறிந்துகொண்டார்கள்.

இதன் இறுதியில் தாம் கண்டதையும் கேட்டதையும் ஆழ்ந்து சிந்தித்து, எப்படி எம் நாட்டிலும் பெரும்பான்மை, சிறுபான்மையினர் மத்தியில் நல்லிணக்கத்தை கொண்டுவர முடியும் என்றும் சிந்திக்கவும், செயற்படவும் இப்பயண அனுபவம் வழிசமைத்ததாக இந்தத் தென்னாபிரிக்கப் பயணத்தில் பங்கேற்ற ஆயர்கள் தெரிவித்தனர்.


தென்னாபிரிக்க அனுபவங்கள் மூலம் இலங்கையும் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என பல குரல்கள் ஏற்கனவே எழுந்துள்ள நிலையில் ஆயர்களின் இந்தப்பயணம் முக்கியம் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 03 1968



உதிர்வு 07 09 2007

### இராசையா யோகராஜா.
### (கோவில்குளம், வவுனியா)

குடும்பத்தின் குலவிளக்காய், தாய்க்கு தலைமகனாய் தந்தைக்கு ஆண்மகனாய்,சகோதரர்களின் பாசத்திற்கு உரியவனாய், வீட்டுக்கு விடிவிளக்காய் மழலைச் செல்வத்திற்கு தந்தையாய் உம்மைத் தேடிவருவோரை அரவணைக்கும் பூமகனாய் எம்முன் காட்சி அளித்தவரே! நான்கு ஆண்டுகள் ஆனாலும் எமக்கு நாலு நாளாகவே உள்ளதையா, ஆறாது உம் நினைவு மாறாது உன் எண்ணம். விண்ணகக் கூட்டத்தில் நீரும் வாழ்கவென இறைவனை நாள்தோறும் கண்ணீர்ப் பூக்களால் அபிஷேகம் செய்கின்றோம்.

*உம் துயரால் வாடும் : அம்மா, ஐயா, மகள், மனைவி, சகோதர சகோதரிகள், மாமன்மார், மாமிமார், அன்ரி, மருமக்கள் மற்றும் உற்றார் உறவினர்கள்.*

## 18ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 09 1982



உதிர்வு 31 08 1993

### சுதர்சினி யேசுதாசன்

ஆண்டுகள் பதினெட்டு ஆனாலும், உன் இழப்பை எப்படி நாம் மறப்போம்? எப்படி ஆறுதல் அடைவோம்? காலையில் எம் தோட்டத்தில் பூக்கும் மலர்களைக் காணும்போது அதில் உள்ள அழகிய மலராக நீ மணம் தந்து எம் மனதை தொட்டுச் செல்கின்றாய். நடைபாதையில் என்றும் நீ எம் வழித்துணையாய் நடந்து வருகின்றாய். மாலையில் வீசும் இளம் காற்றில் நீ கலந்து எம்மை இதமாக வருடிச் செல்கின்றாய். இனிய நல்மொழி பேசி, இதயத்தால் அனைவரையும் இணைத்து, ஆற்றல்கள் பல பெற்ற நீ, அன்று, எம்மையெல்லாம் விட்டு, சொல்லாமல் கொள்ளாமல் பட்டென்று பறந்து போனாயே, அழகிய உன்முகம் காண ஏங்குகின்றோம். மீண்டும் நீ எம்மிடம் வாராயோ?

*உன் பிரிவினை நினைந்து உருகும் :*
*அம்மா, அப்பா, தம்பி, உறவுகள்.*

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி — 3ம் ஆண்டு நினைவஞ்சலி



**சவிரி சந்தியோகுப்பிள்ளை இராஜதுரை** — **திருமதி. திரேசம்மா இராஜதுரை**

(பாலைக்குளி, அடம்பன்.)

மலர்வு 25-12-1921 — மலர்வு 20-05-1933
உதிர்வு 02-09-2006 — உதிர்வு 10-09-2008

அன்பான பெற்றோரே! நீங்கள் இறைபதமெய்தி ஆண்டுகள் சில கடந்தாலும் உங்களை எப்படி நாம் மறப்போம்? உங்களின் அன்பை யார் எமக்கு ஈடுசெய்வார்? எமது மகிழ்வின் நற் செய்திகளை பகிர்ந்துகொள்ள பக்கத்தில் நீங்கள் இல்லையே. அன்போடு எமை அணைத்து நானிலத்தில் நலமாய் வாழ வழிசெய்தீர். உங்களின் இனிய நல் நினைவுகள் இதயத்தில் என்றும் நிறைந்துள்ளது. உங்கள் பிரிவுத் துயர், உள்ளத்தில் உயர்ந்து எழுகின்றது. பிறப்பவர் எல்லாம் இறப்பது நியதி, எனினும் உங்கள் பிரிவுத்துயர் நெஞ்சமதில் நீங்காது நிற்கின்றது.

பிரிவால் துயருறும் :
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 03 1934



உதிர்வு 26 09 2010

### அமரர். க. மரியான் டயஸ் (மாணிக்கம்)
### வங்காலை

*ஓய்வுபெற்ற காணி வெளிக்களப் போதனாசிரியர்*
*(கச்சேரி - மன்னார்)*

"இன்பராய் ஈற்றிலே
மோட்சக் கரையினில்
நாம் சந்திப்போம்"
கனமான உங்கள்
நினைவுகளோடு......

*அன்பு மனைவி*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*

*தகவல் :*
*பிறின்ஸ் டயஸ் (ஆசிரியர் ஆலோசகர்) - மகன்*

## 31ம் நாள் கண்ணீர் அஞ்சலி

மலர்வு 22 12 1922



உதிர்வு 27 09 2011

### மனுவேல் சத்தியசீலன் (விடத்தல்தீவு)

**"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம்**
**ஆண்டவருக்கே உரியவர்கள்" (உரோமர் 14:8)**

*பிரிவால் துயருறும் : மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 01 1954



உதிர்வு 12 09 2006

### திரு. சோமஸ்கந்தன் அன்ரன் சோமராஜா

(ஓய்வுபெற்ற ரெலிகொம் உத்தியோகஸ்தர்)
சின்னப்புதுக்குளம், வவுனியா.

"நாம் இருந்தாலும் இறந்தாலும்
அவரோடு இணைந்து
வாழும் வண்ணம் அவர்
நம் பொருட்டு இறந்தார்"

ஐந்தாண்டு போனதப்பா எம்மைவிட்டுப் பிரிந்து
ஆளுக்கொருபக்கமாக தனிமையில் வாடுகின்றோம்.
உன் ஆன்ம சாந்திக்காக
அனுதினமும் வேண்டுகின்றோம்.
ஆண்டவனில் அமைதியடைய
அருள்வாய் இறைவா.

உம் பிரிவால் வாடும் :
அன்பு மனைவி,
மகள், உற்றார்,
உறவினர்.

## மன்னாரில் ஆசிரிய .....

3ம் பக்கம் தொடர்ச்சி

இப்பயிற்சிக்கல்லூரியின் திறப்பு விழாவில் பங்கேற்பதற்காக வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சருமான அல்ஹாஜ் றிஷாட் பதியூதீன் அவர்களும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி அவர்களும் மன்னாருக்கு வருகை தந்திருந்தனர்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமது பயிற்சிகளை முன்னெடுத்துவந்த மன்னார் மற்றும் புத்தளம் மாவட்டங்களின் ஆசிரிய மாணவர்கள் தற்போது மன்னாரில் நிறுவப்பட்டிருக்கும் இந்த ஆசிரியர் பயிற்சி கல்லூரியிலே கற்றுவருகின்றனர்.

மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் எம். ஏ. றெவ்வல், அமைச்சர் றிஷாட் பதியூதீன், வடமாகாண ஆணையாளர் டீன் ஆகியோரின் கூட்டுமுயற்சியினாலேயே இந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வடமாகாண ஆளுநர் தெரிவித்தார்.

விசேட பாடநெறியாக தமிழ் மொழியும் சமூக விஞ்ஞானமும் தற்போது கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் மாணவர்களின் தேவை கருதி ஏனைய பாடங்களும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னா



மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம்

## 'கலையருவி' நடத்திய கவிஞர் செபமாலை மொத்தம் போல் கவிதைகள் கவிதை நூல் வெளியீட்டு விழா

மன்னார் மாவட்டம் நறுவிலிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த அமரர் கவிஞர் செபமாலை மொத்தம் போல் (அதிபர் சித்த மருத்துவர்) அவர்களின் கவிதைகளை அவருடைய மாணவரான ஆசிரியர் திரு. மு. சுந்தரம் பாண்டியன் அவர்கள் "கவிஞர் செபமாலை மொத்தம் போல் கவிதைகள்" என்ற பெயரில் நூலாகப் பதிப்பித்துள்ளார். இந்நூல் வெளியீட்டு விழா கடந்த ஆவணி மாதம் 26ம் திகதி காலை பத்து மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனரும் மன்னா பத்திரிகை ஆசிரியரும் மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவருமான அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் இந்நிகழ்விற்கு தலைமை தாங்கினார். பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் முன்னிலை வகித்தார். மன்னார் பிரதேச செயலகத்தின் நிர்வாக அலுவலர் திரு அ. மரியதாஸ் (மன்னார் மணி) அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். முதன்மை விருந்தினராக மன்னார் அரசாங்க அதிபர் திரு. என். வேதநாயகன் அவர்கள் கலந்துகொண்டார். (தொடர்ச்சி 14ம் பக்கம்)

### கவிதை நூல் வெளியீட்டு விழா நிகழ்வின் நிழல்கள்







திரு. சுந்தரம் பாண்டியன்



பேராசிரியர் அ. சண்முகதாஸ்



அருட்திரு. தமிழ் நேசன்



திரு. எஸ். ஏ. பெனாண்டோ (ராதா)



சிவஸ்ரீ எஸ். மனோகரக் குருக்கள்



அருட்திரு. ஜெரோம் லெம்பேட்



அருட்திரு பீற்றர் மனோகரன் முதற் பிரதியை அரசாங்க அதிபருக்கு வழங்குகிறார்.



ஜனாப் மக்கள் காதர்













மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம்

## 'கலையருவி' ஏற்பாடு செய்த உலகத் தமிழ் அறிஞர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை 2011





நினைவுப் பேருரையை தென்னிந்தியத் திருச்சபை யாழ் ஆதீனத்தின் முன்னாள் பேராயர் மேதகு கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் வழங்கினார். மன்னார் பிரதேச செயலாளர் திருமதி. ஸ்ரான்டி டி மெல் அவர்கள் தனிநாயகம் அடிகளாரின் திரு உருவப் படத்திற்கு விளக்கேற்றினார். மன்னார் நகரபிதா திரு. எஸ். ஞானபிரகாசம் மாலை அணிவித்தார்.

மன்னார் மறைமாவட்ட அருட்பணி மையம் 'கலையருவி' ஏற்பாடு செய்த உலகத் தமிழ் அறிஞர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை 2011 நிகழ்வு கடந்த ஆவணி மாதம் 2ம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனரும் மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தலைமை தாங்கினார். மன்னார் அரசாங்க அதிபர் திரு. வேதநாயகன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

## திருமண பந்தத்தில் இணைந்த மன்னா பணியாளர் டெவ்லினுக்கு நல்வாழ்த்துக்கள் !



மன்னா பத்திரிகை பணியகத்தில் பணியாற்றிவரும் டெவ்லின் அவர்கள் கடந்த 31.08.2011 அன்று திருமணவாழ்வில் இணைந்தார். இவரையும் இவரது அன்புக் கணவர் கியோமர் சுரேஸ் அவர்களையும் மன்னா பத்திரிகைப் பணியகம் வாழ்த்தி மகிழ்கின்றது. இவர்கள் ஆரம்பித்துள்ள இல்வாழ்வுப் பயணம் நல்வாழ்வுப் பயணமாக அமைய இறையாசீர் வேண்டி நிற்கின்றோம்.

- மன்னா பத்திரிகை நிர்வாகம் -

## துறவற அர்ப்பண வாழ்வில் வெள்ளி விழா



அன்புச்சகோதரர் சபையைச் சார்ந்த அருட்சகோதரர் அன்ரனி கிறிஸ்துராஜன்

"நேர்மையோடும் தூய்மையோடும் வாழ்நாளெல்லாம் அச்சமின்றி அவர் திருமுன் பணி செய்யுமாறு வழிவகுத்தார்" எனும் வேத வாக்குக்கிணங்க தனது வாழ்வை இறைவனுக்காக அர்ப்பணித்து அவர் திராட்சைத்தோட்டத்தில் 25 ஆண்டுகள் பணி செய்து இன்று வெள்ளி விழாக்காணும் அருட்சகோதரர் அன்ரனி கிறிஸ்துராஜன் அவர்களை அன்போடு வாழ்த்துகின்றோம். (அருட்சகோதரர் பற்றிய விரிவான தகவல்களை 14ம் பக்கம் பார்க்கவும்.)

தகவல் : ஏ. நிறஞ்சன்,
பழைய மாணவன், புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 06 03 1979 — உதிர்வு 21 09 2010



**P.J. எயிலின் அலெக்சியா பெரேரா**

பள்ளிமுனை, மன்னார்.

ஆண்டு ஒன்று கடந்தாலும் உன் இழப்பை
எப்படி நாம் மறப்போம்? இத்தரையில்
காலையில் மலரும் மலர்களை காணும்போது
அதில் உள்ள அழகிய மலராக நீ மணம் வீசுகிறாய்.
நடைபாதையில் என்றும் நீ எமது
வழித்துணையாய் நாளும் நடந்து வருகிறாய்.
மாலையில் வீசும் இளம்காற்றில் நீ கலந்து,
எம்மை இதமாக வருடிச் செல்கிறாய்.
வானத்தில் வட்டமிட்டு மின்னிடும் விண்மீன்களில்
வண்ணமாய் நீதான் கண்சிமிட்டுகிறாய்.
இனியநல் மொழிபேசி அனைவரையும் இணைத்த நீ
சொல்லாமல் கொள்ளாமல் பட்டென்று பறந்தாயே!
அழகிய உன் முகம் காண ஏங்குகின்றோம்.
இறைவனிடம் உனக்காய் வேண்டுகிறோம்.

பிரிவால் வாடும் : தந்தை, தாய், கணவன்,
[illegible], சகோதரிகள், மச்சான்,
மாமிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

### 5ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 10 1923 — உதிர்வு 25 10 2006



**பேதுரு சவிரியம்மா லோகு**

மங்காத புகழ் விளங்கும் மன்னார் பதியினிலே
எங்கள் குடும்பத்தின் சீர்மிகு தலைவியாய் உதித்தவரே
அன்பான அம்மாவே அன்புக்கோர் இலக்கணமே
ஈர்மூன்று மாதங்களாய் இத்தரையில் நாமெல்லாம்
இன்பமுடன் வாழ்வதற்கு வழிகாட்டி ஒளியேற்றினீர்கள்.
உடலொறுத்து உரமிட்டீர்கள் எம் குடும்பம் தளைத்திட
ஊக்கமுடன் எமை வளர்த்து ஊரறிய வாழ வைத்தீர்கள்.
எண்ண முடியவில்லை எமைப் பிரிந்த நாளதனை
மரியன்னை எமக்கு ஆறுதலாய் இருக்கின்றார்.
அம்மா நீங்கள் மரியன்னையின் மறுஉருவம்தானே
நீங்கள் மாதாவை வேண்டாத நாளில்லை,
மரியாயின் சேனைத் தலைவியும் நீங்கள்தான்.
மாதா புகழ் பரப்பி மங்கா ஒளியேற்றினீர்கள்.
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் உங்களுக்காய்!

பிரிவால் துயருறும் :
பாசமுள்ள குடும்ப அங்கத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் பிரதான வீதி 17ம் இலக்கத்திலுள்ள கறிற்றாஸ் – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.